## வகுப்பு VII

# சமூக அறிவியல்

## பகுதி 2

Social Science
Standard VII
Part - 2
Tamil Medium

கேரளா அரசு
கல்வித்துறை

தயாரிப்பு
மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT), கேரளம்
2016

KT 605-1/Social Science -7(T) Vol-2

## தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப  சிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காகே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே! ஜய ஹே! ஜய ஹே!
ஜய ஜய ஜய ஜய ஹே!

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## உறுதிமொழி

இந்தியா எனது நாடு. இந்தியர் அனைவரும் எனது உடன் பிறந்தோர்.

எனது நாட்டை நான் உயிரினும் மேலாக மதிக்கிறேன். அதன் வளம் வாய்ந்த பல்வகைப் பரம்பரைப் புகழில் நான் பெருமை கொள்கிறேன். அதற்குத்தக நான் என்றும் நடந்துகொள்வேன்.
என் பெற்றோர், ஆசிரியர், மூத்தோர் இவர்களை நான் நன்கு மதிப்பேன்.
எல்லாருடனும் நான் பண்புடன் பழகுவேன். எனது நாட்டினிடமும் நாட்டு மக்களிடமும் பக்தியுடன் இருப்பேன் என உறுதி கூறுகிறேன். அவர்களின் நலத்திலும் வளத்திலும் தான் எனது இன்பமும் அடங்கியிருக்கிறது.

*Prepared by*
**State Council of Educational Research and Training (SCERT)**
Poojappura, Thiruvananthapuram 695 012, Kerala

*Website* : www.scertkerala.gov.in
*E-mail* : scertkerala@gmail.com
Phone : 0471-2341883, Fax : 0471-2341869
Typesetting and Layout : SCERT
First Edition : 2014, Reprint : 2016
Printed at : KBPS, Kakkanad, Kochi-30
© Department of Education, Government of Kerala

அன்பான குழந்தைகளே,

நாம் ஒவ்வொருவரும் இந்தச் சமூகத்தின் உறுப்பினர்களல்லவா? சமூகத்தில் காணலாகும் நன்மைகளை உள்வாங்கியும் தீமைகளுக்கு எதிராகக் குரல்கொடுத்தும் வாழவேண்டியது நமது கடைமை. நாம் இன்று பயன்படுத்திக் கொண்டிருக்கும் வளமான பண்பாடும் வசதிகளும் நமது முன்னோர்களின் நன்கொடைகளாகும். அவர்களின் தியாக மனப்பான்மையையும் செயல்பாடுகளையும் ஆதரிப்பதோடு மட்டுமல்லாமல் அவற்றை வரும் தலைமுறையினருக்காகப் பாதுகாக்கவும் வேண்டும்.

மனிதர்களுக்கும் இயற்கைக்குமிடையேயான உறவுதான் நம்மை வாழவைத்துக் கொண்டிருக்கிறது. எனவே, நமது இயற்கையைப் பாதுகாத்து, அதனை வரும் தலைமுறையினருக்கும் உரிமையானது என்ற எண்ணத்துடன் பயன்படுத்துவோம். ஒரு ஜனநாயக நாட்டின் உறுப்பினர்கள் என்ற நிலையில் நாம் நமது உரிமைகளைப் பயன் படுத்தவும் கடமைகளை நிறைவேற்றவும் முயற்சி செய்யவேண்டும். இதுபோன்ற அகவுணர்வுகளுடன் செயல்படுவதற்குச் சமூக அறிவியல் கல்வி உதவிசெய்கிறது. தேவையான அறிவைப் பெறுவதற்கும் கண்டுபிடிப்பதற்கும் வெளிப்படுத்துவதற்கும் இப்புத்தகம் உதவி புரியும் என்று நம்புகிறேன்.

வாழ்த்துகளுடன்,

**முனைவர் ஜெ. பிரசாத்,**
இயக்குநர்
எஸ்.சி.இ.ஆர்.டி

# Text Book Committee

## Participants

**Dr. Babukuttan. P**
Sr.Lect., DIET. Kollam.

**Vijayakumar. C.R**
HSST.Geography, GHSS, Mithrumala.

**Vilfred John.S**
HSST, Geography, MGHSS, Kaniyapuram.

**Jayakumar. K**
HSA.NSSHS, Palode.

**Mohanan.V.P**
HSA, Chothavoor, HSS,Champadu.

**Abubekkar Sidhique.K**
PD Teacher, GUPS, Veembur, Manjeri.

**K.J.Shirly**
UPSA, GBSS, Karamana.

**Seena Mol.M.M**
HSS, Thonnaikkal.

**Jamal.K**
RACHSS, Kadamary P.O., Valiapalli.

**Ajayakumar.N**
BPO, BRC,Hosthurg.

**Somanathan.C.V**
Thirichamparam, UPS, Thalipparambu.

**Paradheepan.T**
HSST, History, GHSS, Kallachi.

**Manoj.K.V.**
HSST, Political Science, GGHSS, Kumaranalloor.

**P.M.Mohammad Musthafa**
Lect., DIET, Palakkad.

**Abdul Azees.V.P**
HSST, History, VPKMMSSS, Puthoor, Pallickal.

**Dr.N.Kala**
Reserve Officer, SCERT.

**P.V. Hussain**
OHSS, Tirurangadi.

**H.A. Salim**
UPSA, GHSS Poruvazhi, Sooranad

## Experts

**Manoj Kumar .P.S**
Head Department of History
KKTM College, Kodungalloor, Thrissur.

**Dr.VenuMohan**
Associate Professor, Dept.of History,
Govt College, Nedumangadu.

**Dr.Abdul Rasak.P.P.**
Associate Professor, Dept.of History,
PSMO College, Thirurangadi.

**I.P. Joseph**
Asst. Professor (Rtd.,), SCERT.

**Dr.Priyesh.M**
Associate Professor, Dept.of Economics,
University College, Thiruvananthapuram.

**Mahalingam.S**
Associate Professor (Rtd.,), Dept.of
Geography,
Govt College, Chittur.

**Dr.N.A.Haffis Muhammed**
Head, Dept.of Sociology (Rtd.,)
Farook College, Kozhikode.

## Accademic Co-ordinators

**Chithra madhavan**, Research Officer SCERT.

## Tamil Version

**Dr. Nisha Rafi,** Asst. Prof., Dept. of Tamil, University College, Tvpm.
**S.Padamakumar,** HSA, Govt. H.S. Koovakkadu. Kollam.
**G.Mohana Doss,** UPSA, Govt.U.P.S. Vandiperiyar. Idukki.
**M.H. Ajiprakash,** UPSA, Govt. H.S. Koovakkadu. Kollam.

## Academic Co - Ordinator

**Dr. Sahaya Dhas D**, Research Officer, SCERT

மாநிலக் கல்வியாராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (SCERT)
வித்யா பவன், பூஜப்புரை, திருவனந்தபுரம்–695 012

# உள்ளடக்கம்


8. நவீன கேரளம் உருவாக்க ........................................ 91

9. காந்தியடிகளும் விடுதலைப் போராட்டமும் ... 101

10. நமது அரசியலமைப்பு ............................................ 120

11. தனிநபரும் சமூகமும் ................................................ 132


12. சூரியவெப்பமும் வளிமண்டல நிலையும் ........ 142

13. இந்தியாவின் உள்ளே ................................................ 150




இந்தப் புத்தகத்தில் நம் வசதிக்காகச் சில அடையாளங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன


கூடுதல் வாசிப்பிற்கு
(மதிப்பிட வேண்டியதில்லை)


கற்றல் வளர்ச்சியை உறுதி செய்யும் வினாக்கள்


தொகுப்பு


முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை


மதிப்பிடலாம்


தொடர் செயல்பாடுகள்



# 4 நவீன கேரளம் உருவாக்க...



*தொடக்கூடாதவர்கள், தீண்டத்தகாதோர்,*
*கண்ணில் பட்டாலே பாவம் என்று ஒதுக்கப்பட்டோர்,*
*மணம்புரிய முடியாதோர், ஒன்றாக உணவுண்ண*
*முடியாதோர் என்று கொஞ்சமல்லவே ஜாதிப்*
*பிரிவினைகள்!*

மகாகவி குமாரனாசானின் ''துர் அவஸ்தை'' என்ற கவிதையின் சில அடிகள் மேலே கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த அடிகளிலிருந்து அன்றைய கேரளத்தின் சமூக நிலையைப் பற்றி என்னென்ன விஷயங்களைப் புரிந்துகொள்ள முடிகிறது?

என்னென்ன மூடப்பழக்க வழக்கங்கள் கேரள சமூகத்தில் முன் காலங்களில் நிலவியிருந்தன?

- ஜாதி வேற்றுமை
- 
- குழந்தைத் திருமணம்
- 

ஜாதி அமைப்புகளுடன் தொடர்பு கொண்ட ஏராளமான சமூகத் தீமைகளும் உரிமை மறுப்புகளும் சுரண்டல்களும் கேரளத்தில் நிலைபெற்றிருந்தன. ஆடை, தொழில், வீடு, மொழி, பெயர் முதலான பல நிலைகளில் வேறுபாட்டைக் காண முடிந்தது. மட்டுமின்றி, பெண்களுக்குச் சம உரிமை இல்லாமல் இருந்தது. இவ்வாறான சமூக நிலைமை இருந்ததால் தான் விவேகானந்தர் கேரளத்தைப் பைத்தியங்களின் நாடு என்று கூறினார்.

- உங்கள் பகுதிகளில் இது போன்ற மூடப் பழக்கவழக்கங்கள் இருந்தனவா? முதியவர்களுடன் கேட்டுத் தகவல்களைச் சேகரிக்கவும்.

இந்தியாவின் பிற பகுதிகளில் நிலவியிருந்த இது போன்ற பழக்கவழக்கங்களும் அவற்றிற்கு எதிராகத் தோன்றிய சமூகச் சீர்திருத்த இயக்கங்களும் பற்றி முன் அலகுகளில் கலந்துரையாடியதை நினைவுகூர்வீர்கள் அல்லவா?

இதே காலஅளவில் கேரளத்திலும் ஏராளமான சமூக சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின. அது போன்ற முன்னேற்றங்களுக்குத் தலைமை வகித்தவர்களைப் பற்றியும் அவர்களின் செயல்பாடுகளைப் பற்றியும் நமக்குக் கலந்துரையாடலாம்.

## தீண்டாமைக்கெதிரான கிணறுகள்

கேரளத்தின் முன்கால சமூக சீர்திருத்தவாதிகளில் ஒருவரே வைகுண்ட சுவாமிகள். இவர் கன்னியா குமரிக்கு அருகிலுள்ள சாஸ்தாங்கோயிலில் பிறந்தவர்.

உயர்ந்த ஜாதியினர் பயன்படுத்தும் கிணறுகளிலிருந்து தண்ணீர் எடுப்பதற்குத் தாழ்த்தப்பட்டவர் எனப்படும் ஜாதிக்காரர்களுக்கு உரிமை இல்லாமல் இருந்த ஒரு கால கட்டத்தில் எல்லா ஜாதியினரும் தண்ணீர் எடுப்பதற்குப் பொதுக் கிணறுகள் வெட்டித் தீண்டாமை என்ற தீய வழக்கத்திற்கு வைகுண்ட சுவாமிகள் சவால் விடுத்தார்.



வைகுண்டசுவாமிகள்

உணவுப் பொருட்களான அரிசி, பாசிப்பயறு, காய்கறிகள் போன்றவற்றைச் சேகரித்துச் சமைத்து உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேறுபாடின்றி ஒரே பந்தியில் அமர்ந்து உணவுஉண்ணும் சமபந்தி போஜனத்தை நடைமுறைப்படுத்தினார். மேலும் அவர்,

- மேலாடை அணிவதைத் தடைசெய்வதற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.
- ஆலயங்களில் நுழைவதற்கான தடைக்கு எதிராகக் குரல் கொடுத்தார்.
- இதுபோன்ற சமூகச் சீர்திருத்தச் செயல்பாடுகளுக்காக சமத்துவ சமாஜம் என்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

திருவிதாங்கூரில் தாழ்ந்த இனத்தில் பட்ட சாணார் பெண்களுக்கு முழங்காலுக்குக் கீழ் வரை வேட்டி உடுத்தவும் மேலாடை அணிவதற்கான உரிமைக்காகவும் நடந்த சாணார் போராட்டத்திற்கு சுவாமிகளின் செயல்பாடுகள் ஊக்கம் அளித்தன. வேலை செய்தால் கூலி கிடைக்க வேண்டும் என்ற சுவாமிகளின் கொள்கையும் மக்களைக் கவர்ந்தன. பிரிட்டீஷ் ஆட்சியின் மீதுள்ள எதிர்ப்பை அவர் வெள்ளையரின் கொடுங்கோல் ஆட்சி என்று வெளிப்படுத்தினார்.

## கல்வியும்பயிற்சியும்

ஜாதி மத இன வேறுபாட்டிற்கு எதிராக மனித சமூகத்தின் நன்மையையும் மேன்மையையும் நோக்கமாகக்கொண்டு செயல்பட்ட மனித நேயமிக்க வராக விளங்கியவர் சட்டம்பி சுவாமிகள். இவர் திருவனந்தபுரத்திலுள்ள கண்ணம்மூலையில் பிறந்தவர்.


சட்டம்பி சுவாமிகள்

தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஆலயங்களில் நுழையவும் சுதந்திரமாக நடக்கவும் உரிமை வழங்கவேண்டும் என்று சட்டம்பி சுவாமிகள் வாதாடி னார். தாழ்த்தப்பட்டவர்களுடன் சமபந்தி போஜனம் நடத்திய சுவாமிகள் அவர்களுடைய சமூக முன்னேற்றத்திற்காகச் செயல்பட்டார். சமூகத்தில் நிலைபெற்றிருந்த பிராமண ஆதிக் கத்தைச் சட்டம்பி சுவாமிகள் வன்மையாக எதிர்த்தார். சமூக சீர்திருத்தச் செயல் பாடுகளில் எல்லாப் பிரிவினரோடும் இணைந்து செயல் பட்டார். உபநிடதங் களிலும் வேதங்களிலும் ஆழ்ந்த அறிவு பெற்றிருந்தார். `வேதாதிகார நிரூபணம்,` `பிராசீன மலையாளம்` என்பவை அவர் எழுதிய முக்கிய நூல்களாகும். கல்வியும் பயிற்சியும் இருந்தால் மட்டுமே மனித முன்னேற் றம் ஏற்படும் என்று அவர் நம்பினார். ஜாதி மதச் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டவையாக இருந்தன அவருடைய நோக்கங்கள். கொல்லம் மாவட்டத்தி லுள்ள பன்மனை என்ற இடத்தில் சமாதி அடைந் தார்.



### சட்டம்பி சுவாமிகள்

சட்டம்பி சுவாமிகளின் இயற்பெயர் அய்யப் பன் என்பதாகும். குருகுலக் கல்வி கற்கும் போது வகுப்பறைக் கட்டுப்பாடுகளுக்கான விதிமுறைகளைச் செயல்படுத்தும் பொறுப் பைக் குரு அய்யப்பனிடம் கொடுத்தார். விதிமுறை களைச் செயல்படுத்தும் பொறுப்புள்ள நபர் என்ற பொருளில்தான் சட்டம்பி என்ற பெயர் வந்தது. அவ்வாறுதான் அய்யப்பன் பின்னா ளில் சட்டம்பி சுவாமிகள் என்று அறியப்பட் டார்.

## கல்வியால் பெருமை பெறுங்கள்

*'ஒரு ஜாதி ஒரு மதம் ஒரு தெய்வம் மனிதனுக்கு'*

*'மதம் எதுவாக இருந்தாலும் மனிதன் நன்றாக வேண்டும்'*


*'கல்வியால் பெருமை பெறுங்கள், ஒற்றுமையால் சக்தி பெறுங்கள்'*

*'மனிதனின் வேடம், மொழி, மதம் இவை வேறுபட்டிருந்தாலும் அவர்களின் ஜாதி ஒன்றாக இருப்பதால் அன்னியோன்னியமாகத் திருமணம் செய்வதிலும் சமபந்தி போஜனம் கொள்வதிலும் எந்தவிதத் தவறும் இல்லை.'*

கேரளத்தின் சமூக சீர்திருத்தவாதிகளில் முக்கியமானவரான ஸ்ரீநாராயணகுருவின் முக்கியக் கொள்கைகளே மேலே கூறப்பட்டவை.

ஜாதி வேறுபாட்டை ஒழிப்பது என்பதே குருவின் செயல்பாடுகளின் முக்கிய நோக்கமாக இருந்தது. அனைத்து மதச் சகோதரத்துவத்திற்காக அவர் மிகவும் முயற்சி செய்தார். ஆலுவாயில் அவர் கூட்டிய அனைத்துமத மகாநாட்டின் வாயிலில் கீழ்க்கண்டவாறு எழுதி வைத்தார்.

வாதம் செய்வதற்கும், வெற்றி பெறுவதற்கும் அல்ல; தெரிந்து கொள்ளவும், தெரிவிக்கவுமே இந்த மாநாடு.'



ஸ்ரீநாராயண குரு

'மனித நேயமே மனிதனின் ஜாதி' என்னும் குருவின் அறிவிப்பு கேரள சமூகத்தில் புதிய மாற்றங்களை ஏற்படுத்தியது. ஒரு மேம்பட்ட சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதே குருவின் நோக்கமாக இருந்தது.

தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக முன்னேற்றம் என்பது இதுபோன்ற கருத்துகளின் மூலம் பெறக்கூடிய ஒன்றல்ல என்பது குருவுக்கு நன்கு தெரியும். வறுமை ஒழிப்பின் மூலம் சமூக முன்னேற்றத்திற்குக் குரு முயற்சி செய்தார். தொழிற்சாலைகள் நிறுவி மக்களுக்கு வேலை கொடுங்கள் என்று உபதேசித்தார்.

அக்காலத்தில் இருந்த புளிகுடி, பூப்புனித நீராட்டு, தாலிகெட்டுக் கல்யாணம் போன்ற தேவையற்ற ஆசாரங்களுக்கு எதிராக அவர் மக்களிடையே விழிப்புணர்ச்சி ஏற்படுத்தினார். ஆடம்பரங்களையும் எல்லை மீறிய வாழ்க்கையையும் மாற்றி எளிய வாழ்க்கை வாழ்வதற்கு உபதேசித்தார். குருவின் அறிவுரைகளைப் பரப்புவதற்கும் செயல்படுத்துவதற்கும் 1903-இல் நிறுவப்பட்டதே ஸ்ரீநாராயண தர்ம பரிபாலன யோகம்.

திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள செம்பழந்தியில் ஸ்ரீநாராயண குரு பிறந்தார்.

ஆத்ம உபதேச சதகம், தர்சன மாலை, தெய்வ தசகம் போன்றவை குரு எழுதிய பிரபல நூல்களாகும்.

சமூகச் சீரமைப்புத் துறையில் குருவின் நன்கொடைகள், ரவீந்திரநாத தாகூர், மகாத்மா காந்தி போன்றவர்களின் பாராட்டுக்கு உரியதாக இருந்தன.



### பள்ளிக்கூடம் - முக்கிய ஆலயம்

ஸ்ரீநாராயணகுரு நடத்திய கோவில் பிரதிஷ்டைகள் ஜாதி வேறுபாட்டின் அடிமட்டத்தையே ஆட்டம் காணச் செய்தது. அருவிப்புரம் சிவலிங்கப் பிரதிஷ்டை, காரமுக்கு ஆலயத் தில் தீபப்பிரதிஷ்டை, சிவகிரியில் சாரதாப் பிரதிஷ்டை போன்றவை அவற்றுள் முக்கியமானவை. ஆலப்புழை மாவட்டத்திலுள்ள களவன்கோடத்தில்தான் குரு கடைசி யாக பிரதிஷ்டை நடத்தினார். **ஓம்** என்றெழுதிய கண்ணாடியே அங்கு பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஆல யங்களுக்குரிய முக்கியத்துவத்தைப் பள்ளிக்கூடங்களுக் கும் அளித்த குரு கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டார். இனி ஆலயங்கள் கட்டத் தேவையில்லை. பள்ளிக்கூடங்களைக் கட்டுங்கள். அதுவே மக்களின் தேவை. முக்கிய ஆலயங் கள் என்பது பள்ளிக்கூடங்களாக இருக்கவேண்டும்.

## கல்வி சமூக முதலீடு


அய்யங்காளி

தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத்திற்காக முயற்சி செய்த ஒரு சமூக சீர்திருத்தவாதி அய்யங்காளி. சமூக ஏற்றத்தாழ்வுகளை நிவர்த்தி செய்யவும், தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை மேம்படுத்துவதற்குமான ஒரு முதலீடு கல்வி என்பதை அய்யங்காளி புரிந்துகொண்டார். 1904-இல் அவர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக மட்டும் ஒரு பள்ளிக் கூடத்தை ஆரம்பித்தார். திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள வெங்கானூரில் இவர் பிறந்தார்.

''எங்களுடைய குழந்தைகளுக்குக் கல்விகற்கும் வாய்ப்பைத் தராவிட்டால் காணும் வயல்களில் எல்லாம் களைகள் தான் நிறைந்திருக்கும்'' இது தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்குக் கல்வி மறுக்கப்பட்டபோது அய்யங்காளி கூறிய கூற்று.

திருவனந்தபுரம் மாவட்டத்தில் உள்ள வெங்கானூரில் இவர் பிறந்தார். சமூகச் சீர்திருத்தச் செயல்களுக்காக அவர் நிறுவிய சங்கமே சாதுஜன பரிபாலன சங்கம்.

ஒடுக்கப்பட்ட ஜாதிக்காரர்கள் பொது வழிகளில் நடந்து செல்வதற்கான சுதந்திரமும், தாழ்த்தப்பட்ட இனத்திலுள்ள குழந்தைகளுக்குப் பள்ளிகளில் அனுமதி, வேலை செய்பவர்களுக்கு ஊதியத்தை அதிகரித்தல் போன்றனவும் இந்தச் சங்கத்தின் நோக்கங்களாக இருந்தன. தாழ்த்தப்பட்ட இனத்தவரின் தலைவர் என்ற நிலையில் முக்கியமானவரான அய்யங்காளி ஸ்ரீமூலம்பிரஜா சபையில் உறுப்பினரானார். அய்யங்காளியின் செயல்பாடுகளைக் காந்திஜி பாராட்டினார்.



### வில் வண்டியில் வரலாற்றுப் பயணம்

1893-இல் வெங்கானூரில் பொது வழியில் ஒரு வில் வண்டியில் பயணம் செய்து அதன் மூலம் சமூக மறுப்புகளை அய்யங்காளி எதிர்த்தார். தாழ்த்தப்பட்டவர்களின் பொதுவழி நடத்தல் சுதந்திரத்திற்கு தொடக்கமிட்ட அய்யங்காளி திருவிதாங்கூரின் முக்கியத் தெருக்களில் வில் வண்டியில் பயணம் செய்து சரித்திரம் படைத்தார்.



### கல்மாலைப் போராட்டம்

தாழ்த்தப்பட்ட இனத்திலுள்ள பெண்கள் கல்மாலை ஆபரணங்கள் அணிபவராக இருந்தார்கள். தாழ்மையின் சின்னமான கல்மாலைகளைத் தூக்கி எறியுமாறு அவர்களிடம் அய்யங்காளி கேட்டுக் கொண்டார். அவ்வாறு அவர்கள் எறிந்த கல்மாலைகள் நாலைந்து அடி உயரத்திற்குக் குவிந்தன.



அய்யங்காளியின் செயல்பாடுகள் சமூக மாற்றத்திற்கு எந்த அளவிற்கு உதவியாக இருந்தன? மதிப்பீடு செய்யுங்கள்.

## மாற்றங்கள் எழுத்துக்களின் மூலம்



வக்கம் அப்துல் காதர் மௌலவி

'செல்வந்தர்கள் ஏழைகளுக்குக் கல்வி அளிப்பதற்கான செலவை ஏற்றுக்கொள்ளவும் அவர்களுக்கு உயர்ந்த கல்வி கிடைப்பதற்கு உதவி செய்யவும் வேண்டும்.'

'மதக் கல்வியோடு பொருளாதாரக் கல்வியும் பெற்றாலே மனித முன்னேற்றம் சாத்தியமாகும்

'சமூகத்தில் பின்தங்கிய நிலையை மாற்றுவதற்கான வழி கல்வியே'

கேரளத்தின் சமூக முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டவர்களில் முக்கியமானவரான வக்கம் அப்துல் காதர் மௌலவியின் கருத்துகளே மேலே கொடுக்கப்பட்டுள்ளவை. அவர்,

- மூடநம்பிக்கைகளுக்கு எதிராகப் போராடினார்
- ஆங்கிலக் கல்வியை உற்சாகப்படுத்தினார்
- பெண் கல்வியை ஊக்குவித்தார்
- அறிவியல், கலை என்பவற்றின் அடிப்படையில் அமைந்த கல்விக்கு ஊக்கம் அளித்தார்.
- கல்வியின் மேன்மைகளைப் பரப்புவதற்காகச் சங்கங்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

மலையாளம், உருது, அரபி, சமஸ்கிருதம், பாரசீகம் முதலான மொழிகளில் புலமை பெற்ற மௌலவி கொடுங்கல்லூரில் நிறுவப்பட்ட 'முஸ்லீம் ஐக்கிய சங்கத்தின் செயல்பாடுகளுக்கு உதவி புரிந்தார். அறிவின் ஒளியை அளிப்பதற்கு முஸ்லிம் என்ற மாத இதழும் 'அல்–இஸ்லாம்' என்ற பத்திரிகையும் சுதேசாபிமானி என்ற நாளிதழும் அவர் ஆரம்பித்தார்.



### சுதேசாபிமானி பத்திரிகை

திருவிதாங்கூர் மன்னராட்சியின் ஊழல்களையும் அநீதிகளையும் வெளிப்படுத்திய பத்திரிகையே 'சுதேசாபிமானிப் பத்திரிகை.' 1910–இல் பத்திரிகையைத் தடைசெய்யவும் பத்திரிகை ஆசிரியராக இருந்த ராமகிருஷ்ண பிள்ளையை நாடு கடத்தவும் செய்தனர். அச்சகத்தைத் திரும்பப் பெற வற்புறுத்தியபோது எனது பத்திரிகை ஆசிரியர் இல்லாமல் எனக்கு பத்திரிகை எதற்கு, அச்சகம் எதற்கு என்று முடிவெடுத்தார் சுதேசாபிமானி பத்திரிகை உரிமையாளர் வக்கம் அப்துல் காதர் மௌலவி.

வக்கம் அப்துல் காதர் மௌலவியின் செயல்பாடுகள் சமூக முன்னேற்றத்திற்கு எந்த அளவிற்கு உதவியாக இருந்தன. குறிப்பு தயார் செய்யுங்கள்..

## எதிர்ப்பு பாட்டின் வாயிலாக

"ஒன்றும் தெரியவில்லையே
என்னுடைய வம்சத்தைப்பற்றி
தெரிகிறது பல வம்சத்தின்
வரலாறுகள்

* * *

முன்னோர்களுக்கு ஏற்பட்ட
துன்பங்ளைகளைக் கேளுங்கள்
காளையைப் போல்
எருமையைபோல
நுகத்தில் பூட்டி
நிலங்களை உழுதார்கள்
நிலங்களில் உழுகிறார்கள்

* * *

உணவு கிடைப்பதில்லை
வேலையின் கூலியை நினைத்தால்
துளியும் நிம்மதியில்லை

* * *



பொய்கையில் ஸ்ரீ
குமாரகுருதேவன்

இப்பாடலில் ஒரு மக்கள் கூட்டத்தின் அடிமை அனுபவங்களும், துன்பங்களும் வேதனைகளும் கோபங்களும் அடங்கியுள்ளன. இதுபோன்ற பாடல்களிலும் , சொற்பொழிவுகளிலும் பொய்கையில் ஸ்ரீ குமார குருதேவன் தனது கருத்துகளை வெளியிட்டார். தாழ்த்தப்பட்ட இன மக்களின் விடுதலைக்காக அறிவையும் ஆன்மீகத்தையும் இணைத்த ஒரு சமூக சீர்திருத்தவாதி பொய்கையில் ஸ்ரீ குமாரகுருதேவன். திருவல்லாவிற்கு அருகிலுள்ள இரவிபேரூர் என்ற இடத்தில் பிறந்தவர். பொய்கையில் அப்பச்சன் என்ற பெயரிலும் இவர் அறியப்படுகிறார்.

ஜாதி வேறுபாட்டிற்கும் சுரண்டல்களுக்கும் எதிராகக் குரல் எழுப்பிய அவர் மனித நேயத்திற்கும் சகோதரத்துவத்திற்காகவும் உலக சமாதானத்திற்காகவும் பிரத்யட்சரட்சா தெய்வசபை என்ற சங்கத்தை உருவாக்கினார். சமூக மாற்றத்திற்காகச் செயல்பட்ட ஸ்ரீகுமாரகுருதேவன் இரண்டு முறை ஸ்ரீமூலம் பிரஜா சபையில் உறுப்பினராக இருந்தார்.



### போர் எதிர்ப்பு ஊர்வலம்

முதல் உலகப்போர் காலத்தில் மாரங்குளம் என்ற இடத்தில் இருந்து குளத்தூர் குன்றிற்கு ஸ்ரீகுமாரகுருதேவனின் தலைமையில் ஒரு போர் எதிர்ப்பு போராட்டம் நடைபெற்றது. சமாதானம் உலகத்திற்கு சமாதானம் என்ற முத்திரை வாக்கியம் முழங்கிக் கொண்டு ஊர்வலம் நடைபெற்றது. இந்தச் சமாதான ஊர்வலம் பிரிட்டீஷ் அரசுக்கு எதிரான போராட்டம் என்று கூறி அவர் கைது செய்யப்பட்டார்.

## மூடநம்பிக்கைகளுக்கு எதிராக...

மலபாரில் சமூக மூடப்பழக்கவழக்கங்களுக்கு எதிரான போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்களில் முக்கியமானவர் வாக்படாநந்தன். ஒரே தெய்வ நம்பிக்கையை முன்வைத்த வாக்படாநந்தன் மூட நம்பிக்கைகள், பொருளற்ற பழக்கவழக்கங்கள் இவற்றிற்கெதிராக மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்த ஆத்ம வித்யா சங்கம் நிறுவினார். சமூக சீர்திருத்தத்துடன் வறுமை எதிர்ப்பு, ஆண் பெண் சமத்துவம் போன்றவற்றிற்கும் அவர் முக்கியத்துவம் அளித்தார்.

### அட்டவணையை நிறைவு செய்யுங்கள்

| சீர்திருத்தவாதிகள் | இயக்கம் | முக்கியச் செயல்பாடுகள் |
|---|---|---|
| வைகுண்டசுவாமிகள் | சமத்துவ சமாஜம் | • தீண்டாமைக்கெதிராகச் செயல்பட்டார்<br>• ஆலயப் பிரவேசனம் மேலாடை அணிதல் போன்ற உரிமைகளுக்காக வாதிட்டார்<br>• சமபந்திபோஜனம் நடத்தினார் |
| சட்டம்பி சுவாமிகள் | | |
| ஸ்ரீநாராயண குரு | | |
| அய்யங்காளி | | |
| வக்கம் அப்துல் காதர் மௌலவி | | |
| பொய்கையில் ஸ்ரீகுமாரகுருதேவன் | | |
| வாக்படாநந்தன் | | |

## ஆண் பெண் சமத்துவத்திற்கு...

கேரளச் சமூகத்தில் இருந்த ஜாதி வேறுபாடு ஆணாதிக்கக் கண்ணோட்டங்கள் போன்றவை மூலம் பல பிரிவுகளிலுள்ள பெண்களின் துன்பங்களும் இயலாமைகளும் வேறுபட்ட தன்மை கொண்டவைகளாயிருந்தன. நம்பூதிரிப் பெண்கள் வீடுகளுக்குள்ளேயே ஒடுக்கப்பட்டனர். வேலை செய்யும் தாழ்ந்த ஜாதிப் பெண்கள் உயர் ஜாதியினரின் சுரண்டலுக்கும் சமூகப் பிரிவினைக்கும் ஆளானார்கள்.

பெண்களுக்கு ஏற்பட்ட இத்தகைய சுரண்டல்களுக்கும் பிரிவினைகளுக்கும் சமத்துவமின்மைக்கும் எதிராகச் சமூக சீர்திருத்தவாதிகள் குரல் எழுப்பினார்கள். நாம் இந்த அலகில் கலந்தரையாடிய சாணார் கலகம் பெண்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நடைபெற்ற முன்கால போராட்டங்களில் ஒன்றாகும். காசர்கோடு மாவட்டத்தில் சீமேனியில் நடைபெற்ற தோள்விறகு போராட்டமும், கண்டகை கிராமத்தில் கண்டகை குஞ்ஞாக்கம்மாவின் தலைமையில் நடைபெற்ற மேய்ச்சல் புல் போராட்டமும் பெண்களே நடத்தினர்.

நம்பூதிரிச் சமுதாயத்தில் பெண்கள் அனுபவித்த சமத்துவமின்மைக்கும் பிரிவினைக்கும் எதிராக அதே இனத்தைச் சேர்ந்த வி.டி.பட்டதிரிப்பாடு, எம்.ஆர்.பட்டதிரிப்பாடு முதலானவர்கள் நடத்திய செயல்பாடுகள் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தின. வி.டி.யின் அடுக்களையில் இருந்து அரங்கத்திற்கு பிரேம்ஜியின் ரிதுமதி என்னும் நாடகங்கள் நம்பூதிரிப் பெண்களின் பரிதாபகரமான நிலைமையை பொது சமூகத்தின் முன் எடுத்துக்காட்டின. நம்பூதிரிப் பெண்களைத் தன்னம்பிக்கைமிக்கவர்களாக மாற்றும் செயல்பாடுகளுக்கு ஆரியபள்ளம், தேவகி நரிக்காட்டிரி, பார்வதி நென்மேனிமங்கலம் போன்றோர் தலைமை வகித்தனர். பெண் பிரிவினைக்கும் தொழில் சுரண்டலுக்கும் எதிராகவும் கூடுதல் ஊதியம் ஆடை அணிதல் என்பவற்றிற்காகவும் புதிய கருத்துகளும், செயல்பாடுகளும்

உருவாயின. இது ஆண்பெண் சமத்துவத்தின் அடிப்படையில் நவீன அரசியல் கண்ணோட்ட உருவாக்கத்திற்கு உதவியது.



ஆண் பெண் சமத்துவத்தின் அடிப்படையில் கேரள சமூகத்தின் உருவாக்கத்திற்கு அடித் தளம் அமைத்த சூழலைப் பகுப்பாய்வு செய்யுங்கள்.

## மிஷனரி செயல்பாடுகள்

கேரளத்தில் சமூகச் சீர்திருத்தச் செயல்பாடுகளில் கிறித்தவ மிஷனரிகள் மிக முக்கியப் பங்கு வகித்துள்ளனர். கல்வித்துறையில் அவர்களின் செயல்பாடுகள் விலை மதிப்பற்றவை. ஜாதி மதச் சிந்தனைகளுக்கு அப்பாற்பட்டு, எல்லாக் குழந்தைகளையும் அவர்களின் பள்ளிக்கூடங்களில் சேர்த்துக் கொண்டனர். இந்தக் கல்வி முன்னேற்றம் கேரளத்தில் சமுதாய உணர்வுக்கு ஊக்கம் அளித்தது. கேரளத்தில் செயல்பட்ட மிஷனரி சங்கங்ளில் முக்கியமானவை கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

- லண்டன் மிஷன் சொஸைட்டி
- சர்ச் மிஷன் சொஸைட்டி
- பாசல் இவாஞ்சலிக்கல் மிஷன்

கேரளத்தின் சமூகக் கல்வித்துறைகளில் புத்துணர்வு ஏற்படுத்திய பிற சீர்திருத்தவாதிகள், சகோதரன் அய்யப்பன், பண்டிட், கெ.பி.கருப்பன், சனா உள்ளா சயீத், மக்தி தங்ஙள் போன்றோர் ஆவர். சமூகத் தில் நிலைபெற்றிருந்த ஜாதிவேற்றுமைக்கும், மூட நம்பிக்கைகளுக்கும் எதிராக இவர்கள் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தினர். கல்வியின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூறினர்.

சமூகச் சீர்திருத்தத்தோடு மத நல்லிணக்கச் செய்திகளையும் அறிவிக்க இவர்கள் முன் வந்தார்கள். இதுபோன்ற சமூகச் சீர்திருத்த இயக்கங்களின் வாயிலாகக் கிடைத்த முன்னேற்றமே கேரளாவின் பிற்கால வளர்ச்சிக்கு வழிகோலியது. இச்சீர்திருத்தச் செயல்பாடுகள் வாயிலாகக் கேரளத்திற்குக் கிடைத்த நன்மைகளைக் கீழ்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

- பொது வழிகளில் எல்லோரும் நடந்துசெல்வதற்கான சுதந்திரம் கிடைத்தது.
- தொழில், பெயர், வீடு, உடை என்பவற்றைத் தொடர்புபடுத்தி நிலைபெற்றிருந்த பிரிவினை களுக்கு எதிரான முன்னேற்றங்கள் ஏற்பட்டன.
- ஜாதி அடிப்படையிலான கொடுமைகள் நீக்கப்பட்டன
- கல்வி என்பது முன்னேற்றத்தின் அடிப்படை என்று புரிந்துகொள்ளும் தன்மை உருவானது.
- நவீன கல்வி ஊக்குவிக்கப்பட்டது.
- பெண்கல்வி, ஆண் பெண் சமத்துவத்தின் முக்கியத்துவம் போன்றவை புரிந்து கொள்ளப்பட்டன.



கேரளத்தில் சமூகச் சீர்திருத்தவாதிகள் முக்கியத்துவம் அளித்த சீர்திருத்தத் துறைகள் எவை?

சமூகச் சீர்திருத்த இயக்கங்களின் செயல்பாடுகளின் பலனாகக் கேரளத்தில் ஏற்பட்ட சமூக மாற்றங்களைப் பற்றிக் குறிப்பு தயாரிக்கவும்.

## தொகுப்பு

- கேரளத்தில் ஏராளமான மூடப்பழக்க வழக்கங்கள் இருந்தன.
- ஜாதி வேற்றுமைக்கும் பிரிவினைக்கும் சுரண்டலுக்கும் எதிரான ஏராளமான சமூகச் சீர்திருத்த இயக்கங்கள் தோன்றின.
- வைகுண்ட சுவாமிகள், சட்டம்பி சுவாமிகள், ஸ்ரீநாராயண குரு, வக்கம் அப்துல் காதர் மௌலவி, அய்யங்காளி, பொய்கையில் ஸ்ரீகுமாரகுருதேவன், மக்தி தங்ஙள், பண்டிட் கெ.பி.கருப்பன் வாக்படாநந்தன், வி.டி.பட்டதிரிப்பாடு போன்றவர்கள் கேரளத்தில் சமூக மாற்றங்களுக்காகச் செயல்பட்டனர்.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- கேரளத்தில் நிலைபெற்றிருந்த மூடபழக்கவழக்கங்களைப் புரிந்துகொள்கின்றனர்.
- கேரளத்தில் சமூகச் சீர்திருத்தத்திற்காகச் செயல்பட்ட சீர்திருத்தவாதிகள் பற்றியும் இயக்கங்கள் பற்றியும் அறிந்து கொள்கின்றனர்.
- கேரளத்தின் சமூகக் கலாச்சாரத் துறைகளில் மறுமலர்ச்சி இயக்கங்கள் செலுத்திய தாக்கம் பற்றி மதிப்பிடுகின்றனர்.
- சமூகத்தில் நிலவும் மூடப்பழக்கவழக்கங்களுக்கு எதிராக, எதிர்ப்புத் தெரிவிப்பதற்கான திறன் பெறுகின்றனர்.

## மதிப்பிடலாம்

- கேரளத்தில் ஏற்பட்ட சமூக மறுமலர்ச்சிச் செயல்பாடுகளின் பொதுவான சிறப்புகளைக் மதிப்பபிடவும்.

- **அட்டவணையை ஒழுங்குபடுத்துக.**

| | |
|---|---|
| சமத்துவ சமாஜம் | வக்கம் அப்துல்காதர் மௌலவி |
| ஸ்ரீ நாராயணகுரு தர்மபரிபாலன யோகம் | அய்யங்காளி |
| சாதுஜனபரிபாலன சங்கம் | வைகுண்ட சுவாமிகள் |
| கேரள முஸ்லீம் ஐக்கிய சங்கம் | ஸ்ரீநாராயண குரு |

## தொடர் செயல்பாடுகள்

- 'கேரளத்தில் சமூக மறுமலர்ச்சி இயக்கங்களும் அவற்றின் செயல்பாடுகளும்' என்ற தலைப்பின் அடிப்படையில் ஒரு கருத்தரங்கம் நடத்துங்கள்.
- கேரளத்தில் சமூக சீர்திருத்தவாதிகளின் படங்கள், தபால் தலைகள் ஆகியவற்றைச் சேகரித்துக் குறிப்புடன் ஆல்பம் தயார் செய்யுங்கள்.
- உங்களது பகுதியில் சமூகக் கலாச்சார இயக்கங்களின் தலைமையில் நடைபெறும் செயல் பாடுகளைப் பற்றி விசாரித்து விபரங்கள் சேகரிக்கவும்.
- ஆண் பெண் சமத்துவத்தின் முக்கியத்துவம் பற்றிக் கலந்துரையாடல் நடத்துங்கள்.



# 9 காந்தியடிகளும் விடுதலைப் போராட்டமும்

வைக்கம் படகுத்துறையிலும் காயலோரத்திலும் பெரியகூட்டம்: எங்கும் கோலாகலம். மாணவர்களுடன் நானும் நெருங்கி இடைநுழைந்து மக்கள் கூட்டத்தின் முன் சென்றடைந்தேன். காந்தியடிகள் படகில் இருப்பதைத் தூரத்தில் இருந்தே பார்த்தேன். ஆயிரமாயிரம் குரல்கள் கடலோசை போல் உயர்ந்தன. மகாத்மா . . .காந்திக்கு, ஜே!

மேலாடை அணியா காந்தியடிகள் பல் போன பொக்கை வாயைக் காட்டிச் சிரித்தார். கைகளைக் கூப்பி வணங்கிப் படகிலிருந்து இறங்கினார். திறந்த வாகனத்தில் அவர் ஏறி அமர்ந்தார்.

மக்கள் கூட்டத்தின் இடையே கார், சத்தியாக்கிரக மேடையை நோக்கி மெல்ல நகர்ந்தது.

........................................................................

மிகுந்த ஆரவாரம்.

அந்த ஆரவாரத்திற்கிடையே எனக்கு ஒரு ஆசை.

உலகமக்கள் போற்றும் மகாத்மா காந்தியை நான் தொட வேண்டும்! தொடாமல் இருந்தால் நான் இறந்து விடுவேனோ எனத் தோன்றியது. யாராவது பார்த்துவிடுவார்களோ... எனக்கு பயமும் குழப்பமும் ஏற்பட்டது. அனைத்தையும் நான் மறந்தேன் . . . நான் காந்தியடிகளின் வலது தோளில் மெல்லத் தொட்டேன். விழப் போனதினால் அவரது முழங்கையை நான் பிடித்தேன்

........................................................................

காந்தியடிகள் என்னை நோக்கிச் சிரித்தார். அன்று மாலை வீட்டில் சென்றவுடன் அம்மாவிடம் பெருமையோடு கூறினேன். அம்மா... காந்தியடிகளை நான் தொட்டுவிட்டேன்.

(இது வைக்கம் முகமது பஷீரின் ஓர்மக்குறிப்பு (நினைவுக் குறிப்புகள்) என்ற நூலில் அம்மா என்ற அனுபவக் கதையில் உள்ள பகுதி.)


சத்தியாகிரக போராட்டத்திற்கு ஊக்கமளிக்க வைக்கத்திற்கு காந்திஜி வருகை தந்த நிகழ்வு வைக்கம் முகமது பஷீரின் வாழ்க்கையில் மறக்க மடியாத அனுபவமாக இருந்தது.

KT 605-2/Social Science -7(T) Vol-2

தேசிய இயக்கத்தில் மிதவாத தேசியம், தீவிரவாத தேசியம் போன்றவை பற்றி நாம் படித்தோமல்லவா? சுதந்திர போராட்டத்தில் காந்திஜியின் வருகையோடு மூன்றாவது காலகட்டம் துவங்கியது. 1919 முதல் 1947 வரையுள்ள இந்தக் காலகட்டம் காந்திய காலகட்டம் என்றழைத்தார்கள்.



## காந்திஜியின் வருகை



தென்னாப்பிரிக்காவில் நீண்ட கால வாழ்விற்குப் பின்னர் 1915 ஜனவரி 9–ஆம் நாள் காந்திஜி இந்தியாவிற்குத் திரும்பினார். இந்திய மக்களின் பிரச்சினைகளைப் படிக்கவும் இந்தியாவை அறியவும் நாடு முழுவதும் பயணம் செய்தார். எளிமையான வாழ்க்கை முறையாலும் ஆடை அணியும் முறையாலும் காந்திஜி மக்களுக்கு முன் மாதிரியாக விளங்கினார். சாதாரண மக்களின் மொழியில் அவர்களுடன் உரையாடினார். அகிம்சையின் அடிப்படையில் சத்தியாக்கிரகம் எனும் புதிய போராட்ட முறைக்கு வடிவம் கொடுத்தார். தனது கருத்தை விளம்பரப்படுத்துவதற்காக குஜராத்தில் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார். காந்திஜி சுதந்திரப் போராட்டத்தின் தலைமை பொறுப்பை ஏற்றவுடன் சுதந்திரப் போராட்டத்தில் பொதுமக்களின் பங்கேற்பு கூடியது.



### சத்தியாக்கிரகம்

சத்தியாக்கிரகம் என்றால் சத்தியத்தைப் பின்பற்றுதல் என்று பொருள். சத்தியாக்கிரகம் அகிம்சையை அடிப்படையாகக் கொண்டது. சத்யாக்கிரகி தீமையை வெறுப்பவர். ஆனால் தீமை செய்யும் மனிதனை வெறுப்பதில்லை. தீமை செய்பவனின் மனசாட்சியை மாற்றலாம் என்று சத்யாக்கிரகி நம்புகிறார்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவிற்குத் திரும்பி வந்த காந்தியடிகளின் முதல்கட்ட செயல்பாடுகளைப் பற்றிக் குறிப்புத் தயாராக்குங்கள்.

## ஆரம்பக் காலப் போராட்டங்கள்

காந்தியடிகளின் தலைமையில் இந்தியாவில் 1917-இல் நடந்த முதல் போராட்டம் சம்பாரன் சத்தியாக்கிரகம் ஆகும். பீகாரில் சம்பாரன் எனும் ஊரில் நீலம் விவசாயிகளைப் பண்ணை முதலாளிகளான வெள்ளைக்காரர்கள் சுரண்டலுக்கு உட்படுத்தினர். அதற்கு எதிராக நடந்த போராட்டமே இந்தச் சத்தியாக்கிரகம். இப்போராட்டத்தின் முடிவில் விவசாயிகளுக்குச் சாதகமான தீர்மானங்கள் எடுப்பதற்கு வெள்ளைக்காரர்கள் கட்டாயப்படுத்தப்பட்டனர்.


1918-இல் காந்தியடிகள் அகமதாபாத்தில் துணி ஆலைத் தொழிலாளர்களின் ஊதிய உயர்வுக்காகப் போராட்டம் நடத்தினார். இப்போராட்டம் காந்தியடிகள் இந்தியாவில் நடத்திய முதல் உண்ணாவிரதப் போராட்டமாகும்.

அதே வருடம் குஜராத்தில் கேடயில் ஏற்பட்ட இயற்கை சீற்றத்தால் பயிர்கள் அனைத்தும் அழிந்தன. விளைச்சல் குறைவானதால் வரியைக் குறைக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். பிரிட்டிஷ்காரர்கள் இக் கோரிக்கையை மறுத்ததால் காந்தியடிகள் வரி எதிர்ப்பு போராட்டத்திற்கு அழைப்புக் கொடுத்தார்.

தீவிரமான சுதந்திரப் போராட்டகால கட்டத்தின் போராட்ட முறைகளிலிருந்து காந்தியடிகளின் முதல் காலகட்டப் போராட்டங்கள் எவ்வாறு வேறுபட்டிருந்தன? கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.



### குடியுரிமைக்காக




செய்தித் துணுக்குகளைக் கவனியுங்கள் . . . . .

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியர்களிடம் நடந்துகொண்ட, மக்கள் விரோதச் செயல்களை இதிலிருந்து புரிந்துகொள்ளலாம்.

பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் இந்திய மக்களின் அடிப்படை உரிமைகளுக்கு எதிரான பல கொடிய சட்டங்களை நடைமுறைப்படுத்தினர். அவற்றில் மக்களின் பரவலான எதிர்ப்புக்குக் காரணமாயிருந்த சட்டம் ரௌலட் சட்டம் ஆகும். இந்தச் சட்டம் பிரிட்டிஷ் அரசாங்கத்திற்குக் கீழே கூறப்பட்டுள்ள அதிகாரங்களை அளித்தது.

- எந்த ஒரு இந்தியக்குடிமகனையும் அழைப்பாணை (வாரண்டு) இல்லாமல் கைது செய்யலாம்.
- விசாரணை இல்லாமல் காலவரையறையின்றி சிறையில் அடைக்கலாம்.
- தனி நீதிமன்றங்களில் ரகசிய விசாரணை நடத்தலாம்.
- நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிரான மேல்முறையீட்டை மறுக்கலாம்.

இந்தச் சட்டத்திற்கெதிராகப் பொதுமக்கள் போராட்டங்களை ஆரம்பித்தனர். ஊர்வலங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள், முழுக் கடையடைப்புகள், சட்ட மறுப்புப் போராட்டங்கள் போன்ற போராட்டங்களை நடத்தினர். 1919 ஏப்ரல் 6–ஆம் நாளை நாடு முழுவதும் கறுப்பு தினமாக கடைபிடிக்கக் காந்தியடிகள் அழைப்புவிடுத்தார். எதிர்பாராத அளவில் இதற்கு ஒத்துழைப்பு கிடைத்தது.

பஞ்சாபில் போராட்டத்திற்குத் தலைமை வகித்த டாக்டர் சத்யபால், டாக்டர் சய்புதீன் கிச்சலூ என்பவர்களைக் கைது செய்தார்கள். இதற்கு எதிர்ப்பு தெரிவித்துப் பஞ்சாபிலுள்ள ஜாலியன் வாலாபாக்கில் பொதுமக்கள் ஒன்று திரண்டனர். மூன்று பக்கமும் மதில்களால் சூழப்பட்ட ஒரு வாசல் மட்டுமுள்ள பெரிய மைதானமே ஜாலியன் வாலாபாக். நிராயுத பாணிகளான பொதுமக்களுக்கு எதிராக இராணுவத்தினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். ஆயிரக்கணக்கானோர் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியாகினர். ஏராளமானவாகள் காயமடைந்தனர். பிணங்களை நீக்கவோ காயம்பட்டவர்களுக்கு மருத்துவ உதவி செய்யவோ குடிதண்ணீர் கொடுக்கவோ இராணுவம் அனுமதிக்கவில்லை. இத்துயரச் சம்பவம் 'ஜாலியன்வாலாபாக் படுகொலை' என அழைக்கப்பட்டது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து,

- காந்தியடிகள் கைஸர்–எ–ஹிந் என்ற பதவியைப் பிரிட்டிஷ் அரசிற்கு திருப்பிக் கொடுத்தார்.
- இரவிந்திரநாத் தாகூர் பிரிட்டிஷ்காரர்கள் அளித்த 'சர்' பட்டத்தைத் துறந்தார்.
- நாடு முழுவதும் போராட்டங்கள் நடத்தப்பட்டன.



ஜாலியன் வாலாபாக் படுகொலைக் காட்சி (ஓவியரின் கற்பனையில்)

சமாதான முறையில் நடக்கும் போராட்டங்களில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது? ஜாலியன்வாலாபாக் படுகொலையின் அடிப்படையில் மதிப்பிடுங்கள்.

ஜாலியன்வாலாபாக் படுகொலை நிகழ்வை ஒரு நாடக வடிவில் நடிப்பதற்கேற்றவாறு நாடக வசனங்களைத் தயார் செய்யுங்கள்.

## மாவீரன் உத்தம்சிங்

ஜாலியன் வாலாபாக் படுகொலையைக் குழந்தையாக இருந்த உத்தம்சிங் நேரடியாகப் பார்த்தார். இந்தப் படுகொலைக்குத் தலைமை வகித்த மைக்கிள் -ஒ-டயரைப் பல வருடங்களுக்குப் பின் இங்கிலாந்து சென்று அவர் சுட்டுக்கொன்றார். 1940-இல் ஜூலை 31-இல் உத்தம்சிங்கிற்கு மரண தண்டனை அளிக்கப் பட்டது.


உத்தம்சிங்

### கிலாபத் இயக்கம்

துருக்கியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி நடத்திய உஸ்மானியா (ஓட்டோமன்) பேரரசின் ஆட்சியாளரை கலீபா என்றழைப்பர். உலக இஸ்லாமியர்களின் ஆன்மிகத் தலைவராக கலீபா விளங்கினார். முதல் உலகப்போரில் பிரிட்டனின் எதிரணியில் துருக்கிப் பேரரசு இருந்தது. போரில் கலீபாவிற்கு எதிராகப் பிரிட்டிஷ் அரசின் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்க உருவாக்கப்பட்டதே கிலாபத் இயக்கம்.கிலாபத் இயக்கத்தின் இந்தியத் தலைவர்கள் மௌலானா சௌகத் அலியும் மௌலானா முகமது அலியும் ஆவர். இவர்கள் அலி சகோதரர்கள் என்றழைக்கப்பட்டனர்.


மௌலானா சவுக்கத்அலி
மௌலானா முகம்மது அலி

ரௌலட் சட்டத்திற்கு எதிராக வளர்ச்சிபெற்ற இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலுப்படுத்த கிலாபத் இயக்கம் உதவுமென்று காந்தியடிகள் நம்பினார். கிலாபத் இயக்கத்திற்கு உறுதுணையையும் முழு ஒத்துழைப்பையும் அவர் அறிவித்தார்.அகில இந்திய கிலாபத் இயக்கத்தின் தலைவர் பதவியைக் காந்தியடிகள் ஏற்றுக்கொண்டார். 1919 அக்டோபர் 17-ஆம் நாள் இந்தியா முழுவதும் கிலாபத் தினமாகக் கொண்டாடப்பட்டது.

கிலாபத் இயக்கத்தின் செயல்பாடுகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க காந்தியடிகளைத் தூண்டிய கூறுகள் எவை? குறிப்பு தயார் செய்யவும்.


## ஒத்துழையாமை இயக்கம்

காந்தியடிகளின் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய மக்கள் போராட்டமே ஒத்துழையாமை இயக்கம். 1920-இல் கொல்கத்தாவில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு ஒத்துழையாமை இயக்கத்திற்கு அங்கீகாரம் அளித்தது.

ஒத்துழையாமைப் போராட்டத்தின் முன்பாகக் காந்திஜி வைஸ்ராயிக்குக் கீழ்க் காணும் கடிதத்தை எழுதினார்.

'ஆட்சியாளர் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தினால் அவரைப் புறக்கணிக்கப் பழங்காலம் முதலே மக்களுக்கு உரிமையிருந்தது.'

ஒத்துழையாமைப் போராட்டம் இரண்டு வகையான செயல்களை அடிப்படையாகக் கொண்டது. அவை புறக்கணிப்புச் செயல்பாடுகளும், ஆக்கபூர்வமானச் செயல்பாடுகளும் ஆகும்.






ஒத்துழையாமைப் போராட்டம் பொதுமக்களின் போராட்டமாக மாறியது ஏன்? காரணங்களைக் கலந்துரையாடுங்கள்.

ஒத்துழையாமை இயக்கத்தோடு தொடர்புள்ள கருத்துகளை உட்கொண்ட முத்திரை வாக்கிய அட்டைகள் தயாரிக்கவும்

நாடுமுழுவதும் இது போன்ற போராட்டங்கள் நடந்தபோது கேரளத்தில் நடந்தது என்னவென்று பார்ப்போம்..



## மலபார் கலகம்

கேரளத்திலல் பிரிட்டீஷ் எதிர்ப்புப் போராட்டங்களில் முக்கியமான ஒரு போராட்டம் 1921-இல் நடந்த மலபார் கலகம் ஆகும். குடியிறக்குதல் அநியாயமாக வரி வசூலித்தல் கூடுதலான குத்தகை போன்ற ஜமீன்தார்களுடைய துரோக நடவடிக்கைகளுக்கு மலபாரில் உள்ள விவசாயிகள் உள்ளாயினர். ஜமீன்தார்களின் விவசாயிகளுக்கெதிரான இத் துரோத நடவடிக்கைகளுக்குப் பிரிட்டீஷார் ஒத்துழைப்பு அளித்தனர். இவ்வேளையில் கேரளத்தில் ஒத்துழையாமை இயக்கமும் கிலாபத் இயக்கமும் உயிர்பெற்றன. காந்தியடிகளும் மௌலான சௌகத் அலியும் இணைந்து கேரளத்திற்கு வருகை தந்தனர்

கிலாபத் இயக்கமும் 1920-இல் நடந்த மஞ்சேரி காங்கிரஸ் மாநாடும் விவசாயிகளுக்குப் புதிய ஊக்கத்தை அளித்தன. விவசாயிகளில் பெரும்பான்மையினரும் முஸ்லீம் மக்களாக இருந்தனர்

பிரிட்டீஷ்காரர்கள் மற்றும் ஜமீன்தார்களிடம் விவசாயிகள் எதிர்த்து நின்ற அதே சமயத்தில் பூக்கோட்டூர் கிலாபத் குழுச் செயலர் வடக்கே வீட்டில் முகமதைக் கைது செய்ய வந்த காவலர்களைப் பொதுமக்கள் தடுத்து நிறுத்தினார்கள். கிலாபத் தலைவரான அலி முஸ்லியார் கைது செய்யப்பட்டார் என்ற வதந்தி பரவியது. இதைத் தொடர்ந்து மலபாரில் ஏறநாடு, வள்ளுவநாடு, பொன்னானி தாலுகாக்களில் கலகம் ஏற்பட்டது. பிரிட்டீஷ்காரர்களுக்கு உதவிய ஜமீன்தாரர்களுக்கு எதிராகப் போராட்டக்காரர்களின் கோபம் கொழுந்துவிட்டு எரிந்தது. கலகத்திற்குத் தலைமை தாங்கிய அலி முஸ்லியார் வாரியம்குன்னத்து குஞ்ஞகமது ஹாஜி போன்றவர்களைப் பிரிட்டீஷ்காரர்கள் கொன்றனர்.

## ரயில் பெட்டி படுகொலை

மலபார் கலகத்தில் கைது செய்யப்பட்ட ஏறத்தாழ தொண்ணூறு கலகக்காரர்களைத் திரூர் ரயில் நிலையத்திலிருந்து ஒரு சரக்கு ரயில் வண்டியில் நெருக்கமாக அடைத்துக் கோயம்புத்தூருக்குக் கொண்டு சென்றனர். காற்று உட்புக முடியாத ரயில் பெட்டியில் அவர்கள் உயிருக்காக துடித்தார்கள். மரண வேதனையில் ஒருவருக்கொருவர் பிராண்டத் துவங்கினர். வண்டி கோயம்புத்தூரின் அருகிலுள்ள போத்தனூரைச் சேர்ந்தபோது இரயில் பெட்டி திறந்துப் பார்க்கப்பட்டது. அப்பொழுது 72 பேர் இறந்துவிட்டனர். மீதம் உள்ளவர்கள் மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தனர். 1921 நவம்பர் 10-ஆம் நாள் நடந்த இந்தக் கொடிய சம்பவம் ரயில்பெட்டி படுகொலை என அழைக்கப்படுகிறது. ஜமீன்தார் முறைக்கும் பிரிட்டீஷ் ஆட்சிக்கும் எதிராகத் தொடங்கிய மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தைக் கொடூரமான அடக்குமுறை மூலம் பிரிட்டீஷ் அரசாங்கம் ஒடுக்கியது.






ரயில்பெட்டி படுகொலை (ஓவியரின் கற்பனையில்)

சுதந்திரப் போராட்டங்களைப் பிரிட்டீஷ் அரசாங்கம் கொடுமையான முறையில் எதிர்கொண்டது. மலபார் கலகத்தின் அடிப்படையில் மதிப்பிட்டுக் குறிப்பு தயார் செய்யவும். ரயில்பெட்டி படுகொலையின் நிலையான மாதிரி தயார் செய்யுங்கள்.



விவசாயப் போராட்டங்கள், கிலாபத் இயக்கம் இவற்றின் ஒருங்கிணைப்பே மலபார் கலகம் - மதிப்பிடுங்கள்.

### அட்டவணையை முழுமையாக்கவும்

| படங்கள் | நிகழ்வுகள் | முக்கிய கருத்துகள் |
|---|---|---|
|  | ஜாலியன்வாலாபாக் படு கொலை | • 1919<br>• பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ்<br>• ரௌலட் சட்டத்திற்கு எதிர்ப்பு<br>•<br>• |
|  | | •<br>•<br>•<br>•<br>• |

## சௌரிசௌரா நிகழ்ச்சி

உத்தரபிரதேசத்திலுள்ள சௌரிசௌரா கிராமத்தில் பிரிட்டிஷ் ஆட்சியாளர்களின் தவறான அறிவிப்புகளுக்கு எதிராக 1922-இல் விவசாயிகள் ஒன்றிணைந்தனர். நிராயுதபாணிகளான 3000 த்திற்கு அதிகமான விவசாயிகள் கலந்துகொண்ட ஊர்வலத்தை நோக்கிக் காவலர்கள் சுட்டனர். கோபமடைந்த மக்கள் கூட்டம் காவல் நிலையத்தைத் தீக்கிரையாக்கியது. 22 காவலர் கள் கொல்லப்பட்டார்கள். இந்த நிகழ்ச்சி அகிம்சை போராட்டத்திற்கு எதிராக இருந்ததால் ஒத்துழையாமை இயக்கத்தை முழுமையாக நிறுத்திவைக்கக் காந்தியடிகள் தீர்மானித்தார்.

ஒத்துழையாமை இயக்கத்தை நிறுத்தி வைக்கக் காந்தியடிகளைத் தூண்டிய சூழ்நிலைகள் எவை? கலந்துரையாடவும்..



காந்தியடிகளின் தொடக்கக் காலப் போராட்ட முறைகளிலிருந்து ஒத்துழையாமை இயக்கம் எவ்வாறு வேறுபட்டுள்ளது?

### வைக்கம் சத்தியாக்கிரகம்

சுதந்திரப் போராட்டத்தோடு சமூக சமத்துவமின்மைக்கு எதிரான போராட் டக் களமாகவும் தேசிய இயக்கம் மாறியது.

வைக்கம் ஆலயத்தின் மதிலுக்கு வெளியே உள்ள பாதையில் தாழ்த்தப் பட்ட ஜாதிக்காரர்கள் நடக்க உரிமை யில்லாமல் இருந்தது. இந்தப்பாதையை அனைத்து ஜாதியினருக்கும் திறந்து விடவேண்டும் என்ற கோரிக்கையுடன் நடந்த போராட்டமே 1924-இல் நடந்த வைக்கம் சத்தியாக்கிரகம். இதற்காக மன்னத்து பத்மநாபனின் தலைமையில் நடந்த உயர் ஜாதியினரின் பேரணி முக்கியமானதாகும். இது பொதுஇடங்களில் காணும் தீண்டாமைக்கு எதிராக இந்தியாவில் நடந்த குறிப்பிடத்தக்கப் போராட்டமாகும். போராட்டத்திற்கு ஆதரவு அளிப்பதற்காகக் காந்தியடிகள் வைக்கத்திற்கு வந்த நிகழ்ச்சிப் பற்றி இந்த அலகின் துவக்கத்தில் நாம் வாசித்தோமல்லவா?



### உயர்ஜாதிப் பேரணி

வைக்கம் சத்தியாக்கிரகத்திற்கு ஆதரவு தெரிவித்து மன்னத்து பத்மநாபன் தலைமையில் 1924 நவம்பர் 1 ஆம் நாள் உயர்ஜாதி மக்களை ஒன்றிணைத்து வைக்கம் கோயில் வாசலிலிருந்து திருவனந்தபுரத்திற்கு ஒரு பேரணி புறப்பட்டது. வைக்கம் கோயிலின் எல்லா வாசல்களும் ஜாதிமத வேறுபாடின்றி எல்லோருக்கும் திறந்து கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் மகாராணி சேதுலட்சுமிபாயியிடம் விண்ணப்பமாகச் சமர்ப்பித்தனர்.

வைக்கம் சத்தியாக்கிரகத்தின் சிறப்பைக் குறித்துக் கலந்துரையாடிக் குறிப்பு எழுதுங்கள்.

### தூக்குக் கயிற்றுக்கு அஞ்சாதவர்கள்

காந்தியடிகளின் போராட்ட முறைகளுக்கு நிகராக வேறு பல ஆயுதப் போராட்டங்களும் இக்கால கட்டத்தில் நடைபெற்றன. இதுபோன்ற போராட்டங்களுக்குத் தலைமை வகித்து உயிரை தியாகம் செய்தவர்கள் சந்திரசேகர் ஆஸாத், பகத்சிங், ராஜ்குரு, சுக்தேவ் முதலானவர்கள்ஆவர். இவர்கள் உருவாக்கிய சங்கம் ஹிந்துஸ்தான் ரிப்பப்ளிக்கன் அசோசியேசன் என்பதாகும். இளைஞர்களைப் போராட்டத்திற்குத் தயாராக்குவதே இச்சங்கத்தின் நோக்கம்.


சந்திரசேகர் ஆஸாத்


பகத்சிங்


ராஜ்குரு


சுக்தேவ்





## ஒரு துளி உப்பு ஒரு பேரரசை உலுக்குகிறது

1929-இல் லாகூரில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகளின் தலைமையில் சட்டமறுப்பு இயக்கம் தொடங்கத் தீர்மானிக்கப்பட்டது. மக்களுக்கு எதிரான பிரிட்டிஷ் சட்டங்களை மீறுதல் என்பதே இதனுடைய நோக்கம். உப்பு தயாாரிக்க இந்தியர்கள் வரி வழங்கி வந்தனர். இந்த நேரத்தில் உப்புக்கான வரியை பிரிட்டிஷ் அரசாங்கம். இரண்டு மடங்காக உயர்த்தியது. இது மக்களின் எதிர்ப்பைத் தூண்டியது. எனவே மக்களை நேரடியாகப் போராட்டத்தில் பங்குபெறச்செய்வதற்கான ஆயுதமாக உப்பைப் பயன்படுத்தலாம் எனக் காந்தியடிகள் எண்ணினார். இந்த உப்புச் சட்டத்தை எதிர்க்க காந்தியடிகள் தீர்மானித்தார்.



தண்டியாத்திரை



உப்பு சட்ட மறுப்பு

போராட்ட அறிவிப்பின்போது காந்தியடிகள் கீழ்க்கண்டவாறு கூறினார்.

ஒன்று என் இலட்சியத்தை அடைந்து நான் திரும்பி வருவேன் அல்லது நான் எனது உடலைக் கடலுக்கு அர்ப்பணம் செய்வேன்'

எழுபத்தியெட்டு தொண்டர்களுடன் காந்தியடிகள் சபர்மதி ஆசிரமத்திலிருந்து பயணம் மேற்கொண்டார். 375 கி.மீ தூரத்தைக் கால்நடையாகவே நடந்து தண்டி கடற்கரையைச் சென்றடைந்தார்.

1930 ஏப்ரல் 6–ஆம் நாள் ஒரு பிடி உப்பைச் சேகரித்துக்கொண்டு சட்டமறுப்பு புரட்சியைக் காந்திஜி துவக்கி வைத்தார். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் 'உப்பு' சட்ட மறுப்புப் போராட்டத்தின் சின்னமாக மாறியது.



### தண்டி யாத்திரையில் மலையாளிகள்

சி. கிருஷ்ணன் நாயர், டைற்றஸ், சங்கரன் எழுத்தச்சன், ராகவப் பொதுவாள் என்பவர்கள் உப்பு சத்தியாக்கிரகத்தில் காந்தியடிகளுடன் பங்கெடுத்த மலையாளிகள் ஆவர்.



கான்அப்துல் காபர்கான்

இந்தியா முழுவதும் சட்ட மறுப்பு இயக்கம் பரவியது. எல்லை காந்தி என்றழைக்கப்படும் கான் அப்துல் காபர்கான் தலைமையில் இந்தியாவின் வடமேற்குப் பகுதியில் போராட்டம் நடைபெற்றன. சரோஜினி நாயுடுவின் தலைமையில் ஏராளமான பெண்களும் இப்போராட்டத்தில் பங்கேற்றனர்.




சரோஜினி நாயுடு

கேரளத்தில் உப்புச் சத்தியாக்கிரகத்திற்குத் தலைமை வகித்தவர்களில் கே.மாதவன் நாயரும், இ.மொய்து மௌலவியும் முக்கிய மானவர்கள். கண்ணூர் மாவட்டத்தில் பையன்னூரும் கோழிக்கோடும் உப்பு சத்தியாகிரகத்தின் முக்கிய மையங்களாக இருந்தன. பையன்னூரில் கெ.கேளப்பனின் தலைமையில் உப்பு சட்டமறுப்பு நடைபெற்றது. கோழிக்கோடு கடற்கரையில் உப்புச் சத்தியாக்கிரகத் திற்குத் தலைமை வகித்த முகம்மது அப்துல் ரகுமான், பி.கிருஷ்ணபிள்ளை ஆகியோருக்குக் காவலர்களின் அடிதடியில் காயம் ஏற்பட்டது. உப்புச் சத்தியாக் கிரகம் கேரளத்தில் உள்ள மக்களின் மனதில் சுதந்திரப் போராட்டத் தீயாகக் கொழுந்துவிட்டு எரிந்தது.



### நாகர்களின் இராணி

இந்தியாவில் வடகிழக்கிலுள்ள மணிப்பூர், நாகலாந்து போன்ற பகுதிகளிலும் சட்ட மறுப்பு இயக்கம் பரவியது. 13 வயது மட்டும் நிறைந்த ராணி ஹைடிலியு இத்தேசிய இயக்கத்தால் கவரப்பட்டு அதில் கலந்துகொண்டு சட்ட மறுப்பு இயக்கத்தின் முன்னணி போராளியாக மாறினார். சுதந்திரப் போராட்டத்தில் இவர் ஆற்றிய அரும்பணியைக் கருத்தில் கொண்டு 'நாகர்களின் ராணி' என்று பண்டிட் ஜவஹர்லால் நேரு இவரைப் புகழ்ந்தார்.

உப்புச் சத்தியாக்கிரகத்தை முறியடிக்க பிரிட்டீஷ் அரசாங்கம் தீர்மானித்தது. காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்ற தலைவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான மக்களைக் கைது செய்தனர். எனவே தேசிய அளவில் சரோஜினி நாயுடு, கமலா நேரு போன்றவர்கள் சத்தியாக் கிரகத்தின் தலைமையை ஏற்றெடுத்தனர் உப்புச் சத்தியாக்கிரகத்தின் முக்கிய நிகழ்வுகளை நாடக வடிவில் நடித்துக் காட்டவும்.



உப்பை போராட்ட ஆயுதமாக்க காந்தியடிகளைத் தூண்டிய காரணிகள் எவையெல்லாம்? கலந்துரையாடவும்.

## குருவாயூர் சத்தியாக்கிரகம்

காந்தியக் கொள்கையான சமூகச் சீர்திருத்தமும் சுதந்திரப்போராட்டத்தின் பாகமாகயிருந்தது. சம உரிமையுள்ள சமூகம் என்ற இலட்சியத்தோடு தீண்டாமை ஒழிப்பு, வழிபாட்டுச் சுதந்திரம் போன்றவைகளும் சுதந்திரப் போராட்டத்தின் நோக்கங்களாக மாறின. கேரளத்தில் 1931-இல் நடந்த குருவாயூர் சத்தியாக்கிரகம் இத்தகைய போராட்டங்களில் ஒன்றாகும்.

குருவாயூர் கோவிலை எல்லா இந்துக்களுக்கும் திறந்துவிட வேண்டுமென்ற காந்தியடிகளின் வேண்டுகோளைக் கோயில் நிர்வாகியாக இருந்த சாமூதிரி ஏற்றுக்கொள்ளவில்லை. அதற்கு எதிராகக் குருவாயூர் கோயிலுக்கு முன் கெ. கேளப்பன் உண்ணாவிரதப் போராட்டம்

ஆரம்பித்தார். பி. கிருஷ்ணபிள்ளை, எ.கெ.கோபாலன் போன்றவர்களும் இதற்குத் தலைமை தாங்கினார்கள். காந்தியடிகளின் ஆதரவுடன் ஆரம்பித்த போராட்டம் எல்லா இந்துக்களுக்கும் கோயிலில் நுழைவதற்கு அனுமதி கிடைக்கக் காரணமானது.


டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

## அம்பேத்கரும் பூனா ஒப்பந்தமும்

இந்தியாவில் தாழ்த்தப்பட்ட மக்கள் பிரிவினரை அரசியல் ரீதியாக ஒன்றிணைப்பதற்கான செயல்முறைகளுக்குத் தலைமை தாங்கியவர்களுள் முக்கியமானவர் டாக்டர் பிஆர். அம்பேத்கர். தாழ்த்தப் பட்டோரின் விடுதலை, அரசு அதிகாரத் துணையோடு மட்டுமே நடக்கும் என அம்பேத்கர் புரிந்து கொண்டார். இதற்காக அவர் வட்டமேஜை மாநாடுகளில் பங்கெடுத்துத் தாழ்த்தப்பட்ட மக்களின் சமூக அவலங்களுக்குத் தீர்வு காண்பதற்காக அவர்களை அரசு அதிகாரங்களில் பங்கெ டுக்க வைக்க வேண்டுமென்று ஆங்கில அரசிடம் வேண்டுகோள் விடுத்தார்.



### வட்டமேஜை மாநாடுகள்

இந்தியாவின் பிரச்சினைகளை விவாதிப்பதற்காக 1930, 1931, 1932 போன்ற வருடங்களில் ஆங்கில அரசாங்கம் லண்டனில் வட்ட மேஜை மாநாடுகளைக் கூட்டியது. மூன்று வட்ட மேஜை மாநாடுகளிலும் அம்பேத்கர் பங்கெடுத்தார். காந்தியடிகள் இரண்டாவது வட்ட மேஜை மாநாட்டில் மட்டும் பங்கெடுத்தார்


தாழ்த்தப்பட்ட மக்களுக்காகத் தனித் தொகுதிகள் ஆங்கில அரசாங்கத்தால் அனுமதிக் கப்பட்டன. தாழ்த்தப்பட்டோர் பொது சமூகத்தில் முக்கிய வரிசையிலிருந்து மாறிநிற்ப தற்கு இது காரணமாகும் என்பதால் அவர்களைத் தனி அரசியல் பிரிவாகக் கருதப்படுவதைந் காந்தியடிகள் எதிர்த்தார். ஆங்கில அரசாங்கத்தின் கொள்கைக்கு எதிராகக் காந்தியடிகள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் நடத்தத் தீர்மானித்தார். காந்தியடிகளும் அம்பேத்கரும் சந்தித்துக் கொண்டனர். தனித் தொகுதிகளைந் கைவிடுவதற்கும் ஒதுக்கப்பட்ட தொகுதிகளின் எண்ணிக்கையை அதிகரித்துத் தாழ்த்தப்பட்டோரின் அரசியல் உரிமை பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும் தீர்மானம் எடுக்கப்பட்டது. இது பூனா ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது. இது 1932-இல் நடந்தது.

- பூனா ஒப்பந்தத்திற்குக் காரணமான சூழ்நிலைகள் யாவை? கலந்துரையாடவும்.



## வெள்ளையனே வெளியேறு போராட்டம்

பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக இந்தியாவில் தோன்றிய முக்கியமான பொது மக்கள் போராட்டம் வெள்ளையனே வெளியேறு போராட்டம் ஆகும். **1942** ஆகஸ்ட் மாதம் 8 ஆம் நாள் பம்பாய் அகில இந்திய காங்கிரஸ் மாநாட்டில் வைத்து வெள்ளையனே வெளியேறு போராட்டம் அறிவிக்கப்பட்டது. அனைத்து அதிகாரங்களையும் இந்தியர்களுக்குவிட்டுக் கொடுத்துப் பிரிட்டிஷ் காரார்கள் இந்தியாவை விட்டுச் செல்ல வேண்டும்மென்று இம்மாநாடு கோரிக்கை விடுத்தது..


பம்பாய் காங்கிரஸ் மாநாட்டில் காந்தியடிகளும் நேருவும்

காந்தியடிகள் தமது சொற்பொழிவில் இவ்வாறு அறைகூவல் விடுத்தார்.

'விடுதலைக்குக் குறைவான எதுவுமே வேண்டாம், இதோ ஒரு மந்திரம், சிறிய மந்திரம் நான் உங்களுக்கு தருகிறேன். அதை உங்களது இதயத்தில் பதிக்கவும். உங்களது ஒவ்வொரு மூச்சுக்காற்றும் அதற்கு உருவம் நல்க வேண்டும். அந்த மந்திரம் தான் இது, 'செய் அல்லது செத்து மடி'. நாம் இந்தியாவை விடுதலை செய்வோம். இல்லையென்றால் அந்த முயற்சியில் செத்து மடிவோம்.



கஸ்தூரி பாய் காந்தி

காங்கிரஸில் பெரும்பாலான தலைவர்களும் கைது செய்யப்பட்டார்கள். பூனாவில் ஆஹாக்கான் அரண்மனையின் சிறைச்சாலையில் காந்தியடிகளையும் அவரது மனைவி கஸ்தூரி பாயையும் அடைத்து வைத்தனர். சிறை வாழ்க்கையினிடையே 1944 பிப்ரவரி 22–ஆம் நாள் கஸ்தூரிபாய் மரணமடைந்தார். சிறைச்சாலை வளாகத்தில் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. தலைமறைவாக வாழ்ந்து கொண்டு அருணா ஆஸப் அலி, ஜெயப்பிரகாஷ் நாராயணன் போன்ற தலைவர்கள் வெள்ளையனே வெளியேறு போராட்டத்திற்குத் தலைமை தாங்கினார்கள். அருணா அஸப் அலியை வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் நாயகி எனக் காந்தியடிகள் சிறப்பித்துக் கூறினார்.



அருணா அஸப்பலி

தலைவர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து நாடெங்கிலும் ஊர்வலங்கள், கடையடைப்புகள் கறுப்பு தினம் அனுசரித்தல் போன்றவை நடத்தப்பட்டன. எதிர்ப்புகள் நாளடைவில் கலகங்களாக மாறின. ரயில் நிலையங்கள் அழிக்கப் பட்டன. ரயில் பெட்டிகள் எரிக்கப்பட்டன. அரசு அலுவலகங்கள் தீக்கிரையாக்கப்பட்டன. தகவல் தொடர்பு தாறுமாறாகியது. தொழிலாளர்கள் தொழிற்சாலையை விட்டு வெளியேறினர். மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர்.

பிரிட்டீஷ் அரசாங்கம் மிகக் கொடூரமான முறையில் போராட்டத்தை ஒடுக்கியது.

1942 ஆகஸ்ட் 9–ஆம் நாள் கடையடைப்புப் போராட்டத்தை நடத்திக் கொண்டு கேரளாவில் வெள்ளையனே வெளியேறு போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் பங்குகொண்ட எம்.பி.நாராயண மேனோன், கெ.கேளப்பன், இ.மொய்து மௌலவி, ஏ.வி.குட்டிமாளு அம்மா ஆகியோர்கள் கைது செய்யப்பட்டனர். ஆகஸ்ட் 9 ஆம் நாள் வெள்ளையனே வெளியேறு தினமாகக் கொண்டாடப்படுகிறது.



வெள்ளையனே வெளியேறு போராட்டத்தின் தன்மை சட்டமறுப்புப் போராட்ட முறையில் இருந்து எவ்வாறு வேறுபட்டிருந்தது? கலந்துரையாடவும்.

**அட்டவணையை முழுமையாக்கவும்**

| படங்கள் | சுதந்திர போராட்ட நிகழ்வுகள் | முக்கிய கருத்துகள் |
|---|---|---|
|  | உப்புச் சத்தியாக்கிரகம் | • 1930<br>• குஜராத்திலுள்ள தண்டி கடற்கரை<br>•<br>•<br>• |
|  | | •<br>•<br>•<br>•<br>• |

● சுதந்திர போராட்டத்துடன் தொடர்புள்ள நிகழ்ச்சிகளைக் காலவரிசைப்படி அட்டவணைப்படுத்தவும்

| நிகழ்வுகள் | வருடங்கள் |
|---|---|
| ↔ | |
| ↔ | |
| ↔ | |
| ↔ | |
| ↔ | |
| ↔ | |

| | |
|---|---|
| • தண்டியாத்திரை | **1942** |
| • மலபார் கலகம் | **1947** |
| • வைக்கம் சத்தியாக்கிரகம் | **1930** |
| • வெள்ளையனே வெளியேறு போராட்டம் | **1921** |
| • ஒத்துழையாமை இயக்கம் | **1924** |
| • சௌரி சௌரா சம்பவம் | **1920** |
| | **1922** |

## சுபாஷ் சந்திரபோசும் இந்திய தேசியப்படையும்

இந்தியாவின் சுதந்திரம் பிரிட்டிஷ்காரர்களின் இனாம் அல்ல எனவும், அதைப் போராட்டத்தின் வாயிலாகப் பெற வேண்டும் எனவும் சுபாஷ்சந்திரபோஸ் நம்பினார். 'நீங்கள் எனக்கு ரத்தத்தைத் தாருங்கள் நான் உங்களுக்குச் சுதந்திரத்தைத் தருகிறேன்' என்ற அறிக்கையின் வாயிலாகப் பொது மக்களுக்குப் போராட்ட அறைகூவல் விடுத்தார். ராஷ் பிகாரி போஸ் உருவாக்கிய இந்திய தேசியப்படை (**INA**)யின் தலைமையை சுபாஷ்சந்திர போஸ் ஏற்றுக் கொண்டார். இந்தியாவின் விடுதலையே **INA**யின் இலட்சியமாக இருந்தது.



சுபாஷ்சந்திரபோஸ்

சுபாஷ் சந்திரபோஸ் ஆசாத் ஹிந்த் வானொலியின் வழியாகக் காந்திஜியிடம் இவ்வாறு கூறினார்.

"இந்தியாவின் இறுதி சுதந்திரப்போராட்டம் தொடங்கிவிட்டது. நம்முடைய தேசத் தந்தையே, இந்தியாவின் விடுதலைக்கு வேண்டியுள்ள இந்தப் புனித போராட்டத்தில் நாங்கள் உங்களுடைய ஆசீர்வாதத்தை நாடுகின்றோம்."

காந்திஜி சுபாஷ் சந்திரபோசை நேதாஜி எனச் சிறப்பித்தார் 'ஜெய் ஹிந்த் ' என்ற முத்திரை வாக்கியம் சுபாஷ் சந்திர போசின் நன்கொடையாகும்.

## ஐ. என். ஏ. யும் மலையாளிகளும்


கேப்டன் லட்சுமி

இந்திய தேசியப்படை **INA**-யின் பெண்கள் பிரிவின் தலைவியாக செயல்பட்டவர் கேப்டன் லட்சுமி ஆவார். சுபாஷ் சந்திரபோசின் போராட்ட நடவடிக்கைகளால் கவரப்பட்டு ஐ.என்.ஏ-இல் சேர்ந்த மற்றொரு மலையாளியே வக்கம் அப்துல் காதர். பிரிட்டீஷ் அரசாங்கம் அவரை 26-ஆம் வயதில் தூக்கிலிட்டது. தூக்கில் இடப்படுவதன் முந்தைய இரவு அவர் வீட்டிற்கு அனுப்பிய கடிதத்தைப் படியுங்கள்.

*அன்புள்ள அப்பாவிற்கு,*

*நான் நிரந்தரமாக உங்களை விட்டுப் பிரிகிறேன். நாளை காலை 6 மணிக்கு முன்னதாக எனது எளிய மரணம் நடந்துவிடும். இன்று இரவு பன்னிரெண்டு மணி ஆகும் போது என்னுடைய மரணநாளின் தொடக்க நிமிடம் காட்டுகின்ற அடையாளச் சத்தம் கேட்கும்.*

*ஆம், ரமலான் மாதத்தின் ஏழாவது நாளான வெள்ளிக்கிழமை காலை ஐந்து மணிக்கும் ஆறு மணிக்கும் இடையில் நான் மரணமடைவேன். வணக்கத்திற்குரிய அப்பா, அன்பே உருவான உம்மா, அன்புமிக்க சகோதரர்களே, சகோதரிகளே எந்த ஒரு ஆறுதல் வார்த்தையும் எனக்கு உங்களோடு சொல்வதற்கு இல்லை. நான் உங்களை விட்டுப் பிரிகிறேன். என்னைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்.*

*நான் எவ்வளவு தைரியமாகவும் சந்தோஷமாகவும் சமாதானமாகவும் மரணம் அடைந்தேன் என நீங்கள் ஒரு காலத்தில் நேரில் பார்த்தவர்களிடம் இருந்து அறிவதற்கு வாய்ப்பு கிடைக்கும்போது கண்டிப்பாக நீங்கள் மகிழ்ச்சியடையாமல் இருக்கமாட்டீர்கள். கண்டிப்பாகப் பெருமையடைவீர்கள்.*

*நான் முடிக்கிறேன்.*

*அன்பு மகன்*

*முகமது அப்துல் காதர்*

விடுதலைக்காக உயிர்த்தியாகம் செய்த ஏராளமானவர்களில் ஒருவரான கேரளாவைச் சேர்ந்த வக்கம் அப்துல் காதரின் தைரியமும் தேச பக்தியும் நமக்கு ஆவேசம் ஊட்டுவதாகும்..

ஆயுதப்போராட்டத்தின் வாயிலாக விடுதலை அடைவதற்கான ஐ.என்.ஏ-இன் முயற்சிகளைப் பிரிட்டீஷ் அரசாங்கம் ஒடுக்கியது.



சுபாஷ் சந்திரபோசின் போராட்ட முறைகள் இந்திய விடுதலைப் போரில் ஏற்படுத்தியத் தாக்கத்தை விளக்கவும்.

காந்தியடிகளின் தலைமையில் நடந்த போராட்டத்தோடு தொடர்புடைய அட்டவணையை நிரப்பவும்

| போராட்டங்கள் | போராட்டமுறைகள்/தனித்தன்மைகள் |
|---|---|
| சம்பரான் போராட்டம் | • சத்தியாக்கிரகப் போராட்டம்<br>• விவசாயிகளின் பிரச்சினைகளில் தலையிட்டார்<br>• வெள்ளையர்களின் சுரண்டலுக்கு எதிரான போராட்டம் |
| கேடா போராட்டம் | •<br>•<br>• |
| துணி ஆலை போராட்டம் (அகமதாபாத்) | •<br>•<br>• |
| ரௌலட் சட்டத்திற்கு எதிரான போராட்டம் | •<br>•<br>• |
| ஒத்துழையாமைப் போராட்டம் | •<br>•<br>• |
| உப்புச் சத்தியாக்கிரகம் | •<br>•<br>• |
| வெள்ளையனே வெளியேறு போராட்டம் | •<br>•<br>• |

நிரப்பிய அட்டவணையைப் புரிந்து கொண்டு காந்தியடிகளின் போராட்டங்களின் பொதுவான சிறப்புகளைக் கண்டுபிடிக்கவும்

## முகமது அலி ஜின்னாவும் பாகிஸ்தான் வாதமும்

அகில இந்திய முஸ்லீம் லீக் தோற்றுவிக்கப்பட்டதை விவாதித்தோம் அல்லவா? 1940-இல் முஸ்லீம் லீகின் மாநாடு லாகூரில் நடந்தது. முஸ்லீம்கள் அதிகமாக வாழும் பகுதிகளை உள்ளடக்கிப் பாகிஸ்தான் என்ற பெயரில் ஒருநாட்டை உருவாக்க வேண்டுமென மாநாடு கோரிக்கை விடுத்தது. இந்தியாவின் முஸ்லீம்களுக்கான ஒரே அமைப்பு முஸ்லீம் லீக் எனவும், காங்கிரஸிற்கு வழங்கக்கூடிய சலுகைகள் முஸ்லீம் லீகிற்கும் வழங்கவேண்டும் எனவும் முகமது அலி ஜின்னா கோரிக்கை விடுத்தார். "பிரித்து ஆளுதல்" என்ற தத்துவத்தின் அடிப்படையில் பிரிட்டீஷ் அரசாங்கம் முஸ்லீம் லீகின் செயல்பாடுகளுக்கு அதிக ஆதரவு கொடுத்தது.

இந்தியாவின் புதிய வைஸ்ராயாக நியமிக்கப்பட்ட மவுண்ட் பேட்டன் பிரபு காங்கிரஸ் மற்றும் அகில இந்திய முஸ்லீம் லீகின் தலைவர்களுடன் நீண்ட விவாதம் நடத்தி சமரச நடவடிக்கைகளைத் தீர்மானித்தார். பிரிட்டீஷ் இந்தியாவைப் பிரித்தல், சுதந்திர இந்தியாவோடு புதிய ஒரு நாடாக பாகிஸ்தானை உருவாக்குதல் என்ற தீர்மானத்தை மவுண்ட் பேட்டன் பிரபு அறிவித்தார்.

வரலாற்றில் ஈடு இணையற்ற இந்திய விடுதலைப் போர் ஒரு பொதுமக்கள் போராட்டமாக இருந்தது. பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த மக்களைப் பிரிட்டீஷ் ஆட்சிக்கு எதிராக ஒருங்கிணைந்து செயல்பட வைக்கக் காந்திஜியால் முடிந்தது. வாய்மை அகிம்சை போன்ற கொள்கைகளை அடிப்படையாகக் கொண்ட அமைதி முறையிலான பல்லாண்டு காலம் நீண்ட போராட்டத்தின் வாயிலாகப் பிரிட்டீஷ் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வரக் காந்திஜியின் தலைமையால் இயன்றது.

## சுதந்திர விடியலை நோக்கி...

1947 ஆகஸ்ட் 14 நடு இரவில் ஜவஹர்லால் நேரு அறிவித்தார். "பல வருடங்களுக்கு முன்னர் நாம் விதியோடு ஒரு நேர்காணல் நடத்தினோம். அந்த உறுதிமொழி முழுமையானதல்ல எனினும் சிறப்பாக நாம் அதை நிறைவேற்றும் நேரம் ஆகி வந்துள்ளது. இன்று நடு இரவு மணி ஒலிக்கும் போது இந்தியா விழித்தெழும். புது வாழ்க்கையை நோக்கியும் சுதந்திரத்தை நோக்கியும்; அந்த நிமிடம் இதோ வந்துவிட்டது. இந்த நிமிடம் வரலாற்றில் அபூர்வமானதாகும். பழமையிலிருந்து நாம் புதிய உலகத்திற்கு வருகிறோம். ஒரு சகாப்தம் முடிவடைகிறது. நெடுங்காலமாக அடித்து ஒடுக்கப்பட்ட ஒரு நாட்டின் ஆத்மா ஒலிக்கிறது. இந்த அபூர்வ நிமிடத்தில் இந்தியாவின் இங்குள்ள மக்களின் மனித குலத்தின் மொத்தமான சேவைக்காகத் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு நாம் உறுதியெடுக்கலாம்'. 1947 ஆகஸ்ட் 15-ற்கு சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமராக ஜவஹர்லால் நேரு பொறுப்பேற்றார்.



ஜவஹர்லால் நேரு

ஒரு மக்கள் கூட்டத்தின் கனவு நனவாகியது.

***

## தொகுப்பு

- இந்திய தேசியப் போராட்டத்தின் மூன்றாம் கட்டம் (1919 முதல் 1947 வரை) காந்தி சகாப்தம் என்றழைக்கப்படுகிறது.
- இந்தியாவின் சுதந்திரப்போராட்டத்தைப் பொது மக்கள் போராட்டமாக மாற்றுவதில் காந்தியடிகளின் தலைமை முக்கியப் பங்கு வகித்தது.
- வாய்மை, அகிம்சை போன்றவையே காந்தியடிகளின் அடிப்படைத் தத்துவங்களாகும்..
- ஒத்துழையாமை இயக்கம், சட்ட மறுப்பு இயக்கம், வெள்ளையனே வெளியேறு போராட்டம் போன்றவை காந்தியடிகளின் தலைமையில் இந்திய தேசிய காங்கிரஸ் நடத்திய முக்கியமான பொதுமக்கள் போராட்டங்களாகும்.
- தீண்டாமைக்கு எதிரான போராட்டத்தின் பகுதியாகக் கேரளத்தில் வைக்கம் சத்தியாக்கிரகமும், குருவாயூர் சத்தியாக்கிரகமும் நடந்தன.
- காந்தியடிகளின் போராட்ட முறையிலிருந்தது மாறுபட்ட பல போராட்ட முறைகளும் இந்திய தேசிய இயக்கத்தில் காணப்பட்டன.
- ஆயுதப் போராட்டங்களின் வாயிலாக இந்தியா விடுதலை பெற முடியும் என்ற இலட்சியத்தோடு சுபாஷ் சந்திரபோஸ் இந்திய தேசியப் படையின் தலைமையில் செயல்படத்துவங்கினார்.
- 1947 ஆகஸ்ட் 15 –ஆம் நாள் இந்தியாவிற்கு சுதந்திரம் கிடைத்தது. பிரிட்டிஷ் – இந்தியா, இந்தியா – பாகிஸ்தான் என இரு நாடுகளாகப் பிரிக்கப்பட்டது.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- 1919 முதல் 1947 வரையிலான சுதந்திரப் போராட்டக் காலத்தைக் காந்திய சகாப்தம் என நிறுவுகின்றனர்.
- இந்திய சுதந்திரப் போராட்டத்தில் காந்தியடிகளின் போராட்ட முறைகளையும் அதன் தனித்தன்மைகளையும் தாக்கத்தையும் புரிந்துகொள்கின்றனர்.
- பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பது ஒவ்வொரு இந்தியனுடைய கடமையாகும் எனப் புரிந்துகொள்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- 1857 முதல் இந்திய சுதந்திரப் போராட்டம் முதல் 1942–ஆம் ஆண்டு வெள்ளையனே வெளியேறு போராட்டம் வரையிலான போராட்ட முறைகளை மதிப்பிட்டு குறிப்பு தயாரிக்கவும்.
- கேரளத்தில் நடந்த சுதந்திரப் போராட்டங்கள் பற்றிக் குறிப்பு தயாரிக்கவும்.

KT 605-3/Social Science -7(T) Vol-2

- அட்டவணையை நிரப்புக

| சுதந்திரப் போராட்ட நிகழ்வுகள் | பகுதிகள் | மாநிலங்கள் |
|---|---|---|
| ஜாலியன்வாலாபாக் படுகொலை | அமிர்தஸரஸ் | ........................................... |
| ........................................... | மலபார் | கேரளம் |
| ........................................... | சம்பாரன் | ........................................... |
| துணி ஆலைப்போராட்டம் | ........................................... | குஜராத் |
| உப்புச் சத்தியாக்கிரகம் | பையன்னூர். | ........................................... |

## தொடர் செயல்பாடுகள்



1. காந்தியடிகளோடு தொடர்புடைய நாம் அனுசரிக்கும் சில தினங்கள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.




இந்நாட்களின் முக்கியத்துவத்தைக் கண்டுபிடிக்கவும்.

- ஒவ்வொரு தினத்தையும் சிறப்பிப்பதற்காகப் பள்ளிகளில் நடத்தும் செயல்பாடுகளை அட்டவணைப்படுத்தவும்.

- சுதந்திரப்போராட்டத் தலைவர்களின் படத்தொகுப்பு தயாராக்கவும்.
- ‘சுதந்திரப் போராட்ட வினாடி வினா நடத்தவும்.
- காந்தியடிகளின் படமுள்ள தபால்தலைகளைச் சேகரித்து ஒரு படத்தொகுப்பு தயாரிக் கவும்.
- காந்தியடிகளைப் பற்றிய கவிதைகளைச் சேகரித்து வகுப்பில் வெளியிடுதல்
- காந்தியடிகளின் கருத்துகளையும் காந்தியடிகளைப் பற்றி தேசியத் தலைவர்களின் மேற்கோள்களையும் சேகரிக்கவும்
- சுதந்திரப் போராட்டத்துடன் தொடர்புடைய உங்களது வட்டாரத்தில் நடைபெற்ற நிகழ்வுகளைப் பற்றி வயதானவர்களிடத்தில் கேட்டுத் தகவல்களைச் சேகரிக்கவும்
- சுதந்திரப்போராட்ட வீரர்களோடு நேர்காணல் நடத்தவும்
- சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய நிகழ்வுகளை நடித்துக்காட்டவும்.
- காந்தியடிகளின் திரைப்படங்களைப் பள்ளிக்கூடத்தில் காண்பிக்கலாம்
- காந்தியடிகளின் கேரள வருகையைப் பற்றித் தகவல்கள் சேகரிக்கவும்.
- காந்தியடிகளின் தலைமையில் நடைபெற்ற தேசிய போராட்டங்கள் - என்ற தலைப்பில் கருத்தரங்கு நடத்தவும்
- சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் சிறப்புப் பெயர்களை அட்டவணை வடிவில் தயாரிக்கவும்.

| சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் | சிறப்புப் பெயர்கள் |
|---|---|
|  | மகாத்மா |
|  | |
|  | |
|  | இந்தியாவின் வானம்பாடி |
|  | |



# 10 நமது அரசியலமைப்பு

### நாடு வண்ணமயமாக குடியரசு தினத்தைக் கொண்டாடியது

புதுடெல்லி: நாடு 65ஆவது குடியரசு தினத்தை வண்ணமயமாகக் கொண்டாடியது. நாட்டிற்காக உயிரையே தியாகம் செய்த இராணுவ வீரர்களுக்கு அஞ்சலி செலுத்திக் கொண்டு அமர்ஜவான்ஜோதியில் பிரதமர் மலர்வளையம் வைத்தார். சிறப்புவிருந்தினருடன் வந்த குடியரசுத் தலைவர் நாட்டின் தேசியக் கொடியை ஏற்றினார். தொடர்ந்து விருதுகளை வழங்கவும், ராணுவ வீரர்களின் மரியாதையை ஏற்றுக்கொள்ளவும் செய்தார். ராஜ்பத் வழியாகச் சென்ற குடியரசு தின விழா ஊர்வலம் இந்தியாவின் சக்தியையும் பண்பாட்டுப் பன்மையையும் எடுத்துரைப்பதாக இருந்தது. நவீன யுத்தக்கருவிகள், பல்வேறு மாநிலங்களைச் சார்ந்த நிலையான கருத்துக் காட்சிகள் (ப்ளோட்டுகள்), பல்வேறு இராணுவக் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றால் நிரம்பியிருந்தது குடியரசு தினவிழா அணிவகுப்பு.



குடியரசு தினவிழா கொண்டாட்டம் – பல்வேறு காட்சிகள்

இந்தியாவின் தலைநகரான புதுடெல்லியில் நடைபெற்ற கம்பீரமான குடியரசுத் தினவிழா கொண்டாட்டங்களின் படங்களும் பத்திரிகைச் செய்திகளையும் கவனித்தீர்கள் அல்லவா? நாம் குடியரசு தின விழாவை என்று கொண்டாடுகிறோம்? குடியரசு என்றால் என்ன?

எல்லா வருடமும் ஜனவரி 26-ஆம் நாளைக் குடியரசுத் தினமாகக் கொண்டாடுகிறோம். 1950 ஜனவரி 26 அன்று இந்திய அரசியலமைப்புச் சட்டம் அதிகாரபூர்வமாக நிலவில் வந்தது. அரசியலமைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்ததோடு இந்தியா ஒரு குடியரசாக மாறியது. தேர்ந் தெடுக்கப்படும் ஒருவர் அரசியல் தலைவராகும் முறையே குடியரசு. இந்தியாவின் அரசியல் தலைவரான குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படும் நபராக இருக்கவேண்டுமென அரசியலமைப்பு கூறுகிறது.

இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவர் யார்? கண்டுபிடியுங்கள்.


டாக்டர் ராஜேந்திரபிரசாத் அரசியலமைப்பு சட்டத்தில் கையொப்பமிடுகிறார்

## அரசியலமைப்பு (Constitution)

அரசியலமைப்பு என்பது என்ன? ஒரு நாட்டின் கருத்துகளும் தத்துவங்களும் சட்டங்களும் அடங்கிய ஆட்சிப் பிரமாண மாகும் அரசியலமைப்பு. நாட்டினுடைய ஆட்சி நடத்து வதற்கான சட்டங்கள் இயற்றுவது அரசியலமைப்பிலி ருந்தாகும். எந்த ஒரு நாட்டிலும் ஆட்சி நடைபெறுவது ஒரு அரசியலமைப் பின் அடிப்படையிலாகும்.

மக்களாட்சி நாடுகளில் மக்களின் விருப்பத்திற் கேற்ப அரசியலமைப்பு சட்டத்தை உருவாக்குவதும் அதில் மாற்றங்கள் ஏற்படுத்துவதும் நடைபெறும். முற்றிலும் குடியரசு முறையிலான செயல்கள் வழியே இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவானதென்பது நமக்குப் பெருமைக்குரியது. சுதந்திரப் போராட்டங்களும் இந்தியாவிலெங்கும் நடைபெற்ற விவாதங்கள், கலந்துரையாடல்கள் இவற்றின் பலனாகத் தோன்றிய கருத்துகள் மற்றும் கற்பனைகளின் பிரதிபலிப்பே இந்திய அரசியலமைப்புச் சட்டம்.

### இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உள்ளடக்கம்



- முன்னுரை (Preamble)
- 395 பிரிவுகள் (Articles)
- 12 அட்டவணைகள் (Schedules)
- 22 பகுதிகள் (Parts)
- 98 சட்டத்திருத்தங்கள் (மே மாதம் 2013 வரை) (Ammendments)

2 வருடமும் 11 மாதமும் 17 நாட்களும் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உருவாக்கத் தேவைப்பட்டது.




## இந்திய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கம்

அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை உருவாகியதன் வழியாக இந்திய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் செயல்பாடு தொடங் கியது. அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் சபையில் முதல் மாநாடு 1946 டிசம்பர் 9-ஆம் தேதி அன்று கூடப்பட்டது. டாக்டர் சச்சிதானந்த சின்கா என்பவர் தற்காலிக தலைவராக இருந்தார். பின்னர் டாக்டர் ராஜேந்திர பிரசாத் அரசிய லமைப்புச் சட்ட உருவாக்கச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். பல்வேறு குழுக்களை உருவாக்கி அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் சபையின் செயல்பாடு தொடங்கப்பட்டது. இத்தகைய குழுக்களில் ஒன்றாகும் மாற்றி யமைக்கப்பட்ட அரசியலமைப்பு தயார் செய்வதற்காக உருவாக்கப் பட்ட அரசியலமைப்பு சட்டவரைவுக் குழு. இந்தக் குழுவின் தலைவர் டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஆவார்.


டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர்

அவர் இந்திய அரசியலமைப் பின் சிற்பி என அழைக் கப்படுகிறார்.

அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்க சபை அங்கீகரித்த பல்வேறு குழுக்களின் அறிக்கையின் அடிப்படையில் டாக்டர் அம்பேத்கரின் தலைமையிலான குழு அரசிய லமைப்பின் ஒரு சட்டவரைவை (draft) தயார் செய்தது. விரிவான கலந்துரையாடலுக்கும் விவாதங்களுக்கும் பின் அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை 1949 நவம்பர் 26-ஆம் நாள் அரசியலமைப்புச் சட்டத்திற்கு அங்கீகாரம் கொடுத்தது இந்த நாளை அரசியலமைப்புச் சட்ட தினமாகக் கொண்டாடுகிறோம்.ஆனால் இந்திய அரசியலமைப்புச் சட்டம் சட்டரீதியாக 1950 ஜனவரி 26-இல் நடைமுறைக்கு வந்தது. அன்று முதல் இந்தியா ஒரு முழுமையான ஜனநாயக குடியரசாக மாறியது.


ஜவஹர்லால் நேரு அரசியல் அமைப்புச் சட்டத்தில் கையெழுத்திடுகிறார்


எந்தெந்தக் கட்டங்கள் வழியாக இந்தியாவின் அரசியலமைப்பு உருவானது?

## அரசியலமைப்புச் சட்ட முன்னுரை (Preamble)

இனி நாம் அரசியலமைப்பின் முன்னுரையைப் பரிசோதிக்கலாம்.

### இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம்

**முன்னுரை**

இந்தியாவின் மக்களாகிய நாம் இந்தியாவை ஒரு (மேலாண்மை மிக்க
சமத்துவ, மதசார்பற்ற மக்களாட்சி குடியரசாக) உருவாக்கவும் அங்குள்ள
குடிமக்கள் அனைவருக்கும்,
சமூகமும் பொருளாதாரமும், அரசியலுமான நீதியும்
சிந்தனைக்கும்,கருத்து வெளியீட்டிற்கும்,நம்பிக்கைக்கும்,மதச்சடங்குகளுக்கும்
வழிபாட்டிற்கும் உள்ள சுதந்திரமும்
பொறுப்புகளிலும், வாய்ப்புகளிலும் சமத்துவமும் அடையச்செய்தல்
அவர்களுக்கிடையில்
தனிநபர் அந்தஸ்தும் ( நாட்டின் ஐக்கியமும், பிரிவற்ற நிலையும்
உறுதிப்படுத்தி சகோதரத்துவத்தை நிலைநிறுத்தவும்.
முக்கியத்துவம் வழங்கித் தீர்மானிக்கப்பட்டுள்ளதால்,
நமது அரசியலமைப்பு சட்ட உருவாக்கச் சபையில் இந்த 1949
நவம்பர் 26-ஆம் நாள் இந்த அரசியலமைப்பை ஏற்றுகொள்ளவும்,
சட்டப்படி நமக்கு நாமே நடைமுறைப்படுத்தவும் செய்கிறது.


---

1976-ல் அரசியலமைப்பு சட்டம் (42 ஆம் திருத்தம்) பிரிவு 2-ன்
படி மேலாண்மை மக்களாட்சி குடியரசு என்பதற்குப் பதிலாக
சேர்த்தது (3.1.1977 முதல் நடைமுறையில்)மேற்குறிப்பட்ட சட்டம்
8-ஆம் வகுப்பின் படி நாட்டின் ஒற்றுமை என்பதற்குப்
பதிலாக சேர்த்தது (3.1.1977 முதல் நடைமுறையில்)

நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கருத்துகளும் மதிப்புகளும் பிரதிபலிப் பதாகும் அதன் முன்னுரை.

அரசியலமைப்புச் சட்டத்தில் முன்னுரையை இலக்கிய நடையில் எழுதியது இந்தியாவின் முதல் பிரதமரான ஜவஹர்லால் நேரு ஆவார். இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் சத்தும் வாசலுமாகும் முன்னுரை எனக் கூறலாம். அரசியலமைப்புச் சட்டத்தின் நோக்கமும் இலக்குகளும் முன்னுரையில் குறிப்பிடவும் சரியாக விளக்கப்பட்டும் உள்ளது

அரசியலமைப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள அடிப்படை இலக்குகளை விளக்கும் படத்தைப் பாருங்கள்.





முன்னுரையிலிருந்து அரசியலமைப்பின் அடிப்படை இலக்குகளைத் தெரிந்துகொண்டீர்கள் அல்லவா? இவற்றைக் குறித்து விளக்கமாக வகுப்பில் கலந்துரையாடுங்கள். முன்னுரையில் நீதி, சமத்துவம், சுதந்திரம் சகோதரத்துவம் போன்ற குடிமக்கள் உறுதிசெய்யவேண்டிய இலக்குகளும் உட்படுத்தப்பட்டுள்ளன.

இந்தியாவின் தேசிய சுதந்திரப்போராட்ட காலத்தில் நமது தலைவர்கள் எடுத்துரைத்த எந்தெந்தச் கருத்துகள் அரசியலமைப்புச் சட்ட முன்னுரையில் உட்படுத்தப்பட்டுள்ளன?.

## இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய சிறப்பம்சங்கள்

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முக்கிய சிறப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

- பாராளுமன்ற ஆட்சி முறை
- அடிப்படை உரிமைகள்
- அடிப்படை கடமைகள்
- வழிநடத்தும் நெறிமுறைகள்




- சட்ட ஆட்சி
- இணைந்தநிலை
- எழுதப்பட்ட அரசியலமைப்பு
- சுதந்திரமான நீதி நியாய நிலை

ஒவ்வொரு சிறப்பினைப் பற்றியும் விளக்கமாகப் பார்க்கலாம்.

### பாராளுமன்ற ஆட்சிமுறை

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நன்கொடையாகத் தந்தது பாராளுமன்ற மக்களாட்சி முறையை ஆகும். பாராளுமன்ற மக்களாட்சிமுறை என்பது என்ன? நாட்டின் ஆட்சிக்காக மக்கள் தங்களுடைய பிரதிநிதிகளை வயதுநிரம்பியவர்கள் வாக்குரிமை வழியாகத் தேர்வு செய்கிறார்கள். தேர்வு செய்யப்பட்டவர்கள் இணைந்து ஒரு மக்கள் பிரதிநிதி சபையாகச் செயல்படுகிறார்கள். இந்த பிரதிநிதி சபை பாராளுமன்றம் என்ற பெயரில் அறியப்படுகிறது. மக்கள் தேர்வு செய்த பிரதிநிதி சபை வழியாக ஆட்சி செய்யும் முறையே பாராளுமன்ற ஆட்சிமுறை. சட்டம் இயற்றுதலே பாராளுமன்றத்தின் முக்கிய கடமையாகும்.

இந்திய பாராளுமன்ற ஆட்சி முறைப்படி மத்திய, மாநிலங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதி நிதிசபைகள் உள்ளன. மத்திய பாராளுமன்றம் போன்றே மாநிலங்களில் சட்டமன்றங்கள் உள்ளன. பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இழந்தால் பிரதமரும் பிற அமைசசர்களும் பத வியில் தொடர முடியாது. அதைப்போன்று மாநிலச் சட்டசபையில் முதல்வரும் பிற அமைச் சர்களும் பெரும்பான்மையின்றித் தொடர முடியாது. ஆட்சியாளர்கள் மீது மக்களின் அதிகா ரமும் கட்டுப்பாடும் அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் வழியாகப் பாராளுமன்ற ஆட்சி முறை உறுதிப்படுத்துகிறது. இதற்கு மாறாக மக்கள் நேரடியாக ஆட்சித்தலைவர்களைத் தேர்ந் தெடுக்கும் முறையே குடியரசு தலைவராட்சி முறை. எ.கா. அமேரிக்க ஐக்கிய நாடுகள், பிரான்சு போன்றவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.



குடியரசுத் தலைவராட்சி முறையிலிருந்து பாராளுமன்ற ஆட்சிமுறை எவ்வாறு வேறுபட்டுக் காணப்படுகிறது?

## அடிப்படை உரிமைகள் (Fundamental Rights)

மக்களாட்சியின் வெற்றிக்கும் குடிமக்களின் முழுமையான முன்னேற்றத்திற்கும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உறுதி செய்யும் உரிமைகளே அடிப்படை உரிமைகள் ஆகும். அடிப்படை உரிமைகள் குடிமக்களுக்கு மறுக்கப்படாமலிருக்க அரசுக்குப் பொறுப்புண்டு. அடிப்படை உரிமைகள் மறுக்கப் படும்போது குடிமகனுக்கு உயர் நீதிமன்றங்களையோ உச்சநீதிமன்றத்தையோ அணுகலாம். அத்தகைய சூழ்நிலைகளில் நீதிமன்றம் குடிமகனின் உரிமையைப் பாதுகாப்பதற்காகச் சில ஆணைகளை வெளியிடுவதற்கான உரிமையை அரசியலமைப்பு அளிக்கிறது. பொதுப்பள்ளிக்கூடங்களில் இருக்கக்கூடிய இந்தப் படத்தை நீங்கள் கவனித்திருப்பீர்கள் அல்லவா?



### அடிப்படை உரிமைகள்

- சமத்துவத்திற்கான உரிமை
- சுதந்திரத்திற்கான உரிமை
- சுரண்டலுக்கெதிரான உரிமை
- மதசுதந்திரத்திற்கான உரிமை
- பண்பாட்டிற்கும், கல்விக்குமான உரிமை
- அரசியலமைப்புச் சட்டப்படித் தீர்வுகாணும் உரிமை




இந்தப் படம் எதைக் குறிப்பிடுகிறது? 6 முதல் 14 வயது வரையிலான எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமும் கட்டாயமுமான கல்வி அடிப்படை உரிமையாகும். அரசியலமைப்புப் பிரிவு 21(a)-இல் கல்வியுரிமை உட்படுத்தப்பட்டுள்ளது. எல்லாக் குழந்தைகளுக்கும் தரமான ஆரம்பக் கல்வியை உறுதிசெய்வது நாட்டின் கடமையாகும். இந்தக் கடமையை நிறைவேற்றும் அரசின் திட்டங்களில் ஒன்றான சர்வ சிக்க்ஷா அபியானின் லோகோ (logo) மேலே கொடுக்கப்பட்டுள்ளது.

- வாசிப்புக் கருவிகளின் உதவியுடன் தனிநபர் உரிமைகளைக் குறித்து வகுப்பில் ஒரு கருத்தரங்கு நடத்துங்கள். கருத்தரங்கு அறிக்கை தயார் செய்யுங்கள்.


## அடிப்படைக் கடமைகள் (Fundamental Duties)

இந்திய அரசியலமைப்பில் குடிமகனின் உரிமைகளுக்கு உறுதி அளித்ததைப் போன்று குடிமகனின் கடமைகளும் கூறப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடிமகனும் கட்டாயமாகச் செய்யவேண்டிய கடமைகளையே அடிப்படைக் கடமைகள் என்ற பெயரில் அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. அரசியல் நிறுவனங்களையும் அரசியலமைப்பையும் இயற்கையையும் பாதுகாக்கவும் இந்தியாவின் சிறந்த பண்பாட்டு பாரம் பரியத்தைப் பாதுகாக்கவும் அடிப்படைக் கடமைகள் குடிமக்களைத் தூண்டுகின்றன. ஒவ்வொரு குடிமகனும் உரிமைகளை அனுபவிப்பதுடன் கடமைகளை நிறைவேற்றவும் செய்யும்போது சமூகம் எளிதாக முன்னோக்கிச் செல்லும். உரிமைகளும் கடமைகளும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை. கடமைகள் இல்லாமல் உரிமைகள் நிலைநிற்பதில்லை. இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் தரப்பட்டுள்ள அடிப்படைக் கடமைகள் முழுவடிவத்தில் உங்கள் பாடபுத்தகங்களில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றைக் கண்டுபிடித்துப் பகுப்பாய்வு செய்து குறிப்பு தயார் செய்யுங்கள்.

## வழிகாட்டும் நெறிமுறைகள் (Directive Principles of State Policy)

கீழே குறிப்பிட்டுள்ள செய்தித்துணுக்கைக் கவனியுங்கள்.




இந்தச் செய்தித் துணுக்குகளைப் பகுப்பாய்வு செய்தால் கிடைக்கக்கூடிய வழிகாட்டும் நெறி முறைகள் எவையெனப் பார்க்கலாம்.

1. ஆண் பெண் வேறுபாடின்றி அனைவருக்கும் ஒரே வேலைக்குச் சமமான கூலி வழங்க வேண்டும்.
2. நாட்டிலுள்ள காடுகளையும் வனவிலங்குகளையும் பாதுகாத்துச் சுற்றுப்புறத்தையும் பாது காக்க வேண்டும்.
3. தேசிய முக்கியத்துவமும் வரலாற்று மதிப்புமிக்கதுமான எல்லா நினைவுச் சின்னங்களை யும் பாதுகாக்கவேண்டும்
4. பொருளாதாரச் சமூக அரசியல் நீதியில் பொருத்தமான ஒரு நிலையை உருவாக்கி மக்களின் நலனை உறுதிசெய்யவேண்டும்.

சமூக நீதியை உறுதிசெய்வதற்குத் தேவையான சில தத்துவங்கள் நாட்டின் ஆட்சிக்கான குறிப்பு களாக நமது அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ளன. இவையே வழிகாட்டும் நெறிமுறைகள். அரசியலமைப்பில் உட்படுத்தப்பட்டுள்ள சில வழிகாட்டும் நெறிமுறைகள்தான் மேலே குறிப்பிடப் பட்டுள்ளன.

மக்களின் நலனுக்காகவும் வளர்ச்சிக்காகவும் நாட்டின் முன்னேற்றத்திற்காகவும் வழிகாட்டும் நெறி முறை களைப் பின்பற்ற வேண்டும். சட்ட உருவாக்கச் செயல்வழியாக அரசு வழிகாட்டும் நெறி முறைகளை நடைமுறைப்படுத்த முயலுகிறது. அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டால் நீதிமன்றம் வழியாகச் செயல்படுத்தலாம் என முன்னரே குறிப்பிட்டோம் அல்லவா? ஆனால் வழிகாட்டும் நெறிமுறை களை நடைமுறைப்படுத்த நீதிமன்றத்தை அணுகமுடியாது. அரசு மற்றும் மக்களின் விருப்பங்களின் அடிப்படையில் இவை நடைமுறைப்படுத்த வேண்டும்.



இந்திய மக்களின் நல்வாழ்வும் முன்னேற்றமும் உறுதி செய்வதற்கு வழிகாட்டும் நெறிமு றைகள் எவ்வாறு உகந்ததாகும்?

### சட்ட ஆட்சி

"சட்டத்திற்கு முன் அனைவரும் சமமாகும்."

இதன் பொருள் என்ன? மக்களாட்சி முறையில் யாரும் சட்டத்திற்குப் புறம்பானவர்கள் அல்ல. அனைவரும் சட்டத்திற்கு உட்பட்டவர்கள் என்ற கண்ணோட்டத்தில் மக்களாட்சி சிந்தனையின் வளர்ச்சியுடன் சட்ட ஆட்சி என்ற கருத்து உயர்ந்து வந்தது.

சட்ட ஆட்சி அதன் திருந்தியதும் நவீனமானதுமான வடிவில் உருவானது. ஆங்கில அரசிய லமைப்பின் தனிச் சிறப்பின் அடிப்படையில் ஆகும். எல்லா நவீன மக்களாட்சி நாடுகளும் இன்று இந்தக் கருத்தை அடிப்படையாக்குகிறது. நமது அரசியலமைப்பு இந்தக் கருத்தை முழுமையாக உட்கொள்ளவும் நடைமுறைப்படுத்தவும் செய்கிறது.

## ❑ கூட்டாட்சி முறை (Federal System)

**உணவு பாதுகாப்பு மசோதா அங்கீகரிக்கப்பட்டது**

புது டில்லி : உணவு பாதுகாப்பு மசோதாவை மத்திய அரசு அங்கீகரித்தது. மாநில அரசுகளின் மற்றும் வட்டார சுய ஆட்சி நிறுவனங்களின் பங்கை உறுதி செய்வதற்கான வரைவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டது.

செய்தியை வாசித்தீர்கள் அல்லவா?

2013-இல் பாராளுமன்றம் அங்கீகரித்த சட்டமான ஒரு முக்கிய மசோதாவாகும் உணவு பாதுகாப்பு மசோதா. இந்தியாவிலுள்ள எல்லா மக்களுக்கும் உணவு கிடைப்பதை உறுதிசெய்வதே இதன் நோக்கம். மத்திய அரசினுடைய இந்தச் சட்ட மசோதா மாநிலங்களின் உதவியுடன் நடைமுறைப் படுத்தப்படுகிறது. மாநில அரசுகள் உள்ளாட்சி அமைப்புகள் வழியாக நடைமுறைப்படுத்த முயற்சி செய்கிறது. இவ்வாறு மத்திய மாநில வட்டார அரசுகளுக்கு அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொடுக்கும் ஒரு ஆட்சிமுறையே இந்தியாவில் உள்ளது. இது கூட்டாட்சி முறை (Federal System) என அழைக்கப்படுகிறது. கூட்டாட்சி முறையிலிருந்து மாறுபட்டு எல்லா அதிகாரத்தையும் மத்திய அர

சிடம் நிலைநிறுத்தினால் அதை ஒற்றையாட்சிமுறை (Unitary System) என்கின்றனர். பரந்ததும் வட்டார வேற்றுமைகள் நிறைந்ததுமான ஒரு நாடாகும் இந்தியா. இந்த வேற்றுமையை உட்கொண்டு நாட்டை ஒன்றாக நிலைநிற்கச் செய்ய கூட்டாட்சி முறை உதவுகிறது.

## ❑ எழுதப்பட்ட அரசியலமைப்பு (Written Constitution)


நமது அரசியலமைப்பு ஒரு புத்தகவடிவில் எழுதி தயாரிக்கப்பட்டுள்ளதாகும். உலகிலேயே எழுதப் பட்ட மிகப் பெரிய அரசியலமைப்பாகும் இந்தியாவினுடையது. உலகில் எழுதப்பட்டதும் எழுதப் படாததுமான அரசியல் அமைப்புகள் நடைமுறையில் உள்ளன. எழுதப்படாத அரசியலமைப்பு என்பதற்குப் புத்தகவடிவில் தயாரிக்கப்படாத ஒரு சட்டம் என்பது பொருள். இவ்வாறான அரசியலமைப்புகள், ராஜகட்டளைகள், நீதிமன்ற தீர்ப்புகள், பழக்க வழக்கங்கள், நடைமுறை வழக்கம் போன்ற பல வடிவங்களில் நிலைநிற்கின்றன.

| எழுதப்பட்ட அரசியலமைப்பு | எழுதப்படாத அரசியலமைப்பு |
|---|---|
| • இந்தியா<br>• அமெரிக்கா ஐக்கிய நாடுகள்<br>• பிரான்சு<br>• ஆஸ்திரேலிய<br>• பிரேசில்<br>• தென் ஆப்பிரிக்கா | • பிரிட்டன்<br>• இஸ்ரேயேல்<br>• நியூசிலாந்து |


மேலே கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையைக் கவனியுங்கள்.
இந்த நாடுகளை உலக வரைபடத்தில் கண்டு பிடிக்க முயற்சி செய்யுங்கள்.

## ❑ சுதந்திர நீதி நியாய அமைப்பு(Independent Judiciary)

குடிமக்களின் உரிமைகளைப் பாதுகாக்கச் சுதந் திரமான ஒரு நீதி நியாய அமைப்பு நமது நாட்டிற்கு உள்ளது. குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்கவும், சட்டப் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் செய்வதே நீதி நியாய அமைப்பின் முக்கிய பொறுப்பு. ஆட்சியமைப்பின் பிற இரு பிரிவு களாகிய சட்டமியற்றும் துறையின் (Legislative) மற்றும் சட்ட செயலாக்கத் துறையின் (Executive) ஆதிக்கத்திலிருந்து நீதிநியாயப் பிரிவு (Judiciary) சுதந்திரமானதாகும். இத்தகைய சுதந்திரமான நீதிநியாய அமைப்பு இந்திய அரசியலமைப்பின் சிறப்பம்சமாகும்.



கீழே கொடுக்கப்பட்டுள்ள இந்திய நீதிநியாய அமைப்பின் அதிகாரப் படிநிலைகளைக் கவனி யுங்கள்




இந்தியாவிலுள்ள மிகப் பெரிய நீதிமன்றம் எது?

மாநிலங்களின் மிக உயர்ந்த நீதிமன்றம் எது?

சிவில் குற்றங்களை விசாரணை செய்யும் மிகச் சிறிய நீதிமன்றம் எது?

கிரிமினல் குற்றங்களோடு தொடர்புடைய கீழ் நீதிமன்றம் எது?

நீதிமன்றங்களைக் குறித்து அதிகமாகத் தெரிந்துகொள்ள உங்கள் பகுதியிலுள்ள ஒரு வழக்கறி ஞருடனான நேர்காணலுக்கு ஏற்பாடு செய்யவும். அதற்குப் பொருத்தமான வினாநிரலை முன்கூட்டியே தயார் செய்யக் கவனிப்பீர்கள் அல்லவா?

## அரசியலமைப்புச் சட்டத்திருத்தம்(Constitutional Amendment)

**கல்விக்கான உரிமை**

ஆறு முதல் பதினான்கு வயது வரையிலான எல்லாக் குழந்தைகளுக் கும் அரசு, இலவசக் கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்ற நிலை அடிப்படை உரிமையின் பாகமாக மாற்றப்பட்டது.

பத்திரிகைச் செய்தியைக் கவனித்தீர்கள் அல்லவா?

இந்திய அரசியலைப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்தபோது கல்விக்கான உரிமை என்பது தனிநபர் உரிமையாக இருந்ததா? பின்னர் அடிப்படை உரிமையாக்கப்பட்டது என நாம் முன்னரே கற்றோம் அல்லவா? அப்படி எனில் கல்வியைக் குறித்த விமர்சனம் அரசியல மைப்பில் எங்கே உள்ளது 2002-இல் பாராளுமன்றத்தில் வெளியிட்ட அரசியலமைப்பு திருத்தச் சட்டத்தின் வழியாகத்தான் கல்வி உரிமை அடிப்படை உரிமையானது.

அரசியலமைப்பில் பிற்சேர்க்கையும், நீக்குதலும் நடைபெறுவது வழக்கம். இதை அரசியலமைப்புச் சட்டத் திருத்தம் எனக் கூறலாம். சூழ்நிலைகளுக்கேற்ப அரசியலமைப்பில் மாற்றங்களைச் செய்ய பாராளுமன்றத்திற்கு உரிமை உண்டு. ஆனால் அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைத் தத்துவங்களை ஒருபோதும் மாற்ற இயலாது.

சொத்துரிமை அரசியலமைப்புச் சட்டத்தில் அடிப்படை உரிமையாக இருந்தது. ஆனால் பின்பு அது 44-ஆம் அரசியலமைப்புச் சட்ட திருத்தத்தின் வழியாக அடிப்படை உரிமையிலிருந்து மாற்றப்பட்டது.



காலத்திற்கேற்ப மாற்றங்கள் ஏற்படுத்த அரசியலமைப்புச்சட்டத் திருத்தம் எவ்வாறு உதவுகிறது?

இந்தியாவின் எல்லாக் குடிமக்களும் அமைப்புகளும் நிறுவனங்களும் அரசியலமைப்புச் சட்டத்திற்கேற்பச் செயல்பட வேண்டும். இந்தியர்களாகிய நாம் ஒவ்வொருவரும் அரசியலமைப்புச் சட்டத்திற்குக் கட்டுப்பட்டு வாழவும் அரசியலமைப்புச் சட்டத்தைப் பாதுகாக்கவும் கடமையுடையவர்கள் ஆகிறோம்.

## தொகுப்பு

- ஒரு நாட்டின் ஆட்சியோடு தொடர்புடைய சட்டங்கள், அடிப்படை தத்துவங்கள் மற்றும் கருத்துகளின் ஒருங்கிணைப்பே அரசியலமைப்பு.
- உலகில் மிகப்பெரிய எழுதப்பட்ட அரசியல் அமைப்பு இந்தியவினுடையது.
- எழுதப்பட்டதும் (written) எழுதப்படாததுமான (unwritten) அரசியலமைப்புகள் உலக நாடுகளில் உள்ளன.
- அரசியலமைப்புச் சட்ட உருவாக்க சபை நிரந்தரமான ஒரு செயல்முறை வழியாக இந்திய அரசியலமைப்புக்கு வடிவம் அளித்துள்ளது.
- குடிமக்களின் உரிமைகளைக் குறித்தும் கடமைகளைக் குறித்தும் அரசியலமைப்பு விளக்கு கிறது
- அரசியலமைப்புச் சட்டத்தில் நிகழும் பிற்சேர்க்கையும் நீக்குதலும் சட்டத் திருத்தம் என அறியப்படுகின்றன.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- அரசியலமைப்புச் சட்டம் என்ற கருத்தைப் புரிந்துகொள்கின்றனர்.
- இந்திய அரசியலமைப்புச் சட்ட உருவாக்கம், அதன் நிலைகள் போன்றவற்றை அறிந்துகொள்கின்றனர்.
- முன்னுரை, அதன் அடிப்படை இலக்குகள் போன்றவற்றைப் பகுப்பாய்வு செய்கின்ற னர்.
- நமது அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைச் சிறப்புகள் போன்றவற்றைப் பகுப் பாய்வு செய்கின்றனர்.

## மதிப்பிடலாம்

- ‘அரசியலமைப்புச் சட்டத்தைத் திறக்கும் வாசலாகும் முன்னுரை’ இக்கூற்றின் முக் கியத்துவத்தை விளக்கவும்.
- கீழே கொடுக்கப்பட்டுள்ள கூற்றுகளை வாசிக்கவும். தரப்பட்டுள்ளவைகளிலிருந்து சரியான விடையைக் கண்டுபிடிக்கவும்.

  A. அரசியலமைப்புச் சட்டம் இந்தியாவின் மிக உயர்ந்த சட்டமாகும்.

  B. புதிய சட்டங்கள் உருவாக்குவது அரசியலமைப்புச் சட்டத்திற்கெதிரானதாக இருக்கக் கூடாது.

  I. B மட்டும் சரியானது

  II. A மட்டும் சரியானது

  III. A யும் B யும் சரியானதல்ல

  IV. A யும் B யும் சரியானவை

- இந்தியாவின் அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் செயல்பாடுகளை ஒரு காலக்கோடு வடிவில் வெளியிடவும்.
- குடியரசு என்ற கருத்து எதைக் குறிப்பிடுகிறது?
- சமூகங்களின் தேவைகளுக்கேற்ப அரசியலமைப்புச் சட்டத்தில் மாற்றம் செய்வது தேவை யானது. உங்கள் கருத்தை விளக்கவும்.
- நமது நீதிநியாய அமைப்பின் நிலைகளை விளக்கும் ஒரு குறிப்பு தயார் செய்யவும்.
- நபர்களையும் செயல்பாடுகளையும் சரியாக இணைக்கவும்.

| | | |
|---|---|---|
| A. டாக்டர் பி. ஆர். அம்பேத்கர் | - | அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்க சபையின் தலைவர் |
| B. டாக்டர் இராஜேந்திரபிரசாத் | - | அரசியல் அமைப்புச் சட்டத்திற்கு முன்னுரை எழுதியவர் |
| C. சச்சிதானந்த சின்கா | - | அரசியல் அமைப்புத் திட்டவரைவுக் குழுத் தலைவர் |
| D. ஜவகர்லால் நேரு | - | அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்கச் சபையின் தற்காலிகத் தலைவர் |



## தொடர் செயல்பாடுகள்

- அரசியலமைப்புச் சட்ட உருவாக்கச் செயல்பாட்டில் பங்கேற்றவர்கள், முக்கிய நிலைகள் போன்றவற்றுடன் தொடர்புடைய படங்களையும் செய்திகளையும் சேகரித்து ஒரு மலர் தயார் செய்க.
- கல்வி உரிமைச் சட்டம், உணவு பாதுகாப்புச் சட்டம் போன்றவை குறித்த பத்திரிகைச் செய்தி களைச் சேகரித்துச் செய்தித் துணுக்குத் தயார் செய்க.
- புதுடில்லியில் நடைபெற்ற குடியரசு தினவிழாவின் படங்களைச் சேகரித்து ஒரு சுவர்ப்பத்தி ரிகை தயார் செய்க.
- இந்திய அரசியல் அமைப்புச் சட்ட உருவாக்கமும், முன்னுரையில் கூறப்பட்டுள்ள அடிப் படை இலக்குகளையும் அதன் சிறப்புகளையும் உட்படுத்தி ஒரு வினாடிவினாவுக்கான வினா நிரல் தயார் செய்க.



# 11 தனிநபரும் சமூகமும்

SATURDAY
12
JANUARY

*வழக்கம்போல இன்றும் அம்மா தான் என்னை எழுப்பினார்கள். பல்தேய்த்து முகம் கழுவி நானும் அண்ணனும் படிக்கத் துவங்கினோம்.*

*அப்பொழுது பால்காரர் வந்தார். அம்மா எங்களுக்குத் தேனீர் கொடுத்தார்கள். அந்நேரத்தில் செய்தித்தாளும் இடப்பட்டது. அப்பாவின் அருகில் அமர்ந்து நான் செய்தித்தாளை வாசித்தேன்.*

*நான் பள்ளிக்குச் செல்லப் புறப்படும்நேரத்தில் பாட்டி உணவு எடுத்து வைத்தாள். நாங்கள் எல்லோரும் ஒன்றாக இருந்துதான் உணவு சாப்பிட்டோம். அவ்வேளையில் எனது நண்பர்களான ரமாவும், அயிஷாவும் வந்தனர். அவர்களைக் கண்டவுடனே புத்தகப் பையை எடுத்துக்கொண்டு வெளியே ஓடினேன்.*

*பள்ளிச் செல்லும் வழியில் பாய்ந்து வந்த வண்டிக்கு வழி மாறி நின்றபோது கல்லில்தட்டி நான் விழுந்தேன். அதைக் கண்ட அயிஷா அலறினாள். யார் யாரோ ஓடி வந்தனர். அவர்கள் என்னைப் பக்கத்திலுள்ள மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். மருந்து வைத்துக் கட்டப்பட்டது. சிறிது நேரம் ஓய்வு எடுத்தபின்பு நாங்கள் பள்ளிக்குச் சென்றோம்.*

*வகுப்பில் சென்றபோது என்னைச் சுற்றி நண்பர்கள் கூடி ஒவ்வொன்றாகக் கேட்டனர். ரமா தான் அனைவருக்கும் பதில் கூறினாள்.*


*மணியடித்தது. முதல் பிரிவு ஆங்கிலமாக இருந்தது. அவ்வகுப்பை நடத்தியவர் ஆசிரியை ஷில்பா ஆவார். அந்த ஆசிரியை வகுப்பு நடத்தும் அழகில் நான் என் கால் முட்டு வலியை மறந்துவிட்டேன்.*

இது ஆறாம் வகுப்பிலுள்ள மியா எழுதிய நாட்குறிப்பாகும். ஒரு நாள் காலையிலேயே எத்தனை நபர்களின் உதவி மியாவிற்குத் தேவைப்பட்டது எனக் கண்டீர்களல்லவா? ஒரு நாள் முடியும் போது நீங்கள் எத்தனை நபர்களோடு தொடர்புகொள்வதுண்டு? அவர்கள் யார்?

- அம்மா
- 
- 

அம்மா, அப்பா, சகோதரர்கள், அருகிலுள்ளவர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் என உங்கள் வாழ்வில் எவ்வளவு முக்கியமானவர்கள்! அவ்வாறு எத்தனையோ நபர்கள் நம்முடைய வாழ்வோடு தொடர்புகொண்டுள்ளனர்.

## ஒற்றுமையின் நிழல்



படத்தை உற்றுநோக்கிச் சமூகத்தொடர்புகள் எவ்வாறெல்லாம் உருவாகின்றன என்பதைக் கண்டறியவும்.

- நான் நண்பர்களோடு விளையாடுகிறேன்
-
-
-

-
-
-
-

ஒரு மனிதனின் பிறப்பு முதல் அவன் பிறருடன் சார்ந்து வாழும் நிலை ஆரம்பம் ஆகிறது. குடும்பம், அருகிலுள்ளவர்கள், நண்பர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் நம்முடைய வளர்ச்சியில் பங்குவகிக்கின்றனர். மொழி, ஆடை அலங்காரம், பண்பாடு, பழக்கவழக்க முறை ஆகியவற்றை நாம் சமூகத்திலிருந்தே கற்றுக்கொள்கிறோம். வாழ்க்கையின் பல நிலைகளிலும் தனிநபர் மற்றுள்ளவர்களோடு தொடர்புகொள்ளுகிறார். இந்த உறவுகளுடைய கண்ணிகள் (தொடர்கள்) நிலைநிற்கின்ற பெரிய கூட்டமே சமூகம். சமூகம் தான் ஒரு நபருடைய வளர்ச்சிக்கும் நிலைநிற்றலுக்கும் அடிப்படைக் காரணி.

தனிமனிதர்களை உள்ளடக்கிய மிகப்பெரிய கூட்டமே சமூகம்.

– கிரீன்



## தனிமைப்பட்டால்...

மனிதர்களுடன் தொடர்பில்லாமல் ஒரு குழந்தை வாழ்வதை உங்களால் நினைத்துப் பார்க்க முடியுமா? அவ்வாறு நடந்தால் அக்குழந்தையின் நிலை எவ்வாறிருக்கும்?
விக்டரின் கதையை வாசிப்போம் . . . . .



பிரெஞ்சு நாட்டிலுள்ள எவிரோன் (Aveyron) கிராமத்துடன் சேர்ந்து இருக்கின்ற காட்டில் வேட்டையாட சென்ற சிலர் ஓநாய்களின் கூட்டத்தில் இன்று வரை கண்டிராத ஒரு உயிரினத்தைக் கண்டனர். அது அவர்களுக்கு ஆச்சரியத்தையும் வியப்பையும் ஏற்படுத்தியது. அவர்கள் ஓநாய்களை துப்பாக்கியால் சுட்டு விரட்டிவிட்டுத் தனியாக ஓடிக் கொண்டிருந்த அந்த உயிரினத்தைப் பிடித்தனர். அந்த உயிரினம் மனித வடிவில் இருந்தது. ஆனால் கைகளையும் கால்களையும் பயன்படுத்தி வேகமாக ஓடியது. உறுமிக் கொண்டு கைகளால் பிராண்டவும் கடித்து கீறுவதற்கும் வந்த அந்த உயிரினத்தை அவர்கள் மிகக் கஷ்டப்பட்டுக் காட்டிலிருந்து நாட்டிற்குக் கொண்டு வந்தனர். அது ஒரு மனிதக் குழந்தையாக இருந்தது. ஆனால் அந்தக் குழந்தைக்கு மனிதர்களைப் போலப் பேசவோ ஆடை அணியவோ உணவை கையினால் உண்பதற்கோ தெரிய வில்லை. மனிதர்களின் ஒரு குணமும் அவனுக்கு இருக்கவில்லை. அவனைப் பற்றிக் கூடுதல் தெரிந்து கொள்வதற்காக பாரீசுக்குக் கொண்டு சென்றனர். அந்த நகரத்திலுள்ள மருத்துவரான ஜீன் மார்க் இற்றார்ட் (Jean Marc Itard) குழந்தையை ஏற்றுக்கொண்டார். மருத்துவரும் அவருடைய உதவியாளரான செவிலியும் சேர்ந்து அக்குழந்தைக்கு விக்டர் எனப் பெயரிட்டனர். அவனுக்கு 12 வயது முடிந்திருந்தது. அவர்கள் விக்டருக்குச் சாதாரண குழந்தையைப் போல உடை அணிவதற்கும் உணவு உண்பதற்கும் பேசுவதற்கும் பயிற்சி கொடுத்தனர். விக்டரால் ஒன்றையும் எளிதாக ஏற்றுக்கொள்ள முடியவில்லை. பாத்திரத்திலுள்ள உணவைக் கீழே கொட்டிய பின் நாய் போல நக்கித் தின்பதற்கு முயன்றான். விரிப்பதற்கும் மூடுவதற்கும் போர்வைகளைத் தவிர்த்து அறையின் ஒரு மூலையில் சுருண்டு கிடப்பதற்கு ஆசைப்பட்டான். பல நாட்கள் முயன்ற பின்னர் தான் சில வார்த்தைகளை உச்சரிக்கக் கற்றுக் கொண்டான்.



விக்டர்

மனித சமூகத்தின் பழக்கவழக்கங்களையோ நடைமுறைகளையோ விக்டர் அறிந்திருக்கவில்லை. ஒரு தனிநபர் சமூகத்திலிருந்து கற்றுக்கொள்ள வேண்டிய எதையும் விக்டரால் உட்கொள்ள முடியவில்லை. மிகவும் சங்கடமான உண்மை என்னவென்றால் விக்டரால் மற்ற மனிதர்களுடன் இணைந்து வாழ முடியவில்லை.

1920-இல் வங்காளத்திலுள்ள மிட்னாப்பூர் கிராமத்திலிருந்து மிருகங்களுடன் கண்டுபிடித்த இரண்டு பெண் குழந்தைகளின் (கமலா, அமலா) வாழ்க்கையும் விக்டருடைய வாழ்க்கையைப் போன்றதாகும். 1938-இல் அமெரிக்காவில் உள்ள ஒரு வீட்டின் மேல் பகுதியிலுள்ள இருண்ட அறையில் அடைத்து வைக்கப்பட்ட அன்னா என்ற குழந்தையின் நிலையும் இதுபோலவே இருந்தது. ஆறாவது வயதில் வீட்டுச் சிறையிலிருந்து மீட்கும்போது அன்னாவிற்குப் பேசுவதற்கோ நடப்பதற்கோ இயலவில்லை. சாதாரண அறிவின் எந்தவொரு அறிகுறிகளும் இக்குழந்தைகளில் ஒருவரிடமும் கூடக் காணப்படவில்லை.

சமூகத்துடன் வாழாத எந்த ஒரு மனிதனுக்கும் சமூக உயிரியாக மாறுவதற்கு முடியாதென்றும் சமூகத்தோடு தொடர்புடைய பழக்கவழக்கங்களோ மொழியோ எதையும் இலகுவாக கற்கவோ பயிற்சி செய்யவோ முடியாதென்பதும் புரிந்ததல்லவா?
சமூகம் இல்லையெனில் தனிநபரின் முன்னேற்றம் எவ்வாறிருந்திருக்கும்? கலந்துரையாடிக் குறிப்பு தயாராக்கவும். கீழே கொடுக்கப்பட்டுள்ளவற்றைப் பயன்படுத்திக் கலந்துரையாடவும்.

- உடல் வளர்ச்சி
- அறிவு வளர்ச்சி
- பழக்கவழக்க முறை

## சமுதாயமும் சங்கங்களும்

சமூகத்தோடு ஒன்றியிருப்பது போல் மனிதன் வேறுவிதமான சமூகச் சங்கங்களோடும் தொடர்புகொண்டே வாழுகின்றான். நீங்கள் தொடர்புகொண்ட சமூக சங்கங்கள் எவையெல்லாம்?

- மன்றங்கள்
- 
- 

பலவிதமான சமூகச் சங்கங்கள் உட்பட்டதே சமூகம் என்று புரிந்ததல்லவா? சமுதாயம் (Community), சங்கங்கள் (Association) போன்றவை சமூகத்தின் முக்கிய பாகங்களாகும்.

### சமுதாயம் (Community)

ஒரு குறிப்பிட்ட பகுதியில் நாம் ஒன்று என்ற எண்ணத்தோடு வாழ்கின்ற மக்களின் சங்கமே சமுதாயம். குறிப்பிட்ட பகுதியிலுள்ள வாழ்விடமும் ஒன்றிணைந்து செயல்படும் முறையும் திடமான உறவுகளும் பண்பாட்டு முறைகளும் ஒரு சமுதாயத்தின் தனித்தன்மைகளாகும். சமூகத்துடன் ஒப்பிடும்போது சமுதாயம் சிறிதெனினும் சமூகத்தைவிட உள்ளுணர்வு சமுதாயத்தில் கூடுதலாகக் காணப்படுகிறது. ஒரு தனிநபரை சமூக உயிரியாக மாற்றுவதில் சமுதாயம் மிகப் பெரிய பங்கு வகிக்கிறது.



ஒரே கிராமத்தில் வாழ்கின்றவர்களை ஒரு சமுதாயமாக ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள் எவையெல்லாம்?

- நாம் ஒன்று என்ற உணர்வு
- 
- 

### சங்கம் (Association)

உங்களுடைய பள்ளியில் பலவிதமான மன்றங்கள் செயல்படுவதுண்டல்லவா? அவை எவையென்றும் அவற்றின் இலட்சியங்கள் எவையென்றும் அட்டவணைப்படுத்தவும்.

| மன்றங்கள் | இலட்சியங்கள் |
|---|---|
| • வித்தியாரம்பம்<br>•<br>• | • கலை, கவிதை போன்றவற்றை ஊக்குவித்தல்<br>•<br>• |

ஒவ்வொரு மன்றமும் வேறுபட்ட இலட்சியத்தோடு செயல்படுகின்றது என்பது புரிந்ததல்லவா? இவ்வாறு தனிப்பட்ட இலட்சியங்களை நிறைவேற்றுவதற்காக முயலுகின்ற தனிநபர்களின் கூட்டத்தையே சங்கம் என்கிறோம்..

தனிநபர்களின் சக்தியை வளர்ப் பது என்ற இலட்சியத்தோடு மட்டுமல்லாமல் பொது மக்களின் நன்மைக்காகவும் பாடுபடு வதே சங்கங்களின் நோக்கம். குடியிருப்போர் சங்கங்கள், தொழிலாளர் சங்கங்கள், மாணவர் சங்கங்கள் போன்றவை சங்கங்களுக்கு எடுத்துக் காட்டுகளாகின்றன.


ஒரு தனிநபரைச் சமூகத்தில் சிறந்த உறுப்பினராக மாற்றுவதில் சமுதாயங்களுக்கும் சங்கங்களுக்கும் முக்கியப் பங்குண்டு.


> சில இலட்சியங்களை அடைவதற்காக மக்கள் ஒன்று சேர்ந்து செயல்படுவதே சங்கங்கள்
>
> – பொக்கார்டஸ்

## நாமும் ஒளிகொடுப்போம்...

தனிநபரின் ஒன்றிணைப்பிலிருந்தல்லவா சமூகம் உருவாகின்றது. நல்ல மனிதர்கள் சமூகத்தின் முன்னேற்றத்திலும் முக்கியமான பங்கு வகிக்கிறார்கள். சமூகத்தில் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய சில நபர்களை நாம் தெரிந்துகொள்ளலாம்.







படத்தைக் கண்டீர்களல்லவா? சமூக நன்மைக்காக இவர்கள் செய்த நன்கொடைகள் எவையெவை?

| காந்திஜி | ராஜாராம் மோகன்ராய் | ஸ்ரீநாராயணகுரு |
|---|---|---|
| •<br>•<br>• | •<br>•<br>•<br>• பெண் கல்விக்கு ஊக்கமளித்தல் | • தீண்டாமை ஒழிப்பு<br>•<br>•<br>• |

சமூகத்தின் முன்னேற்றத்திலும் நிலைபேற்றிற்கும் பலமுறைகளில் தனிநபர்களின் பங்கு உண்டெனத் தெரிந்துகொண்டீர்களல்லவா? குடும்பம், வீட்டின் அருகே, கல்விக் கூடங்கள், சங்கங்கள் போன்றவற்றில் எல்லாம் தனிநபர்களின் முயற்சியால் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. சமூகம் இல்லையெனில் தனிநபர் இல்லை என்பது போலத் தனிநபர் இல்லையெனில் சமூகமும் இல்லை. தனிநபரும் சமூகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் ஆவர்.

## சமூகமயமாக்கல் (Socialisation)

தனிநபர் எவ்வாறு சமூ கத்தின் ஒரு பகுதியாக மாறுகின்றார்? நீங்கள் குழந்தைகளைக் கவனித்த தில்லையா? மற்றவர்களின் உதவியில்லாமல் உணவு உண்ணவோ தண்ணீர் குடிப்பதற்கோ அவர்களால் முடியுமா? குடும்ப உறவுகளைக் கூட அறிந்து கொள்வதற்கு எத்தனை மாதங்கள் எடுக்கின்றன! பேசுவதற்கும் நடப்பதற்கும் குழந்தை படிப்படியாகக் கற்றுக்கொள்கிறது. வளர வளரப் பண்பாட்டையும் நடைமுறைகளையும் அறிந்துகொள்ளவும் உட்கொள்ளவும் செய்கின்றது. இந்த முறையில் ஒரு தனிநபரை சமூகத்தில் வாழ்வதற்குத் தயாராக்குகின்ற செயல்பாடே சமூகமயமாக்கல்.

> தனிநபர்கள் சமூகத்தின் வரைமுறைகளோடு இணைந்து வாழ கற்றுக்கொள்ளும் முறையே சமூகமயமாக்கல்
>
> – ஒக்பேண்

**கீழே கொடுக்கப்பட்டுள்ள சோதனைப்பட்டியலை முழுமையாக்கி உங்களுடைய சமூகத் தொடர்பை மதிப்பிடவும்**

| | ஆம் | இல்லை |
|---|---|---|
| 1. ஏராளமான நண்பர்களை அடைவதற்கு நான் விரும்புகிறேன். | | |
| 2. ஓய்வு நேரத்தை நண்பர்களோடு செலவிட விரும்புகிறேன். | | |
| 3. நான் மற்றவர்களின் கருத்துகளை மதிக்கிறேன். | | |
| 4. நண்பர்களின் பிரச்சினைகளை மனப்பூர்வமாகக் கேட்டுக்கொள்கிறேன். | | |
| 5. நண்பர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முன்வருகிறேன். | | |
| 6. என்னுடைய பிரச்சினைகளைப் பிறருடன் பகிர்ந்துகொள்கிறேன். | | |
| 7. நான் விமர்சனங்களை ஏற்றுக்கொள்கிறேன். | | |
| 8. குழுச் செயல்பாடுகளை விரும்புகிறேன். | | |
| 9. முழுமனதுடன் கொண்டாட்டங்களில் பங்குகொள்கிறேன். | | |
| 10. நான் பள்ளியில் நடைபெறும் கலை, விளையாட்டு நிகழ்ச்சிகளில் பங்குபெற விரும்புகிறேன். | | |

அட்டவணையைப் பூர்த்திசெய்தீர்களல்லவா?

ஒவ்வொரு செயலுக்கும் விடை 'ஆம்' என்றால் ஒரு மதிப்பெண் கொடுக்கவும். உங்களுடைய மதிப்பெண்ணைப் பரிசோதித்துச் சமூகத் தொடர்பை மதிப்பிடவும்.

## சமூகமயமாக்கலின் உதவியாளர்

சமூகமயமாக்கலை ஏற்றுக்கொள்ளாத நபர் சமூக உயிரியாக மாறுவதில்லை என்பதை நாம் புரிந்துகொண்டோம் அல்லவா. சமூக மயமாக்கல் என்பது வாழ்நாள் முழுவதும் தொடரக்கூடிய செயலாகும். இதற்குப் பல காரணிகள் உதவியாக இருக்கின்றன. இவை என்னென்னவென்று காண்போம்.

- குடும்பம்
- நண்பர்கள்
- கல்விக்கூடங்கள்
- ஊடகங்கள்
- 
- 

## குடும்பம்

குடும்பத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொள்பவை எவை?


- ஒழுக்கம்
- நேரம் தவறாமை
- பெரியவர்களை மதித்தல் / அன்பு காட்டுதல்
- 
- 
- 

பெற்றோர்களிடமிருந்து தான் நாம் நடத்தைமுறைகளைக் கற்றுக்கொள்கிறோம். அதனால் சமூகமயமாக்கல் செயலில் மிகப் பெரிய பங்கை வகிப்பது குடும்பம் என்று கூறலாம். பெற்றோர்களே குழந்தைகளுக்குச் சமூகமயமாக்கலின் முதற்பாடத்தைக் கற்றுக் கொடுக்கின்றனர். நன்மையும் தீமையும், சரியும் தவறும் அறிந்துகொள்வது குடும்பத்திலிருந்து ஆகும்.

சமூக மயமாக்கலின் உதவியாளர் என்ற நிலையில் குடும்பத்திலிருந்து நாம் என்னென்ன விஷயங்களைப் புரிந்துகொள்கிறோம்? சொற்சூரியனை முழுமை யாக்கவும்.



## ஒத்த வயதுள்ளவர்/நண்பர்கள்




நண்பர்களோடு பழகும் போது நம்மை அறியாமலேயே ஏராளமான விஷயங்களைக் கற்றுக்கொள்கிறோம். விளையாட்டு, பொழுதுபோக்குகளில் பங்கெடுக்கும் போது குழு

மனப்பான்மை ஏற்படுவதோடு வெற்றி - தோல்விகளை ஏற்றுக்கொள்வதற்கும் அவற்றிலிருந்து ஊக்கத்தைப் பெற்று முன்னேறுவதற்கும் நாம் தகுதிபெறுகின்றோம். நற்குணங்களைப் பெறுவதில் நண்பர்கள் முக்கியப் பங்குவகிக்கின்றனர்



நற்குணங்களைப் பெறுவதில் உங்களுக்கு உதவியாகயிருந்த நண்பன் அல்லது தோழியைக் குறித்த நட்பனுபவத்தைப் பகிர்ந்துகொள்வீர்கள் அல்லவா?

## கல்விக்கூடங்கள்

கல்விக்கூடங்கள் சமூக மயமாக்கலுக்கு எவ்வாறு உதவுகின்றன என்பதைக் காண்போம்.

- சட்டங்களை மதிக்கக் கற்றுக்கொள்கிறோம்.
- அறிவைப் பெறுகிறோம்.
- மதிப்புகளைத் தன்மயமாக்குகிறோம்.
- வேறுபட்ட சூழல்களிலிருந்து வரும் குழந்தைகளோடு பழகுகிறோம்.
- நற்குணங்களைப் பெறுகிறோம்.

கல்விக் கூடத்திலிருந்துப் பெறுகின்ற அறிவுகளும் திறமைகளும் மதிப்புகளும் பொறுப்புள்ள சமூக உயிரி ஆவதற்கு நம்மைத் தயாராக்குகின்றன.

## ஊடகங்கள்

முக்கியமான செய்தி ஊடகங்கள் எவை?

- செய்தித்தாள்கள்
- பத்திரிகைகள்
- தொலைக்காட்சி சானல்கள்
- 

ஊடகங்கள் நம்முடைய கண்ணோட்டத்திலும் மனப்பான்மையிலும் வாழ்க்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. உலகின் பல பகுதியில் வாழும் மக்களை ஒன்று சேர்ப்பதற்கும் ஒரே சமூகம் என்ற எண்ணத்தை உருவாக்குவதற்கும் ஊடகங்கள் உதவுகின்றன.

உங்களைக் கவர்ந்த கடந்த வார பத்திரிகைச் செய்தியைக் குறித்து விவாதிக்கவும்.

சமூகமயமாக்கல் செயல்பாட்டில் மேலே கூறப்பட்டுள்ள காரணிகள் ஏதாவது தவறான கருத்துகளைக் கூறுவதாக உங்களுக்குத் தோன்றியது உண்டா?

சில எடுத்துக்காட்டுகளைக் கவனிக்கவும்

- நண்பர்கள் ஒன்று சேர்ந்து பொதுச் சொத்துகளை அழித்தல்
- மது அருந்துதல், போதைப் பொருட்கள் போன்றவற்றைப் பயன்படுத்த நண்பர்களிடம் தூண்டுதல்.
- இணைய தளத்தைத் தவறாகப் பயன்படுத்தத் தூண்டுதல்.
- தொலைக்காட்சிக்கு முன் அதிக நேரத்தைச் செலவிடுவது சமூகத் தொடர்பைக் குறைக்கிறது.

சமூகமயமாக்கலின் வழியாக இவ்வாறான செயல்களிலிருந்து எவ்வாறு மீளலாம்? விவாதிக்கவும்.

## தொகுப்பு

- வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தனிநபர்கள் சமூகத்திலுள்ள பல சங்கங்களுடனும் கடமைபட்டுள்ளார்கள்.
- சமூகமே ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையின் வெற்றிக்கும் நிலைநிற்பிற்கும் அடிப்படையானது.
- சமூக உறவுகளின் வாசல்களே சமூகம். தனிநபரும் சமூகமும் ஒன்றோடொன்று கலந்தவர்கள் ஆவார்.
- தனிநபர்கள் சமூகத்தின் மாற்றத்திலும் முன்னேற்றத்திலும் தாக்கம் செலுத்துகிறார்கள்.
- சமூகத்துடன் வளராத மனிதனுக்குச் சமூக உயிரியாக வாழ முடிவதில்லை.
- சமுதாயம் சங்கங்கள் போன்ற சமூகச் சங்கங்கள் தனிநபர் வாழ்வில் முக்கியப் பங்கை வகிக்கின்றன.
- தனிநபர்கள் சங்கங்களின் சரியான முறைகளோடு ஒன்றிணைவதற்காக முயலும் செயலே சமூகமயமாதல். குடும்பம், நண்பர்கள், கல்விக்கூடங்கள், ஊடகங்கள் என்பன சமூக மயமாக்கலுக்குப் பெரிதும் உதவுகின்றன.

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- தனிநபருக்கும் சமூகத்திற்கும் இடையே உள்ள உறவை அறிந்துகொள்கின்றனர்.
- தனிநபர் முன்னேற்றத்தின் பெரும்பங்கு சமூகத்திற்குரியது என்றறிந்துகொள்கின்றனர்.
- சமூகம், சமுதாயம், சங்கங்கள் போன்றவை தனிநபரின் வாழ்க்கைக்கும் முன்னேற்றத்திற்கும் தேவையானவை என்பதை அறிந்துகொள்கின்றனர்.
- தனிநபரைச் சமூகத்தின் ஒரு பகுதியாக மாற்றுவதில் சமூகமயமாக்கலின் பங்கை அறிந்து கொள்கின்றனர்.

## மதிப்பிடலாம்

1. சமுதாயம், சங்கங்கள் இவை இரண்டும் சமூகச் சங்கங்களாகும். இவற்றின் சிறப்புக்களைப் பட்டியலிடவும்.

| சமுதாயம் | சங்கங்கள் |
|---|---|
| | |

2. சமூக மயமாக்கலிற்கு உதவுகின்ற சில காரணிகளை அறிந்தீர்களல்லவா? இவை ஒவ்வொன்றும் எந்தெந்த முறையில் சமூக மயமாக்கலுக்கு உதவுகின்றன? கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலைப் பூர்த்திச் செய்யவும்.

| குடும்பம் | பள்ளி | ஒத்தவயதுடையவர்கள் | ஊடகங்கள் |
|---|---|---|---|
| • அன்பு | • | • பரந்த உற்றுநோக்கல் | • கண்ணோட்டங்கள் |
| • | • | • குழு மனப்பான்மை | • |
| • | • நேரம் தவறாமை | • | • |



## தொடர் செயல்பாடுகள்

1. ‘தனிநபர் இல்லாமல் சமூகமும், சமூகம் இல்லாமல் தனிநபரும் இருக்க முடியாது’ என்ற இந்தக் கருத்தாக்கத்தின் அடிப்படையில் உங்களுடைய ஒரு நாள் அனுபவங்களை குறிப்பாக எழுதவும்.

2. சமூகத் தொடர்பு இல்லாத தனிநபரின் வாழ்க்கையில் என்னென்ன மாற்றங்கள் ஏற்படுகின்றன? தேடிக் கண்டுபிடிக்கவும்.

3. சமூகத்தை மாற்றியமைத்த சில மனிதர்களை அறிந்தோமல்லவா? இவ்வாறு சமூக மாற்றத்திற்கு வழிகோலிய சான்றோர்களின் படங்கள், வாழ்க்கை வரலாறு, சமூகத்திற்கு அவர்கள் செய்த நன்மைகள் போன்றவற்றை இணைத்து ஒரு மலர் தயாரிக்கவும்



# 12 சூரிய வெப்பமும் வளிமண்டல நிலையும்

மூணார் :கடந்த 50 வருடத்தில் மிகவும் குறைந்த வெப்பநிலை மூணாரில் அனுபவப்பட்டது

ஆலப்புழை: கனமழை, தாழ்ந்த பகுதிகள் தண்ணீரில் மூழ்கியது

நெடும்பாசேரி : கனமழையினால் விமான நிலையம் இரண்டு நாட்கள் மூடப்பட்டது

பொன்முடி : பள்ளத்தாக்கில் கடுமையான மூடுபனி

திருவனந்தபுரம் : மேற்கு கடற்கரை பகுதியில் காற்றழுத்தம் கூடுதல். மீனவர்கள் எச்சரிக்கையாக இருக்கவும்.

பாலக்காடு : கோடை வெயில் நான்கு பேரைச் சூரியக் கதிர் தாக்கியது

செய்தித் துணுக்குகளைக் கவனித்தீர்களல்லவா? இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் சில உங்களுக்குத் தெரிந்தது அல்லவா? இவ்வாறான சூழ்நிலைகள் உருவாகக் காரணம் என்ன என்பதைச் சிந்தித்து பார்த்ததுண்டா? வளி மண்டலத்தில் ஏற்படுகின்ற சில மாற்றங்களே இதற்குக் காரணம். வளிமண்டலத்தைக் கட்டுப்படுத்தக் கூடிய காரணிகள் எவையென்றும் அவை எவ்வாறு கட்டுப்படுத்தப்படுகின்றன என்றும் இந்த அலகு வாயிலாகத் தெரிந்து கொள்ளலாம்.

## சூரியன் - ஆற்றலின் உறைவிடம்


பூமிக்குத் தேவையான முழு ஆற்றலையும் தருவது சூரியன் என்று உங்களுக்குத் தெரியுமல்லவா? சூரியனில் உள்ள ஆற்றல் சூரிய கதிர்களாகப் பூமியில் வந்தடைகிறது. இதனையே சூரிய வெப்பம் (Insolation) என்று கூறுகிறோம். பகல் நேரத்தில் சூரிய வெப்பத்தின் வழியாகப் பூமியின் மேற்பரப்பு வெப்பம் அடைகிறது. வெப்பமடைந்த பூமியின் மேற்பரப்பில் இருந்து பலவிதச் செயல்களின் வழி வெப்பம் வளிமண்டலத்திற்குச் செல்கிறது. இதன் வழி பூமியின் மேற்பரப்பு குளிர்ச்சியடைகிறது என்றாலும் வளி மண்டலத்திலுள்ள

### உயர்ந்த வெப்ப நிலையும் தாழ்ந்த வெப்ப நிலையும்

சூரியன் உதிப்பதற்கு முன்புள்ள வெப்பநிலையே ஒரு நாளின் குறைந்த வெப்பநிலையாக காலநிலை ஆய்வாளர்கள் கருதுகின்றனர். மதியம் 2 மணிக்கு ஏற்படும் வெப்பநிலையே ஒரு நாளிலுள்ள உயர்ந்த வெப்பநிலை என்றும் கூறப்படுகிறது.

மேகங்களும் கார்பன் டை ஆக்சைடும் வாயுக்களும் பூமியிலுள்ள வெப்பத்தை உட்கிரகிக்கின்றன. இவ்வாறு உயிரின் அடிப்படைக்கு உதவியாகும் விதத்தில் வளிமண்டல வெப்பம் நிலைகொள்கிறது.

பூமியின் மேற்பரப்பில் எல்லா இடத்திலும் சூரிய ஆற்றல் ஒரே அளவில் கிடைப்பதில்லை. பூமத்தியரேகை பகுதியில் சூரியக் கதிர்கள் செங்குத்தாக விழுவதால் இப்பகுதியில் வெப்பம் அதிகமாகக் காணப்படும். துருவங்களோடு இணைந்து வரும் போது சூரியக் கதிர்கள் சாய்வாக விழுவதால் வெப்பம் குறைவாகக் காணப்படுகிறது. எனவே ஒவ்வொரு இடத்தின் அட்சரேகைக்கு ஏற்ப பூமியின் வெப்பம் இருக்கும். (படம் 12.1)




படம் 12.1

அது மட்டுமல்லாமல் கடல் மட்டத்திலிருந்துள்ள உயரம், கடலின் அருகாமை முதலிய காரணிகள் வட்டார வெப்ப மாற்றங்களுக்குக் காரணமாகின்றன. அது எவ்வாறு எனக் காண்போம்.

கடல் மட்டத்திலிருந்து மேல்நோகக்கி வளி மண்டல வெப்பம் முறையே குறைந்து வருகிறது. மூணார், வயநாடு போன்ற உயர்ந்த பகுதிகளில் நமக்குக் குளிர் அதிகமாகத் தோன்றுவது எதனால் எனத் தெரிந்ததல்லவா?


பகல் நேரத்தில் கடலிலிருந்து கரைக்கும் இரவு நேரத்தில் கரையிலிருந்து கடலிற்கும் வீசும் காற்று கடற்கரைப் பகுதியில் உள்ள வெப்ப நிலையை கட்டுப்படுத்துகிறது.

### வெப்பத்தை எவ்வாறு அளவிலாம்?


வளிமண்டல வெப்பத்தை அளக்கப் பயன்படும் கருவி வெப்பமானி (Thermometer)

## சூரிய ஆற்றல்

சூரிய ஆற்றல் தடையில்லாமல் பூமிக்குக் கிடைக்கிறது. ஒரு வெப்ப மண்டல நாடான இந்தியாவில் இந்த இயற்கையான ஆற்றலை உபயோகப்படுத்துவதற்கான வழிகள் ஏராளம் உண்டு. சூரியத் தகடுகள் பயன்படுத்திச் சூரிய ஒளியை மின்சார ஆற்றலாக மாற்றுகின்ற தொழில் நுட்பம் அதிகமாவதோடு நம் முடைய ஆற்றலின் பற்றாக்குறை என்ற பிரச்சினைக்கு இது ஒரு தீர்வு ஆகிறது.



ஆகும். (படம் 12.2). இது டிகிரி செல்ஷியஸ் ($^{0}$C), டிகிரி பாரன்கீட் ($^{0}$F) என்ற அளவுகளின் வழி அடையாளப்படுத்தப்படுகிறது



படம் 12.2
வெப்பமானி

ஒரு வெப்பமானியின் உதவியோடு வளிமண்டல வெப்பநிலைகளை அளக்கலாம். எல்லா நாட்களிலும் குறிப்பிட்ட நேரத்தில் வளிமண்டல வெப்பநிலையை அளவிட்டு வகுப்பறையில் வெளியிடுவீர்களல்லவா.

ஒவ்வொரு பகுதியிலுமுள்ள வெப்பநிலையில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள் வளி மண்டல மாற்றங்களுக்குக் காரணமாவது எவ்வாறு எனக் காணலாம்.

## வெப்பமும் காற்றின் அசைவும்

பொருட்களுக்கு எடை உள்ளது போல் காற்றிற்கும் எடை உண்டு. வளிமண்டல காற்று தள்ளுகின்ற எடையே காற்றழுத்தம் எனப் படுகிறது. (Atmospheric pressure). காற்றழுத்தத்தை அளவிட பயன்படும் கருவியே பாராமானி (Barometer). (படம் 12. 3) காற்ற ழுத்தத்தை அளக்கப் பயன்படுத்தும் அளவுகள் ஹெக்டோ பாஸ்கல், மில்லிபார் என்பவையாகும்.

காற்றசைவு ஏற்படும் போதல்லவா அதனை நம்மால் உணர முடிகிறது? வளி மண்டலத்தில் காற்றின் அசைவு எவ்வாறு நடக்கிறது எனக் காண்போம்.

சூரிய வெப்பத்தால் வெப்பமடையும்போது வளிமண்டலக் காற்று விரிவடைந்து அழுத்தம் குறைந்து மேலாகச் செல்கிறது. இவ்வாறான காற்றின் சலனம் காற்றின் ஓட்டம் என ஆழைக் கப்படுகிறது. காற்றின் அழுத்தம் குறைவது மூலம் அங்கு காற்றழுத்தமும் குறைகிறது. அழுத்தம் கூடிய இடத்திலிருந்து அழுத்தம் குறைந்த இடத்திற்குக் காற்று செல்கிறது. காற்றின் இந்த அசைவையே வீசும் காற்று (Wind) என்கிறோம்.

நமக்கு இனிமையைத் தரும் தென்றல் காற்று முதல் அழிவைக் கொடுக்கும் புயல்காற்று வரை பூமியில் வீசுவதுண்டு.



படம் 12. 3
பாராமானி

### காற்றாலை இயந்திரம்

வேகமாகவும் தொடர்ந்தும் காற்று வீசுகின்ற பகுதிகளில் காற்றாலைகளை வைத்து மின்சாரம் தயாரிக்கலாம். இந்த இயற்கையான ஆற்றலின் உறைவிடத்தை எவ்வளவு பயன்படுத்த முடியுமோ அவ்வளவிற்குப் பயன்படுத்தினால் அதிகரித்து வரும் மின்பற்றாக்குறைக்கு ஒரு முடிவு கிடைக்கும். இடுக்கி மாவட்டத்தில் ராமக்கல்மேடு, பாலக்காடு மாவட்டத்தில் கஞ்சிக்கோடு போன்ற இடங்களில் காற்றாலை அமைக்கப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகின்றது.





காற்றின் வேகத்தை அளக்கப் பயன் படும் கருவியே அனிமோ மீட்டர் (படம் 12.4) காற்றின் திசையை அறியப் பயன் படுத்தும் கருவி வின்ட்வெய்ன் (படம் 12.5) ஆகும்



படம் 12. 5
வின்ட்வெய்ன்

படம் 12.4
அனிமோ மீட்டர்

## வெப்பமும் வளிமண்டலத் தண்ணீரும்



படம் 12.6

படம் 12.6 கவனிக்கவும். தண்ணீர் வெப்பம் அடையும்போது நீராவியாக உயர்ந்து செல்வதைக் காண்கிறீர்களல்லவா? இதுபோன்று பூமியின் மேற்பரப்பிலுள்ள தண்ணீரும் வெப்பமடைந்து நீராவியாக வளிமண்டலத்தைச் சென்றடைகிறது.

வளிமண்டலக் காற்றில் அடங்கியுள்ள தண்ணீரை ஈரப்பதம் (Humidity) என்கிறோம். வாயுமண்டல வெப்பம், பூமியிலுள்ள தண்ணீரின் அளவு போன்றவை ஒரு பகுதியிலுள்ள ஈரப்பதத்தைக் கட்டுப்ப டுத்துகிறது.

ஈரப்பதத்தை அளப்பதற்கு ஈரப்பதமானி (Hygrometer) என்ற கருவியைப் பயன்படுத்துகிறோம். (படம் 12.7) நீராவியாக வாயு மண்டலத்தை அடைகின்ற தண்ணீருக்கு பின்னர் என்ன நிகழ்கிறது எனக் காண்போம்.




படம் 12. 7
ஈரப்பதமானி



ஒரு தம்ளர் நிறைய ஐஸ் கட்டிகளை எடுக்கவும். தம்ள ரின் மேற்பகுதியில் சில தண் ணீர் துளிகள் வருவதைக் கண்டீர் களல்லவா? தம்ளர் அதிகமாகக் குளிர்ச்சியடையும் போது இந்தத் துளிகள் பெரிதாகவும், அது வழிந்து இறங்கவும் செய் கிறது. இந்தத் தண்ணீர்த் துளிகள் எங்கிருந்து வந்தன?

படம் 12.8

வளிமண்டலக் காற்றில் அடங்கியுள்ள நீராவி தம்ளரின் குளிர்ந்த பகுதியில் பட்டுக் குளிர்ச்சியடையும் போது அது தண்ணீர்த் துளிகளாக மாறுகின்றது. நீராவி குளிர்ந்து தண்ணீராக மாறுகின்ற இந்தச் செயலை உறைதல் (Condensation) என்று கூறுகின்றோம். பூமியிலிருந்து வளி மண்டலத்தை அடைகின்ற நீராவி உறைந்து சிறிய தண்ணீர் துளிகளாக மாறுகின்றது. வளி மண்டல வெப்பம் குறையும்போது உறைதல் செயல் மிக வேகமாக நடக்கின்றது. வளி மண்டலத்தில் அடங்கியுள்ள சிறிய தூசுப்படலங்களை (Aerosoles) மையமாக்கி நீராவி உறைகிறது. அங்குத் தண்ணீர் துளிகளாகத் தங்கி நிற்கவும் செய்கின்றது. இவ்வாறே மேகங்கள் (Clouds) உருவாகின்றன.



வானத்தை உற்றுநோக்கிப் பலவடிவிலுள்ள மேகங் களைக் கண்டறியவும்.

வளிமண்டலத்திலுள்ள நீராவி திடநிலை அடைவதன் மூலம் மேகங்கள் உருவாகுவது போன்று மூடுபனி, உறைபனி போன்றவையும் உருவாகின்றன.



படம் 12.10
மூடுபனி

பள்ளத்தாக்குகளிலும் நீர்த் தடங்களிலும் புகை போன்ற சிறிய தண்ணீர் துளிகள் தங்கியிருப்பதைப் பார்த்திருப்பீர்களல்லவா? உறைதலின் இந்த நிலை யை மூடுபனி (Fog) என்று கூறுகிறோம். (படம் 12.10)

குளிருள்ள காலை நேரங்களில் புற்களிலும் குளிர்ந்த பரப்புகளிலும் தண்ணீர்த் துளிகள் உறைந்து இருப்பதை நீங்கள் பார்த்திருப்பீர்களல்லவா? இதனையே உறைபனி (Dew) என்கிறோம். (படம் 12.11)



படம் 12.11
உறை பனி

ஐஸ் கட்டிகள் இடப்பட்ட தம்ளரின் மேற்பரப்பில் தண்ணீர் துளிகளின் அளவு பெரிதாவதும் பின்னர்க் கீழாக இறங்குவதையும் கவனித்தீர்களல்லவா? கூடுதல் உறைதல் அடைவதன் வழி தண்ணீர் துளிகளின் அளவும் எடையும் கூடுகின்றன. இதனால் பூமியின் புவியீர்ப்புத்தன்மை கூடி அவை கீழாகச் செல்கின்றன. இதுபோன்று மேகங்களில் உள்ள தண்ணீர் துளிகளின் அளவு கூடும்போது அது வளி மண்டலத்தில் தங்காமல் பூமிக்குச் செல்கிறது. இந்தச் செயலை பொழிதல் (Precipitation) என்று கூறுகிறோம். வளிமண்டல வெப்பத்தில் ஏற்படும் மாற்றங்கள் பொழிதலிற்குப் பல வடிவம் கொடுக்கிறது. (படம் 12.12)

**பொழிதல்**

| **மழை** | **பனி விழுதல்** | **ஆலங்கட்டி** |
|---|---|---|
| தண்ணீர்த் துளிகளின் வடிவிலுள்ள பொழிதல் | சிறிய பனித்துளிகளின் வடிவிலுள்ள பொழிதல் | பனிக்கட்டிகளின் வடிவிலுள்ள பொழிதல் |





படம் 12.12 பொழிதலின் பல வடிவங்கள்

மழையை அளவிட பயன்படும் கருவியே மழைமானி (Rain Guage). (படம்12.13) சென்டிமீட்டர், இஞ்ச் என்ற அலகுகள் வழியாக மழை அளக்கப்படுகிறது.

அழுத்த வேறுபாடு, காற்று, ஈரப்பதம், உறைநிலை, பொழிதல் துவங்கிய வளிமண்டல மாற்றங்களுக்கெல்லாம் காரணமாவது சூரிய ஆற்றலின் ஏற்றத்தாழ்வே என அறிந்துகொண்டீர்களல்லவா?



(படம்12.13)
மழை மானி

## காலநிலையும் தட்பவெப்பநிலையும்

ஒரு குறிப்பிட்ட நேரத்தில் ஒரு குறிப்பிட்டப் பகுதியில் தோன்றுகின்ற வளிமண்டல மாற்றத்தைக் காலநிலை (Weather) என்கிறோம். நீண்டநாளாக ஒரு பகுதியில் காணப்படும் காலநிலையின் சராசரியே தட்பவெப்பநிலை (Climate) எனப்படுகிறது.

பூமியில் மனிதனின் சில செயல்களே தட்பவெப்பநிலையை எதிர்மறையாகப் பாதிக்கின்றன. நிலக்கரி, பெட்ரோலியம் போன்ற தாதுப்பொருட்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவது மூலம் வளி மண்டலத்தில் அதிகரிக்கின்ற கார்பன் டை ஆக்சைடு, கார்பன் மோணோக்சைடு போன்ற வாயுக்கள் வளிமண்டலத்தில் சராசரி வெப்பம் கூடுவதற்குக் காரணமாகின்றன என ஆய்வுகள்

தெளிவுபடுத்தி உள்ளன. தாது எரிபொருளுக்குப் பதிலாகச் சூரிய ஆற்றல் மற்றும் காற்றிலிருந்து எடுக்கப்படும் ஆற்றல் போன்ற இயற்கையான ஆற்றல்களின் உறைவிடங்களைப் பயன் படுத்துதல் இதற்கு ஒரு தீர்வு ஆகிறது.

வளி மண்டல வெப்பம் கூடுவதற்குக் காரணமாகின்ற வாயுக்களின் உறைவிடங்களைக் குறிப்பிடும் படங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. (படம் 12.14)

இதுபோன்ற படங்களைத் திரட்டி சுவர் பத்திரிகை தயாராக்கலாமல்லவா? தட்பவெப்பநிலை



படம் 12.14

மாற்றத்திற்குக் காரணமாகின்ற பலவித மனித செயல்பாடுகளைக் குறித்துச் செய்தித்தாள் களிலிருந்து விவரங்களைச் சேகரித்துக் கருத்தரங்கம் நடத்துவதற்கான குறிப்பு தயாராக்கி வகுப்பில் வெளியிடவும்.

தட்ப வெப்பநிலையில் ஏற்படும் மாற்றங்கள் கூடப் பூமியிலுள்ள உயிரினங்களின் வாழ்விற்குப் பிரச்சினையாகிறது. இதன் காரணமாகப் பல உயிரினங்களின் பரம்பரையே அழிந்துகொண்டு இருப்பதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். மனித குலத்திற்கும் இந்நிலை ஏற்படாமல் இருக்க வளிமண்டலத்தின் மிருதுவான பகுதியைக் காக்க வேண்டியது ஒவ்வொரு மனிதனுடையக் கடமையாகும்.



## தொகுப்பு

- நம்முடைய முக்கிய ஆற்றலின் உறைவிடமான சூரியனிடமிருந்து கதிர்களாகப் பூமியில் விழுகின்ற சூரிய ஆற்றல் பூமியின் மேற்பரப்பை வெப்பப்படுத்துகிறது.
- வெப்பமடைந்த பூமியின் மேற்பரப்பிலிருந்து பலவித செயல்களின் வழி வளி மண்டலத்தின் வெப்பம் விரிவடைகிறது.
- வளிமண்டல வெப்பம் எல்லாயிடங்களிலும் ஒரேபோல் காணப்படுவதில்லை.
- வளிமண்டல வெப்பத்தில் ஏற்படும் ஏற்றத்தாழ்வே அழுத்த வேறுபாடு எனப்படுகிறது. காற்று, ஈரப்பதம் மேகமூட்டம், பொழிதல் போன்றவை காலநிலை மாற்றத்திற்குக் காரணமாகின்றன.
- காலநிலையின் சராசரியே தட்பவெப்பநிலை.
- சில மனிதச் செயல்பாடுகளே தட்பவெப்பநிலையை எதிர்மறையாகப் பாதிக்கின்றன..

## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- சூரியனே பூமியின் முக்கிய ஆற்றலின் உறைவிடம் என்று புரிந்துகொள்கின்றனர்.
- வளிமண்டல வெப்பநிலையின் ஏற்றத்தாழ்வுக்கான காரணங்களைப் புரிந்துகொள்கின்றனர்.
- வெப்ப வேறுபாடுகள், வேறு வளிமண்டல மாற்றங்களுக்கு எவ்வாறு காரணமாகிறது என அறிந்துகொள்கின்றனர்.
- வெப்பம், அழுத்தம், வாயுவின் சலனம் போன்றவைகளின் பரஸ்பரத் தொடர்பைப்புரிந்து கொள்கின்றனர்.
- வாயு மண்டலத்தில் நீர்ப்படலம் இருக்கிறது எனப் புரிந்துகொள்ளவும் உறைதல் செயல் பாட்டைப் புரிந்துகொள்ளவும் எளிய சோதனைகள் செய்கின்றனர்
- காலநிலையின் மற்றும் தட்பவெட்ப நிலையின் வேறுபாட்டை அறிந்து கொள்கின்றனர்.
- வளிமண்டலத்தின் லேசான பகுதியின் தேவையை உணர்ந்துகொண்டு சுற்றுச்சூழல் பாது காப்புச் செயல்பாடுகளில் ஈடுபடுகின்றனர்..

## மதிப்பிடலாம்

1. சூரிய ஒளி தினமும் பூமியில் வந்தடைந்தாலும் பூமியின் மேற்பரப்பிலுள்ள வெப்பம் அதிகமாக உயர்வு அடைவதில்லை. இதற்குக் காரணம் என்ன?
2. மேகமூட்டமுள்ள நாட்களில் சூடு கூடுவதன் காரணமென்ன?
3. கீழே கொடுக்கப்பட்டுள்ள வளி மண்டல மாற்றங்களுக்கு வெப்பத்துடன் உள்ள தொடர்பு என்ன?
   - காற்று
   - ஈரப்பதம்
4. வளிமண்டல வெப்பநிலை உயர்வதற்குக் காரணமான மனிதச் செயல்பாடுகளுக்கு எடுத்துக்காட்டு கண்டுபிடிக்கவும்.

## தொடர் செயல்பாடுகள்

- சமூக அறிவியல் ஆய்வுக் கூடத்திலுள்ள வெப்பமானியைப் பயன்படுத்தித் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரத்தின் வெப்பத்தை அளவிட்டு அட்டவணைப்படுத்தவும்.
- வெப்பமானி, பாராமானி என்பனவற்றைப் பயன்படுத்தி வெவ்வேறான நேரங்களில் உள்ள வெப்பத்தையும் அழுத்தத்தையும் அளந்து அட்டவணைப்படுத்தவும். அட்ட வணையைப் பகுத்தாய்ந்து வெப்பத்திற்கும் அழுத்தத்திற்கும் இடையே உள்ள தொடர்பைக் கண்டுபிடிக்கவும்.
- சமூக அறிவியல் ஆசிரியரின் உதவியோடு ஒரு மழைமானி தயாரிக்கவும். இனிவரும் மழைக் காலத்தில் அதனைப் பயன்படுத்தி ஒரு நாள் பெய்கின்ற மழையின் அளவைக் கணக்கிடவும்.
- கல்விச் சுற்றலாவின் போது காலநிலை ஆய்வு நிலையத்திற்குச் சென்று அங்குள்ள கருவிகளையும் அவற்றின் செயல்முறையையும் புரிந்துகொள்ளவும்.



# 13 இந்தியாவின் உள்ளே...

வருடத்தின் பெரும்பாலான காலமும் அடர்த்தியாகப் பனி உறைந்து காணப்படும் மலைத்தொடர்கள், பெரும் நதிகள், பகல் நேரம் 50° செல்ஸியஸிற்கும் கூடுதலான வெப்பமுள்ள பாலைவனம், உலகிலேயே அதிகமான மழை பெய்கின்ற இடம் என இயற்கை அமைப்பிலும் காலநிலையிலும் மட்டுமல்லாமல் வேளாண்மையிலும் பல வேறுபாடுகள் உள்ளன. கோதுமையும் சோளமும் கரும்பும் விளைகின்ற பரந்த சமவெளிகளும், ஏலம், நல்லமிளகு போன்ற நறுமணப்பொருட்கள் விளைகின்ற மலைச்சரிவுகளும், தென்னையும் நெல்லும் விளைகின்ற நீண்ட கடற்கரைப் பகுதிகளும் உள்ளன. நாட்டின் இந்தப் பல்வகைப்பட்ட சூழல்களுக்கேற்ப வாழ்க்கைமுறையைத் திட்டமிடப்பட்ட வித்தியாசமான மனிதர்கள் அவர்களுக்கு இடையே உள்ள வேறுபட்ட மத நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள், கொண்டாட்டங்கள், மொழி, உணவு, உடை, இருப்பிடம் என்பனவற்றிலும் பல்வகைப்பட்ட நிலை உண்டு. இவை அனைத்தும் சேர்ந்ததே இந்தியா.

இந்தியாவின் இயற்கை அமைப்பு, நதிகள், காலநிலை, மண், தாவரங்கள் மற்றும் உயிரினங்கள் என்பனவற்றின் பலவகைப்பட்ட தன்மையைப் பற்றி இவ்வலகு எடுத்துரைக்கிறது.

பூமத்தியரேகைக்கு வடக்கு வட அட்சரேகை 8°4′ முதல் 37°6 வரை கிழக்கு தீர்க்கரேகை 68°7முதல் 97°25′ வரையுள்ள பகுதியே இந்தியாவின் அமைவிடம். 3.28 மில்லியன் சதுர கிலோமீட்டர் பரப்புள்ள இந்தியா உலக நாடுகளின் பரப்பளவில் ஏழாம் இடத்தில் இருக்கின்றது.



## இமயத்தின் மடியில்



படத்தைப் பார்த்தீர்களல்லவா? இந்த வீடு ஜம்மு காஷ்மீரின் உள்பகுதியிலுள்ள ஒரு கிராமத்தில் உள்ளதாகும். சுற்றுப்புறத்தில் கிடைக்கின்ற பொருட்களைப் பயன்படுத்தி உருவாக்கிய இந்த வீடு அமைந்துள்ள பகுதி பனிமூடிய இமயமலையின் பள்ளத்தாக்குப் பகுதியாகும்.

இந்தியாவின் வடமேற்கில் ஜம்மு காஷ்மீர் முதல் வட கிழக்கில் அருணாசல பிரதேசம் வரை நீண்டு கிடக்கின்ற இந்த மலைத் தொடருக்கு சுமார் 2400 கி.மீ நீளம் உண்டு. ஜம்மு காஷ்மீர், இமாச்சல பிரதேசம், உத்தரகாண்ட், சிக்கிம், அருணாச்சல பிரதேசம், நாகாலாந்து, மணிப்பூர், மேகாலயா, மிசோராம், திரிபுரா போன்ற மாநிலங்களின் அதிகமான பகுதிகளும் இந்த மலைத்தொடரைச் சார்ந்தவை ஆகும். வடக்கு மலைப்பகுதி என்று பொதுவாக இந்த இயற்கை அமைப்புப் பகுதி அறியப்படுகிறது.

இமயமலையின் மிக உயரம் கூடிய பகுதிகள் வருடம் முழுவதும் பனிமூடிக் காணப்படும். இங்கு நிலையான மனித வாழ்க்கை காணப்படுவதில்லை. உயரம் கூடிய மலைப்பகுதியான கஞ்சன்ஜங்கா, நந்தாதேவி மலைப்பகுதியும் இந்த இமயமலையில் தான் உள்ளது. எவரெஸ்ட் சிகரம் இமயமலைத் தொடரில் மிகவும் உயரம் கூடிய மலைப்பகுதி யாகும். இது நேப்பாளத்தில் உள்ளது. சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற நதிகள் இமயமலைத் தொடரிலிருந்து உற்பத்தியாகின்றன.



எவரெஸ்ட் சிகரம்

இமய மலையின் பனிமூடிய மலைத்தொடர்களுக்கு அருகாமையிலுள்ள தெற்குப் பகுதியில் குளிரின் தாக்கம் குறைவாகத் தான் காணப்படும். இயற்கை அழகு நிறைந்த இந்த பகுதியில் சிம்லா,

டார்ஜலிங், குளு, மணாலி போன்ற பல கோடை வாழிடங்கள் காணப்படுகின்றன.

உருளைக்கிழங்கு, பார்லி, குங்குமப்பூ, பலவித பூக்கள் போன்றவை இங்குள்ள முக்கிய விளை பொருட்களாகும்.

ஆப்பிள், ஆரஞ்சு போன்ற பழவகைகளும் தேயிலையும் இந்தப் பகுதியில் பயிரிடும் தோட்டப் பயிர்களாகும்.


இமாச்சலப் பிரதேசத்தில் உள்ள ஆப்பிள் தோட்டம்

இமாலயத் தொடர்களில் தெற்கு எல்லையில் காணப்படும் குன்றுகளுக்கு உயரம் குறைவாகும். அந்தப் பகுதியில் பலவகையான விளைபொருட்களைப் பயிர் செய்கின்றனர். வடக்கு மலைத் தொடர்பகுதியில் இது மக்கள் வசிப்பிடம் நிறைந்த பகுதியாகும். பனிமுடிய இமாலயத் தொடர்களிலிருந்து உற்பத்தியாகின்ற நதிகள் அடித்துக் கொண்டு வருகின்ற மணல், சேறு, உருளையான கற்கள் போன்ற கடினமான படிமங்கள் நிறைந்து இருப்பதே இந்தப் பள்ளத்தாக்குப் பகுதி.


ஜம்மு காஷ்மீரில் குங்குமப்பூ வேளாண்மை

**வடக்கு மலைத்தொடர் பகுதியின் முக்கியத்துவம்**

வடக்கு மலைத்தொடர் நமக்கு எவ்வளவு உதவிகரமானது என்று தெரிந்துகொள்ளவேண்டாமா

- தட்பவெப்பநிலையைக் கட்டுப்படுத்துகிறது.

  குளிர் காலத்தில் மத்திய ஆசியாவிலிருந்து வீசுகின்ற குளிர்காற்றை இந்தியாவிற்குக் கடத்திவிடாமல் நம்மைப் பாதுகாக்கிறது. (மண்சூன்) பருவக் காற்றுகளைத் தடுத்து வட இந்தியாவில் தொடர் மழை பெய்யவைப்பதும் வடக்கு மலைத்தொடராகும்.


இந்த மலைத்தொடர்கள் இல்லாமலிருந்தாலோ?

- இயற்கை அரண்

  பழங்காலம் முதலே அயல் நாடுகளிலிருந்து எழும் படையெடுப்புகளைத் தடுத்து ஓர் அளவு வரை நம்மை பாதுகாப்பது இந்த மலைத்தொடர்களாகும்.


- நதிகளின் உற்பத்திப் பகுதி

  சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற நதிகளும் அவற்றின் அதிகமான துணை நதிகளும் உற்பத்தியாவது இந்த மலைத்தொடரில் இருந்தாகும்.

  வடக்கு மலைத்தொடர் பகுதி வேறு எந்தெந்த விதத்தில் பயன்படுகின்றது என்று கண்டுபிடிக்க முயற்சிக்கவும்..

## வடஇந்தியச் சமவெளி

படத்தைக் கவனிக்கவும்



படத்தில் காண்பது வட இந்தியாவிலுள்ள மிகப்பெரிய சமவெளிப்பகுதி ஆகும். இராஜஸ்தான், பஞ்சாப், ஹரியானா, உத்தரபிரதேசம், பீகார், மேற்கு வங்காளத்தின் சில பகுதிகள் சேர்ந்த பகுதியே இச்சமவெளிப் பகுதியாகும். சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற நதிகளும் அவற்றின் துணை நதிகளும் அடித்துக்கொண்டு வரும் வண்டல் மண் படிந்து தான் இச்சமவெளிப்பகுதி உருவானது. வடக்கு பெரும் சமவெளி, சிந்து – கங்கை – பிரம்மபுத்திரா சமவெளி என்ற பெயர்களிலும் இப்பகுதி அழைக்கப்படுகிறது. இந்தியாவிலுள்ள மக்கள் தொகை அதிகமான இடமும் இதுவே.

கோதுமை, சோளம், நெல், கரும்பு, பருத்தி, பயறு வகைகள் எனப் பலவகையான தானியங்கள் இங்கு ஏராளமாகப் பயிர் செய்யப்படுகின்றன.



இப்பகுதியை இந்தியாவின் வேளாண்மைச் செல்வத்தின் முதுகெலும்பு என்றழைக்கின்றனர். இதன் காரணம் என்ன?

பிற இயற்கைப் பிரிவுகளை ஒப்பிடுகையில் இரயில், சாலை, நீர்வழிப் போக்குவரத்து என்பவை ஒன்று சேர்ந்து காணப்படுவது இப்பகுதியில் தான். எதனால்?

இந்த சமவெளியின் மேற்குப் பகுதியில் மழை குறைவாகவே கிடைக்கின்றது. எனவே தான் இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலுள்ள இராஜஸ்தானின் பெரும்பாலான பகுதியும் பாலைவனமாகக் காணப்படுகிறது. பாலை வனமான இப்பகுதியில் மக்கள் வாழ்க்கை மிகக் குறைவு ஆகும். இதற்குக் காரணம் என்ன?

அண்டை மாநிலங்களில் கோதுமை, சோளம் போன்றவற்றை பரவலாகப் பயிரிடும்போது இங்கு ஜோவர், பஜ்ரா போன்ற பயிர்களே அதிகமாக பயிரிடப்படுகிறன்றன. இந்தப் பயிர்களுக்குத் தண்ணீர் குறைந்த அளவு போதும்.

### இராஜஸ்தானிலுள்ள ஒரு காட்சி

இந்தியாவின் வடமேற்கு பகுதியிலுள்ள இராஜஸ்தான் மாநிலத்தின் பெரும் பகுதியும் உள்ளடங்கிய சூடுகூடிய பாலைவனமே தார் பாலைவனம். மழை இல்லாத இப்பகுதியில் முள் செடிகளும் சிறு புதர்காடுகளுமே இங்குள்ள செடிவகைகள். பரந்த மணற்பரப்புகளும் குன்றுகளுமே இங்கு அதிகமாக உள்ளன. சுத்தத் தண்ணீரின் மதிப்பை நன்கு உணர்ந்தவர்கள் இந்நாட்டவர். கேரளத்தில் ஒன்றோ இரண்டோ நாட்கள் பெய்கின்ற மழையே இங்கு ஒரு வருடம் முழுவதும் கிடைக்கும் மழையின் அளவு. இங்குள்ள கிராமத்து மக்கள் குடித் தண்ணீருக்காக பல கிலோமீட்டர் நடக்கவேண்டியுள்ளது.



## பீடபூமி வழியாக . . . .

வடக்கு இமய மலையிலிருந்து தென் இந்தியா விற்கு வரும் வழியில் சமவெளிப் பகுதியை கடந்து வரும்போது மிகப் பெரிய ஒரு பீடபூமிப் பகுதியை வந்தடையலாம். மத்திய பிரதேசம் ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் போன்ற மாநிலங்களும் கர்நாடகம், தமிழ்நாடு, ஆந்திர பிரதேசம், ஒடிஷா, மேற்குவங்காளம் போன்ற மாநிலங்களின் சில பகுதிகளும் உட்படுகின்ற இந்தப் பீடபூமிப் பகுதியைத் தீபகற்ப பீடபூமி என்று கூறுகிறோம். தீபகற்ப பீடபூமியின் ஒரு பகுதியே தக்காணப் பீடபூமி. இந்த பீடபூமியின் முக்கிய பாகங்களும் பண்டைய காலத்தில் வெடித்துச் சிதறிய எரிமலயின் (லாவா) குழம்பு குளிர்ந்து உறைந்து உருவான பகுதியாகும். இது சிதைந்து உருவான கறுத்தமண் பருத்தி வேளாண்மைக்குச் சிறந்ததாகும்.

விந்தியா சத்பூரா, ஆரவல்லி, மேற்குத் தொடர்ச்சிமலை, கிழக்குத் தொடர்ச்சி மலை போன்ற மலைத்தொடர்கள் தீபகற்ப பீடபூமியின் பகுதி களாகும். கேரளத்திலுள்ள ஆனைமுடி இப்பீட பூமியிலுள்ள மிகவும் உயரம் கூடிய பகுதி (2695 மீட்டர்).

பருத்தி, பயறு வகைகள், நிலக்கடலை, கரும்பு, சோளம், கேழ்வரகு, மிளகு என்பவைகளே பீடபூமிப்பகுதியில் பயிரிடப்படும் முக்கிய பயிர்கள். நிலக்கரி, இரும்புத்தாது, மாங்கனீஸ், பாக்ஸைட், சுண்ணாம்புக் கல் போன்ற தாதுப் பொருட்கள் அடங்கியுள்ளன. இந்தப் பீடபூமி சுரங்கத்தொழிலும் தாதுப் பொருட்களோடு தொடர்புடைய தொழில்களும் நிறைந்த முக்கிய தொழில் மண்டலமாகும்.



பீடபூமியின் ஒரு நிலக்கரிச் சுரங்கம்

கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா, காவேரி, நர்மதை, தப்தி போன்ற நதிகள் தீபகற்ப பீடபூமிப் பகுதியிலிருந்து உற்பத்தியாகின்றன.

## கடற்கரைச் சமவெளிகள்

பீடபூமியிலிருந்து உற்பத்தியாகும் நதிகளைத் தொடர்ந்தால் சென்றடைவது கடற்கரைச் சமவெளிகளிலாகும். இந்தியாவின் கடற்கரையின் நீளம் சுமார் 6100 கி.மீட்டர் ஆகும். சமூக அறிவியல் ஆய்வுக் கூடத்திலுள்ள இந்திய இயற்கை அமைப்பு நிலப்படத்தைப் பார்க்கவும். வங்காள விரிகுடாவைச் சேர்ந்த கிழக்குக் கடற்கரைப் பகுதியையும் அரபிக்கடலோடு சேர்ந்து கிடக்கின்ற மேற்கு கடற்கரைப் பகுதியையும் கண்டீர்களல்லவா? கிழக்குக் கடற்கரையைவிட மேற்குக் கடற்கரையின் அகலம் குறைவாகும். இந்தச் சமவெளியின் பகுதியான கேரளக் கடற்கரையில் ஏராளமான காயல்கள் உள்ளன. நெல்லும் தென்னையும் மேற்குக் கடற்கரைப் பகுதியின் முக்கியப் பயிர்களாகும்.

கிழக்குக் கடற்கரைச் சமவெளிப் பகுதியான காவேரி, கிருஷ்ணா, கோதாவரி, மகாநதி கரைகளில் அதிகமான நெல் பயிரிடப்படுகிறது. மீன் பிடித்தல் இங்குள்ள மக்களின் முக்கிய தொழிலாகும்.

## கடலின் பசுமை முனைகள்

கடலால் சூழப்பட்ட சிறுநிலப்பகுதிகளே தீவுகள். அரபிக்கடலில் இலட்சத் தீவுக்கூட்டமும், வங்காள விரிகுடாவில் அந்தமான் நிக்கோபர் தீவுக் கூட்டங்களும் நிலப்படத்தில் பார்த்திருப்பீர்களல்லவா? லட்சத்தீவில் பெரும்பாலானவை பவழத் தீவுகள் ஆகும். வேளாண்மை பெயரளவில் மட்டுமே காணப்படுகிற இலட்சத் தீவில் மக்கள் கடலையே நம்பி வாழுகின்றனர்.

அந்தமான் நிக்கோபர் தீவுகளில் பெரும்பாலும் காணப்படுவது அடர்த்தியான காடுகளாகும்.

### பவளத் தீவுகள்


வெப்ப மண்டல பெருங்கடல்களில் காணப் படும் கோரல் பாளிப்புகள் எனும் சிறு கடல் உயிரினங்களின் எச்சங்கள் ஒன்று சேர்ந்து பவளப் பாறைகள் உருவாகின்றன. பல்வேறு படிவங்களில் காணப்படும் இப்பவளப் பாறைகளின் மீது பவளத் தீவுகள் உருவா கின்றன இந்தியாவிற்குட்பட்ட லட்சத்தீவிலும் அந்தமான் நிக்கோபாரில் சில தீவுகளிலும் இத்தகைய பவளப் பாறைகளைக் காணலாம். சக்திவாய்ந்த அலைகளிலிருந்துஇத்தீவுகளைப் பவளப்பாறைகள் பாதுகாக்கின்றன.



இந்தியாவின் இயற்கை அமைப்பைப் பற்றி இப்போது உங்களுக்குப் போதுமான அறிவு கிடைத்திருக்குமல்லவா? இந்தியாவின் இயற்கை அமைப்புப் பிரிவுகள் கீழே கொடுக்கப் பட்டுள்ளன.

- வடக்கு மலைப்பகுதி
- வடக்குப் பெருஞ்சமவெளி
- தீபகற்ப பீடபூமி
- கடற்கரைச் சமவெளிகளும் தீவுகளும்

கீழே கொடுக்கப்பட்டுள்ள வரைபடத்தில் (படம் 13.1) இயற்கை அமைப்புப் பகுதிகளைக் கண்டறிந்து அடையாளப்படுத்தவும்.




படம் 13.1

## இந்தியாவிலுள்ள நதிகள்

பழங்காலத்தில் இந்தியாவில் மக்கள் வாழ்வதற்கு நதிக்கரைகளையே தேர்ந்தெடுத்தனர்.

இந்தியாவில் வேளாண்மை வளர்ச்சியடைந்தபோது அதனை அடிப்படையாக்கி ஒரு சமூகம் உருவானதற்கும் நதிகள் பெரும் பங்குவகித்துள்ளன.

நதிகளின் பயன்களைப் பற்றி நீங்கள் முந்தைய பாடத்தில் படித்துள்ளீர்கள்.




படத்தில் காண்பது கங்கை நதிக்கரையிலுள்ள வாரணாசியின் ஒரு காட்சியாகும். வாரணாசி நகரம் உருவானதில் இந்த நதியின் தாக்கம் எத்தகையதாக இருந்தது. வகுப்பில் கலந்துரையாடவும்.

சிந்து, கங்கை, பிரம்மபுத்திரா போன்ற நதிகளும் அதன் உபநதிகளுமே வட இந்தியாவின் முக்கிய தண்ணீரின் உறைவிடங்கள். இமயமலையிலிருந்து உற்பத்தியாகும் நதிகளை இமயமலை நதிகள் என்கிறோம். இமயமலையின் பனி மூடிய பகுதியிலிருந்து உற்பத்தியா வதால் இந்த நதிகள் கோடைக்காலத்திலும் தண்ணீர் நிரம்பிக் காணப்படும். இமயமலை நதிகளால் அடித்து கொண்டு வரப்படும் வண்டல் படிவுகளினால் உருவானதே வடக்குப் பெருஞ்சமவெளிப்பகுதிகள். இந்த நதிகள் பாயும் மாநிலங்கள். இவை சென்றடையும் கடல்கள் என்பனவற்றை நிலப்படம் பார்த்துக் கண்டுபிடிக்கவும்.

தீபகற்ப பீடபூமியிலிருந்து உற்பத்தியாகும் நதிகளைத் தீபகற்ப நதிகள் என்கிறோம். கோதாவரி, மகாநதி, கிருஷ்ணா, காவேரி, நர்மதை, தப்தி என்பவை முக்கியத் தீபகற்ப நதிகள் ஆகும். இந்த நதிகள் மழையை நம்பி இருப்பதால் கோடைக்காலங்களில் தண்ணீர் குறைவாகக் காணப்படுகிறது.

நிலப்படத்தை உற்றுநோக்கித் தீபகற்ப நதிகளை அவை சென்றடையும் கடலின் அடிப்படையில் வேறுபடுத்தி எழுதவும்.


| அரபிக்கடலில் கலப்பவை | வங்காளவிரிகுடாவில் கலப்பவை |
|---|---|
| • <br> • | • <br> • |


இந்தியா
நதிகள்
N
250
0
250 Kilometres
சிந்து
லூணி
கங்கை
பிரம்மபுத்திரா
நர்மதை
தப்தி
மகாநதி
கோதாவரி
வங்காளவிரிகுடா
அரபிக்கடல்
கிருஷ்ணா
காவேரி
லட்சத்தீவு
பெரியார்
அந்தமான் நிக்கோபார் தீவுகள்

படம் - 13.2

## இந்தியாவிலுள்ள மண் வகைகள்

மண்ணின் முக்கியத்துவத்தைக் குறித்து முன்னரே படித்ததுண்டல்லவா. இந்தியா ஒரு விவசாய நாடாக இருப்பதற்கு மண்ணின் பங்கு மிகப் பெரியதாகும். பலதரப்பட்ட மண் வகைகள் வேறுபட்ட பயிர்கள் வளர உதவுகின்றன. வரைபடத்தை உற்றுநோக்கி(படம்13.3) முக்கிய மண் வகை களைக் கண்டறியவும்.




படம் 13.3

- வண்டல்மண்
-
-
-
-

வடக்குப் பெருஞ்சமவெளியிலும் நதிக்கரைகளிலும் காணப்படும் வண்டல் மண் மிகவும் வளமிக்க மண். வண்டல் மண் நிறைந்த நம்முடைய நதிக்கரைகள் பண்டைய காலம் முதலே சிறப்பான வேளாண்மைப் பகுதியாகும். தீபகற்ப பீடபூமியில் உள்ள கறுப்பு மண் பருத்தி, கரும்பு போன்ற பயிர் செய்ய ஏற்றதாகும். பீடபூமிப் பகுதியில் காணப்படும் வேறு மண் இனங்கள் செம்மண்ணும் சரளை மண்ணும் ஆகும். இந்த மண் இனங்களுக்கு வளம் குறைவு எனினும் உரம் இடுவது மூலம் வேளாண்மைக்கு ஏற்றதாக மாறுகிறது. இராஜஸ்தான் பாலைவனத்திலுள்ள பாலைவன மண்ணில் தண்ணீரின் அளவு குறைவு எனவே அங்கு வேளாண்மை செய்ய அதிக தண்ணீர் தேவைப்படுகிறது. அடர்ந்த காடுகளைக் கொண்ட மலைப் பிரதேசங்களின் மண் மலை மண்ணாகும். இந்த மண்ணில் உயிரியல் தன்மை அதிகமாகக் காணப்படுகிறது.

## காலநிலை

இந்தியாவில் பல்வேறுபட்ட காலநிலைகள் காணப்படுகின்றன. காஷ்மீரில் கார்கில், திராஸ் என்னும் இடங்களில் குளிர்காலத்தில் வெப்பநிலை $-40^\circ$ செல்ஷியஸ் வரை குறைவதுண்டு.

உலகிலேயே அதிக மழை கிடைக்கும் சிராப்பூஞ்சி இந்தியாவில் தான் உள்ளது. குளிர்காலத்தில் டெல்லி $0^\circ$ செல்ஷியஸில் குளிரில் நடுங்கும்போது கோடைக் காலத்தில் உச்சகட்டத்தில் $40^\circ$ செல்ஷியஸிற்கு மேல் வந்து சுட்டெரிக்கின்றது. இப்படிப்பட்ட வேற்றுமைகள் அனுபவப்பட்ட போதிலும் இந்தியாவின் காலநிலை வெப்பமண்டல பருவகாலம் என்று அழைக்கப்படுகிறது. இந்தியாவில் பொதுவாக மூன்று வேறுபட்டப் பருவகாலங்கள் அனுபவப்படுகின்றன.

- கோடைக்காலம் (Summer Season)
- குளிர்காலம் (Winter Season)
- மழைக்காலம் (Rainy Season)

## கோடைக்காலம்

மார்ச் மாதம் முதல் மே மாதம் வரை உள்ள காலங்க ளில் கோடைக்காலம் அனுப வப்படுகிறது. இக்காலங்க ளில் வடஇந்தியாவில் மிகக் கடுமையான வெப்பம் அனு பவப்படுகிறது. தென் இந்தி யாவின் கடற்கரைப் பகுதி களில் கடலின் அருகாமை யால் அதிக வெப்பம் அனுபவப்படுவதில்லை. இந்தக் காலங்களில் இந்தி யாவில் வறட்சி அனுபவப் படுகிறது. சில இடங்களில் இடையிடையே கோடை மழையும் கிடைப்பதுண்டு.



## வறட்சி என்ற இயற்கைப் பேரழிவு



மழைக் குறைவினாலோ தண்ணீரை அதிகமாகப் பயன் படுத்துவதாலோ ஏற்ப டும் தண்ணீரின் பற்றாக் குறையே வறட்சி. இந்தியா வின் மூன்றிலொரு பாகமும் வறட்சிப் பகுதியாககக் கணக்கிடப்பட்டுள்ளது. பயிர் நஷ்டம், சுத்தநீர் பற்றாக்குறை போன்ற கொடுமைகளுக்குக் காரணமா கின்ற இந்த இயற்கை அழிவின் அளவைக் கட்டுப்படுத்த எனனென்ன செய்யலாம்.

- தண்ணீர் நிறைந்த நதிகளை வறண்ட பகுதிகளிலுள்ள நதிகளோடு இணைக்கலாம்.
- வறட்சியையும் மீறி வளரும் பயிர்களைப் பயிரிடலாம்.
- மழைநீர்ச் சேகரிப்பு முறையை நடைமுறைப்படுத்தலாம்.

## குளிர்காலம்

டிசம்பர் முதல் பிப்ரவரி வரை இந்தியாவில் குளிர் காலம் அனுபவப்படுகிறது. வட இந்தியாவில் கடுமையான குளிர் உள்ள இந்த நேரத்தில் இமய மலைத்தொடர்களில் பனிப்பொழிவு அதிகமாகக் காணப்படும். வடஇந்தியாவில் கடின மான மூடுபனியும் இக்காலத்தின் சிறப்பாகும். பொது வாக வறண்ட காலநிலை உள்ள இந்தக் குளிர் காலத்தில் பஞ்சாபிலும் அதன் அருகிலுள்ள பகுதிகளிலும் மழை கிடைக்கிறது. இது கோதுமை வேளாண்மைக்கு உகந்ததாகும்.



வட இந்தியாவின் ஒரு குளிர்காலக் காட்சி

## மழைக்காலம்

இந்தியாவில் இரண்டு வகை மழைக்காலங்க ளுண்டு. முதலாவது ஜுன் முதல் செப்டம்பர் வரை யிலான காலம். இந்தியப் பெருங்கடலிலிருந்து ஈரப்பதத்தை எடுத்து வருகின்ற காற்று மலைத் தொடர்களால் தடுத்து நிறுத்தப்பட்டு மேற்குக் கடற்கரைப் பகுதியிலும் வடகிழக்கு மாநிலங் களிலும் இமயமலையின் அடிவாரப் பகுதிகளிலும் அதிகமான அளவில் மழை கிடக்கிறது தென் மேற்குப் பருவக் காற்று என்று அழைக்கப்படும் இக்காலத்தில் தான் இந்தியாவில் அதிகமாக மழை கிடைக்கிறது.

சிறு இடைவேளைக்கு பிறகு அக்டோபர் - நவம்பர் மாதங்களில் மீண்டும் மழைகிடைக் கிறது. வடகிழக்குப் பருவகாலம் என்று அழைக்



### மழை ஓயாத சிராப்பூஞ்சி

மேகாலயாவில் காஸி குன்றுகளின் தெற்கு சரிவில் உள்ள கிராமமே சிராப்பூஞ்சி. உலகி லேயே மிக அதிகமாக மழை கிடைக்கின்ற பகுதி என அங்கீகரிக்கப்பட்ட சிராப்பூஞ்சிக்கு சொக்ரா என்ற ஒரு பெயரும் உண்டு.



கப்படும் இக்காலத்தில் மிகக் கூடுதல் மழை கிடைப்பது இந்தியாவின் கிழக்கு கடற்கரைப் பகுதியிலாகும். குறிப்பாகத் தமிழ்நாடு, ஆந்திரா கடற்கரைப் பகுதி மற்றும் கேரளத்திலும் இந்த மழை கிடைக்கிறது.



## வெள்ளப்பெருக்கு ஆபத்தாகும் போது



மழைக்காலத்தில் நாட்டின் பல பகுதிகளிலும் ஏற்படுகின்ற வெள்ளப்பெருக்கு விவசாய நிலங்களுக்கும் வாழ்விடங்களுக்கும் ஆபத்தா கிறது. பருவ காலத்தின் பெருமழை, நதியின் பாதைகளில் கட்டிடங்கள் கட்டுதலும் வயல்களை மண் இட்டு நிரப்புவதும் வெள்ளப்பெருக்கு ஏற்படுவதற்குக் காரணமாகின்றன. உயிருக்கும் வாழிடத்திற்கும் மிகுந்த ஆபத்தை உண்டாக்குகின்ற இந்த இயற்கை அழிவை தடுப்பதற்கும் ஆபத்தின் கடுமையைக் குறைப்பதற்கும் கையாளக்கூடிய நடவடிக்கைகள்.

- அணைகள் கட்டுவது
- காடு வளர்த்தல்
- நதிகளின் போக்கைத் தடைசெய்யும் வகையில் பெரிய கட்டிடங்கள் கட்டுவதைத் தவிர்த்தல்
- வெள்ளப்பெருக்கு ஏற்படும் பகுதியிலிருந்து மக்களை வேறு இடத்திற்கு மாற்றுதல்
- கடற்கரைப் பகுதியில் அபாய முன்னறிவிப்பு மையங்கள் ஏற்படுத்துதல்


## இயற்கைத் தாவரங்களும் பல்வகை உயிரினங்களும்

பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள காஷ்மீர் கிராமத்திலுள்ள வீட்டின் சுற்றுப்புறத்தில் காண்கின்ற மரங்களின் தனித்தன்மையைக் கவனித்தீர்களல்லவா? நீண்ட கூம்பு வடிவு மரங்களாகும் இவை. நம் பகுதியிலுள்ள மரங்களின் வடிவத்தையும் படத்தில் காணும் மரங்களின் வடிவத்தையும் ஒப்பிடவும்.

ஓர் இடத்தின் இயற்கை அமைப்பு, காலநிலை, மண் வகை போன்ற இயற்கைச் சிறப்புகளுக்கேற்ப அங்கு வளருகின்ற சாதாரணத் தாவரங்களே இயற்கைத் தாவரங்கள். காலநிலைக்கு ஏற்றவாறு உயிரினங்களிலும் பலவகைகள் காணப்படுகின்றன.

இந்தியாவிலுள்ள பலவித இயற்கைத் தாவர மற்றும் உயிரினங்களை நாம் அறிந்துகொள்வோம்.

**வெப்ப மண்டல பசுமை மாறாக் காடுகள்**



வருடாந்தர மழையளவு மிகவும் கூடுதலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையிலும் வடகிழக்கு மாநிலங்களிலும் பசுமை மாறாக் காடுகள் காணப்படுகின்றன. சிங்கவால் குரங்கு, பலவிதமான பாம்புகள், பலவிதமான ஆறுகால் பூச்சிகள் அட்லஸ் மோத் போன்ற பலவகையான வண்ணத்துப் பூச்சிகள் போன்றவை இக்காடுகளில் காணப்படுகின்றன.

### இலை உதிர் காடுகள்

பருவ காலத்தில் மட்டும் மழை பெறும் பகுதிகளில் இலைஉதிர் காடுகள் காணப்படுகின்றன. தீபகற்ப இந்தியாவில் அதிகமாகக் காணப்படுவது இலையுதிர் காடுகளே ஆகும். பல வகை மான்கள், முயல், மயில், வேழாம்பல் மற்றும் பலவிதமான பறவைகள், காட்டெருமை, யானை, சிறுத்தை, புலி போன்ற வேறு பட்ட உயிரினங்கள் அதிகமாக இக்காடுகளில் காணப்படுகின்றன.



### முள்செடிகளும் புதர்ச்செடிகளும்



இராஜஸ்தான் பாலைவனத்திலும் தீபகற்பத்தின் நடுப்பகுதி களிலும் மழை குறைவாக இருப்பதால் முள் செடிகளும் புதர்ச் செடிகளும் வளருகின்றன. ஒட்டகம், பருந்து, பலவித ஊர்வன வும் இவ்வறண்ட பகுதிகளில் வாழ்கின்றன

### சதுப்புநிலக் காடுகள்

உப்புச் சுவையுள்ள மண்ணில் வளர்கின்ற தனித்தன்மையுள்ள தாவரங்களே சதுப்புநிலக் காடுகள். நதிக்கரையிலும் கடற்கரையிலும் மண் அரித்தலை தடுப்பது இந்தச் சதுப்புநிலக் காடுகளாகும். மேற்கு வங்காளத்தின் சதுப்புநிலக் காடுகள் வங்காளத்திலுள்ள புலிகளின் வாழிடமாகும். சதுப்புநிலக் காடுகளின் வேர் அடுக்குகள் பலவிதமான மீன் இனங்களின் இனப்பெருக்க இடமாகக் காணப்படுகின்றன.



### மலைக்காடுகள்



உயரம் கூடிய பகுதிகளில் காணப்படும் கூம்பு வடிவிலான மரங் களும் பெருங்குளிருள்ள மலைத்தொடர்களில் காணப்படும் பாசி வகைகளும் இம்மலைக் காடுகளில் உள்ளவையாகும். கஸ்தூரி மான், வரையாடு, பனிப்புலி போன்ற அபூர்வ உயிரினங்களும் இங்குக் காணப்படுகின்றன. மேற்குத் தொடர்ச்சி மலையின் உயர்ந்த பகுதிகளிலும் வரையாடுகள் காணப் படுகின்றன.

இயற்கை அமைப்பு, காலநிலை, மண் வகை, தாவர, உயிரினங்கள் போன்றவை பிற நாடுகளிலிருந்து மிகவும் வித்தியாசமானதும் வேறுபட்டதுமான ஒரு நாடே இந்தியா என்று புரிந்துகொண்டீர்களல்லவா? இயற்கைத் தனித்தன்மைகளின் இந்த வேறுபாடு தான் இந்தியாவின் கலாச்சார வேறுபாடுகளுக்கும் காரணமாகின்றது. வேற்றுமைகள் அதிகமாக இருப்பினும் இந்தியா ஒரு ஒற்றுமை நிறைந்த நாடாக இருக்கிறது. நம்மை ஒன்று சேர்க்கக் கூடிய ஓர் உணர்வு நாமெல்லாம் இந்தியர் என்ற அறிவேயாகும்.



## தொகுப்பு

- ஆசியா கண்டத்தில் அமைந்துள்ள இந்தியா இயற்கை அமைப்பிலும் காலநிலையிலும் பல வேறுபாடுகள் கொண்டுள்ளது.
- இயற்கை அமைப்பு, காலநிலை, நதிகள், மண் வகை போன்ற வேறுபாடுகள் இந்தியாவின் வேளாண் வேறுபாட்டிற்கு அடிப்படையாகும்.
- இந்தியாவின் இயற்கை வேற்றுமைகள் மனித வாழ்க்கையில் தாக்கம் செலுத்துகின்றன.
- இநதியாவின் கலாச்சார வேற்றுமைகளுக்குக் காரணம் அதன் இயற்கை அமைப்பின் தனித்தன்மைகள் ஆகும்.



## முக்கியக் கற்றல் அடைவுகளில் உட்பட்டவை

- இந்தியாவின் அமைவிடம், பரப்பளவு, போன்றவற்றைப் பற்றிப் புரிந்துகொள்கின்றனர்.
- வேற்றுமைகள் நிறைந்த இந்தியாவின் இயற்கை அமைப்புப் பரிவுகளைப் புரிந்து கொள்கின்றனர்.
- இந்திய நதிகளை வகைப்படுத்துகின்றனர்.
- காலநிலையிலும் இயற்கை அமைப்பிலும் உள்ள வேற்றுமைகள், மண் வகைகளிலும் தாவரம் மற்றும் உயிரிளங்களிலும் ஏற்படுத்தும் மாற்றங்களைப்பகுப்பாய்வு செய்கின்றனர்



## மதிப்பிடலாம்

1. இயற்கை அமைப்புப் பிரிவுகள் வேறுபட்ட முறைகளில் இந்தியாவின் மக்கள் வாழ்க்கை யில் ஆதிக்கம் செலுத்துகின்றன. எடுத்துக்காட்டுடன் விளக்குக.
2. கேரளக் கடற்கரை இந்தியாவின் எந்தக் கடலோரச் சமவெளிப்பகுதியில் உட்படும்? இந்தக் கடற்கரைச் சமவெளியின் பொதுவான தனித்தன்மைகள் எவை?
3. தீபகற்ப பீடபூமியின் எவையேனும் இரண்டு தனித்தன்மைகளை எழுதவும்?



## தொடர் செயல்பாடுகள்

- இந்தியாவின் பலவித இடங்களுக்குச் சென்ற பயணங்களின் விவரங்கள் நூல் வடிவில் கிடைக்கின்றன. அத்தகைய பயணக் குறிப்புகளை வாசிக்கவும்.
- பெரியவர்களுடன் பயணம் செய்யும்போது கவனத்தில் வந்த குறிப்புகளை வரிசையாகக் குறித்து வைக்கும் முறையைக் கடைப்பிடிக்கவும்.
- இயற்கை அமைப்பின் தனித்தன்மைகள், வேளாண் முறைகள், இயற்கைத் தாவர மற்றும் உயிரினங்கள் போன்றனவற்றை உட்படுத்தி இந்தியாவின் வேறுபாடுகள் என்ற தலைப்பில் ஒரு டிஜிட்டல் ஆல்பம் தயாராக்கவும்.
- பல்வேறுபட்ட குறிப்புகள் அடையாளப்படுத்தப்பட்டுள்ள இந்திய நிலப்படங்களைப் பாடநூல்களிலிருந்தும் வேறு நூல்களிலிருந்தும் ட்ரேசிங் பேப்பரைப் பயன்படுத்தி வரைந்து இந்திய நிலப்படத்தின் நிலப்படத் தொகுப்பை உருவாக்கவும்.